November 2018

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு



## தீபாவளி மலர்

# VARSHA™

Ready to Cook

Made with Quality Natural Products

**Idli / Dosa Wet Mix** • இட்லி / தோசை மாவு

ఇడ్లీ దోస పిండి • ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು

ഇഡ്ഡലി / ദോശ മാവ്



CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI



100% Pure Vegetarian

ઈડલી ડોસા નું ખીરું

इडली/ दोसा आटा

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

**November 2018** சுவடி—8 ஓலை— 9


## உள்ளே...




## வணக்கம் பல

ஒரு தனி மனிதன் எடுக்கும் சில முடிவுகள், சமயத்தில் பூகம்பத்துக்கு இணையான அழிவினை ஏற்படுத்தி, உலக வரலாற்றில் பெரும் வீழ்ச்சியை ஏற்படுத்தி விடும் என்பதை உலக வரலாற்றின் பக்கங்கள் பலவற்றில் பார்க்க முடிகிறது.

ஜெர்மனியில் நாடு பிடிக்கும் ஆசையுடன் புறப்பட்ட ஒரு தனிமனிதனின் சர்வாதிகாரம், உலகப் போராய் பேருரு எடுத்து பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பலி வாங்கிய சம்பவம், கடந்த நூற்றாண்டில் நிகழ்ந்த மாபெரும் சோகம்! அதற்குச் சற்றும் குறையாத கொடுங்கோல் தன்மையுடன் இலங்கையின் ஜனாதிபதி பதவியில் அமர்ந்த ஒரு இனவெறியாளரின் தனிமனித எதேச்சாதிகாரம், ஈழத்தின் அப்பாவி தமிழ் மக்கள் பல்லாயிரக்கணக்கானோரின் உயிரை காவு கொண்டது.

அந்தத் துயரத்திலிருந்து இன்னமும் உலக தமிழ்ச் சமூகம் மீண்டு வராத நிலையில், மீண்டும் அதே இனவெறியாளரை உயர் பதவியில் அமர்த்த துடிக்கிறார் இலங்கையின் தற்போதைய அதிபர். தனது கரங்களிலும் ரத்தக் கறை படிவதுதான் அப்பதவிக்கு அழகு என்று அவர் நினைப்பாராயின், இது போன்ற மனிதர்கள், ஆளத் தகுதியற்றவர்கள் மட்டுமல்ல, மனிதராகவே வாழத் தகுதியற்றவர்கள். அதை உலகச் சமாதானத்தை விரும்புவதாகப் பாவனை செய்யும் அமைப்புகள் உரக்க குரல் கொடுத்து சர்வாதிகாரத்தைத் தடுக்க வேண்டும்! ஒடுக்க வேண்டும்!

ஈழத்தில் மட்டுமல்ல, இலங்கையின் பிற பகுதிகளிலும் கூட இனி ஒரு சொட்டு ரத்தம், ஆயுத கிளர்ச்சியினால் தெறிக்கக் கூடாது என்பதை ஐ.நா தனது சாசனமாகவே பொறிக்க வேண்டும் என்பதே தமிழரின் கனவு! இன்று பூமியின் எங்கோ ஒரு தீவில் நடக்கும் இக்கொடுமை உலகப் பந்தின் எல்லா நாடுகளிலும் அதற்குத்தக்க வகையில் வடிவம் கொண்டு நடந்தேறும் என்ற எச்சரிக்கை மணிதான் இலங்கையில் ஒலிக்கிறது என்பதாகவே தற்போதைய போக்கைக் கருத்தில் கொள்ள வேண்டும்!

பிறக்கவிருக்கும் தீபத்திருநாள் நமது அறியாமை இருள் நீக்கி, இனவெறியை போக்கி, அமைதியும் சமாதானமும் வரும்படியான ஒளி வீசட்டும்!

அனைவருக்கும் அன்பான தீபத்திருநாள் நல்வாழ்த்துக்கள்!

நேசப்பகிர்தலுடன்

**ஆசிரியர் குழு**


**IThamil Monthly Magazine**

**Chief Editor & Publisher**
Sivanesan

**Editor**
Khottravan

**Editorial Team**
Ganesan
Navani
Shanthakumar

**Art Editor**
Sriram

**Art & Marketing Director**
Jaya

**Printers**
Kanagam Pathippagam

**Contact us:**
*editor@ithamil.com*



*இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது

தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு

அறம்பாட யாரோ?

மீண்டும் வேண்டும்
மகாத்மா

உச்சநீதிமன்றத்திற்கு

தலைக்காவிரி தேடி

திரைப்பட கலைஞரின் கனவு

அன்புடன் லண்டன்

மங்காத தமிழென்று சங்கே
முழங்கு!

காப்போம்
மூலிகைப் பொக்கிஷம்



# உள்ளே...


தமிழர் பெருமை

உடலுழைக்கா தலைமுறை

எல்லையில்லா ஆபத்துக்கள்

கவிதைகள்

சிறுகதைகள்

சினிமா
பாலிவுட், கோலிவுட், டோலிவுட், மாலிவுட்







# அறம்பாட

இலங்கை அரசியலில் நிகழும் மாற்றங்கள் உலக ஊடகங்களுக்கு பரபரப்பு தரும் செய்திகளாகவே இருக்கிறது. திடீரென அந்நாட்டு அரசியலில் கிளர்ந்தெழுந்துள்ள புயல், மக்களை அமைதி கொள்ள விடாமல் அலைகழிக்கப் போகிறது என்பது திண்ணம்!

இதையே, 'இலங்கை அரசியலின் பெரும் நெருக்கடி உடனடியாக அரசியல் சட்ட ரீதியாகத் தீர்க்கப்படவில்லையெனில் நிச்சயம் தெருக்களில் ரத்தக்களரி நிலையே ஏற்படும்' என்று அந்நாட்டு பாராளுமன்ற சபாநாயகர் கரு ஜெய சூரியாவும் எச்சரிக் கையாக விடுத்துள்ளார்.







'நாடாளுமன்றத்தைக் கலைத்ததை உடனடியாக வாபஸ் பெற்று உறுப்பினர்கள் இப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் உடனடியாகச் செயல்படுமாறும், பாராளுமன்றம் மூலம் இதற்குத் தீர்வு காண வேண்டும், தெருக்களுக்கு இட்டுச் சென்றால் பெரிய ரத்தக்களறியைத்தான் சந்திக்க வேண்டி வரும். ரணில் விக்ரமசிங்கே பதவியை அனாவசியமாகப் பறித்து ராஜபக்சேவை நியமித்ததால் அங்கு பெரிய அரசியல் நெருக்கடி ஏற்பட்டு மோதலில் ஒருவர் இறந்துள்ளார். ஆகவே ரணில் தன் பெரும்பான்மையை பாராளுமன்றத்தில் நிரூபிக்க வாய்ப்பளிக்க வேண்டும்' என்றும் சிறிசேனாவை அவர் வலியுறுத்தியுள்ளார்.

ரணில் விக்ரம சிங்கேயும், "தற்போது பெரும் வெற்றிடமே உள்ளது, நாட்டை யாரும் ஆளவில்லை. எனவேதான் நாடாளுமன்றத்தைக் கூட்டி உடனடியாக எனக்கு இருக்கும் ஆதரவை நிரூபிக்க வாய்ப்பளிக்க வேண்டும் என்று கோருகிறேன். நான் தான் இன்னமும் பிரதமராக இருக்கிறேன், எனக்குத்தான் மெஜாரிட்டி உள்ளது." என்று தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், பௌத்த மதத் தலைவர்கள்




# யாரோ?

முன்னிலையில் பிரதமர் பதவிக்கு ராஜபக்சேவும், உடன் சில அமைச்சர்களும் பொறுப்பேற்றனர்.

ராஜபக்சேவும், அதிபரால் பதவி நீக்கப்பட்ட அதிபர் ரணில் விக்கிரமசிங்கவும் தங்கள் பலத்தைக் காட்டும் வகையில் நாடாளுமன்றம் எப்போது கூடும் என்று எதிர்பார்ப்பு நிலவிய நிலையில் உத்யோகபூர்வமாக பிரதமர் அலுவலகத்தில் அவர் தமது கடமைகளை ராஜபக்சே ஏற்றுக் கொண்டது,

தேசிய கட்சி நல்லாட்சி அரசாங்கம் என்ற பெயரில் ஒரு கூட்டணி அரசாங்கத்தை அமைத்திருந்தது. ஆனாலும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கும் இடையே கடுமையான முரண்பாடுகள் நீடித்து வந்த நிலையில், மைத்ரிபால சிரிசேனாவின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, கூட்டணி அரசுக்கான தனது ஆதரவை விலக்கிக் கொண்டதுடன், மஹிந்த ராஜபக்சேவை



இலங்கை மக்கள் மத்தியில் மட்டுமல்லாது, உலகத் தமிழர்கள் மத்தியிலும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் ஜனாதிபதியாக இலங்கை சுதந்திரக்கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனா பதவி வகிக்கிற போதிலும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவி வகித்து வந்தார்.

அந்தக் கட்சியின் போட்டிக்கட்சியான மைத்திரிபால சிறிசேனவின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்து ஐக்கிய

பிரதமராக நியமித்தார் சிறிசேனா.

இதன் மீதான கருத்துக்களுக்கு விளக்கம்கேடும் தனது தரப்பில் இருக்கும் அரசியல் நியாயங்களை விளக்கியும் ரணில் விக்ரமசிங்க சபாநாயகருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியினை அரசியலமைப்புக்கு இணங்க தீர்த்து வைக்கும் பொருட்டு, நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கடிதத்தின் மூலம் கோரிக்கை


விடுத்துள்ளதாகவும் ரணில் குறிப்பிட்டுள்ளார்.

“இலங்கையின் பிரதமர் எனும் வகையில், நாட்டின் சமாதானத்தையும், ஸ்திரத்தன்மையினையும் மீட்டெடுப்பதற்காகவும், நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும், அனைத்து கட்சிகளையும் நாடாளுமன்றத்தில் ஒன்று கூடுமாறு நான் அழைக்கிறேன்” என ரணில் விக்ரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் சபாநாயகர், அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள தனக்குரிய உரிமைகளைப்

நல்லாட்சி அரசாங்க அதிருப்தி யாளர் ள் ஒன்றிணைந்தனர்.

இவ்வாறு இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் நல்லாட்சி அரசாங்கத்தில் ஏற்பட்ட முரண்பாடுகள், குறிப்பாக ரணில் விக்ரமசிங்கவிற்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணை பெரும் சர்ச்சைகளை தோற்றுவித்தது. அதற்கு ஆதரவாக வாக்களித்த சுதந்திரக் கட்சியின் 16 உறுப்பினர்கள் அரசாங்கத்திலிருந்து வெளியேற, நல்லாட்சி அரசாங்கம் ஆட்டம் காண ஆரம்பித்தது.




பயன்படுத்துவார் என்றும், அடுத்த இரண்டு நாட்களுக்குள் அவர் நாடாளுமன்றத்தைக் கூட்டுவார் எனவும் தான் எதிர்பார்ப்பதாகவும் ரணில் விக்ரமசிங்க தெரிவித்திருக்கிறார்.


கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் பதவியை குறிவைத்து மஹிந்த ராஜபக்சே போட்டியிட்டபோதும், அதற்கான பெரும்பான்மை கிடைக்காமல் போனது. எனினும், குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக மீண்டும் நாடாளுமன்றில் காலடி எடுத்துவைத்த ராஜபக்சே, ஆட்சியை மீண்டும் கைப்பற்றுவதற்கு கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டார். அவருக்கு ஆதரவாக




இதற்கிடையில் ஜனாதிபதி மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபய ராஜபக்சே ஆகியோரை கொலைசெய்ய திட்டம் தீட்டப்பட்டதாக வெளியான செய்திகளின் பின்னர் அரசாங்கத்திற்குள் கருத்து வேறுபாடுகள் அதிகரித்தன. இந்நிலையில், அரசாங்கத்திலிருந்து சுதந்திரக் கட்சி வெளியேறியது. அதன் பின்னர் புதிய பிரதமராக மஹிந்த ராஜபக்சே ஜனாதிபதி மைத்திரியின் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

ஏற்கனவே மஹிந்த ஜனாதிபதியாக பதவிவகித்த காலத்தில் மைத்திரி அமைச்சராக செயற்பட்டார். தற்போது, மீண்டும் இருவரும் இணைந்து புதிய அரசாங்கத்தை உருவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிறிசேனாவின் திடீர் முடிவுகளுக்கு பின்னணியில் சீனா உள்ளது என்று இந்திய ஊடகங்களும், மேல்நாட்டு ஊடகங்களும் செய்திகளை வெளியிட்டு வருகின்றன. ரணில் விக்கிரமசிங்கே இந்தியா ஆதரவு நிலைப்பாட்டை






எடுத்த நிலையில், மஹிந்த ராஜபக்சே சீனாவுக்கு நெருக்கமாக அறியப்பட்டவர். எனவே இது போன்ற யூகங்கள் எழுவது என்பது தவிர்க்க முடியாததாக உள்ளது.

உள்நாட்டு விவகாரம் அதேநேரம் சீனாவோ, இந்த விவகாரத்தில் இருந்து தள்ளி நிற்பது போல காட்டிக் கொண்டு உள்ளது. இலங்கையில் நடப்பது அந்த நாட்டு உள் விவகாரம் என்றும், சம்பந்தப்பட்ட கட்சியினர் பேச்சுவார்த்தை மூலமாக தங்கள் பிரச்சினையை தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று சீனா ஏற்கனவே தெரிவித்திருந்தது.

சீன பத்திரிகை இதனிடையே, சீன நாட்டு பத்திரிகையான ‘குளோபல் டைம்ஸ் யுனிவர்சிட்டி’ பீஜிங்கில் உள்ள, சிங்குவா பல்கலைக்கழகத்தின் தேசிய ஸ்டேட்டர்ஜி இன்ஸ்ட்டிடியூட் ஆய்வு மாணவர் கியான் பெங் கூறியதாக ஒரு கருத்தை வெளியிட்டுள்ளது. அதில் அவர் கூறுகையில், ‘சில வெளிநாட்டு ஊடகங்கள் மற்றும் அதிகாரிகள் இலங்கையில் நடைபெறும் ஒவ்வொரு அரசியல் அல்லது பொருளாதார பிரச்சினைகளுக்கு சீனாவை கைகாட்டுவது வழக்கமாகிவிட்டது. இது பொறுப்பற்றது. எந்த பலனும் விளைவிக்காத குற்றச்சாட்டு” என்று தெரிவித்துள்ளார்.

இலங்கையின்




Mangala Samaraweera
@MangalaLK

The appointment of @PresRajapaksa as the Prime Minister is unconstitutional & illegal. This is an anti democratic coup. #lka

பிற்பகல் 3:08 - 26 அக்., 2018

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இலங்கையின் புதிய பிரதமராக பதவியேற்றதன் பின்னணியில் இந்தியா உள்ளதாக ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

அண்மையில் மஹிந்த இந்தியாவிற்கு பயணித்திருந்த வேளை இந்திய பிரதமர் மோடி, சோனியா காந்தி, சுப்பிரமணியன் சுவாமி ஆகியோர்களை சந்தித்த பின்னரே நாடு திரும்பினார்.

இந்திய தலைவர்களின் சந்திப்பின் பின்னர் திடீரென குறித்த மாற்றம் ஏற்பட்டுள்ளதால் இதன் பின்னணியில் இந்தியா இருக்கலாம் என்ற சந்தேகம் பலருக்கு எழுந்துள்ளதாக வைகோ தெரிவித்தார்.

இலங்கையின் ஆட்சி மாற்றத்திற்கு இந்தியா உடந்தையென சந்தேகம் வெளியிட்டுள்ள வைகோ ஈழத்தமிழர்களுக்கு எதிராக இந்திய மத்திய அரசு தொடர்ந்து செயற்பட்டு வருவதாகவும் குற்றஞ் சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ராஜகபக்சேவை பிரதமராக நியமித்தது அரசமைப்புச்சட்டத்துக்குஎதிரானது,சட்டவிரோத மானது. ஜனநாயகத் துக்கு எதிரான அரசுக் கவிழ்ப்பு கிளர்ச்சி என்று இலங்கை நிதியமைச்சர் மங்கள சமரவீர தமது டிவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.




இலங்கையில் சபாநாயகருடன் கலந்து ஆலோசித்து நாடாளுமன்றத்தை உடனடியாக கூட்டுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவுக்கு அமெரிக்கா அறிவுறுத்தி உள்ளது.

இலங்கையில் தற்போது அரசியல் குழப்பம் சர்வதேச நாடுகளை கவலை கொள்ள செய்திருக்கிறது.

அங்கு ஜனநாயகத்தை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்குமாறு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் வலியுறுத்தி உள்ளன.

இது தொடர்பாக அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் ஹீதர் நவுரெட் கூறுகையில், ‘இலங்கையில் யார் தலைமையில் அரசு அமைப்பது? என்பதை மக்களால் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலம் உறுதி செய்யும் பொருட்டு, சபாநாயகருடன் கலந்தாலோசித்து நாடாளுமன்றத்தை ஜனாதிபதி உடனடியாக கூட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அத்துடன் இலங்கையில் அடுத்தடுத்து அரங்கேறும் அரசியல் நிகழ்வுகளை அமெரிக்கா தொடர்ந்து கவனித்து வருவதாகவும், வன்முறை மற்றும் அடக்குமுறையில் இருந்து ஒதுங்கி இருக்குமாறும், இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்கு அமைதியாக தீர்வு காண வேண்டும் எனவும், அனைத்து கட்சிகளும் கட்டுப்பாடுடன் நடந்து கொள்ளுமாறும் ஐ.நா. பொதுச்செயலாளர் ஆன்டனியோ குட்டரெசும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனநாயக மதிப்பீடுகள் மற்றும் அரசியல் சாசன வழிமுறைகளை மதித்து சட்டத்தின் ஆட்சியையும், அனைத்து தரப்பு மக்களின் பாதுகாப்பையும் உறுதி செய்ய வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தி உள்ளார்.

# கருத்துப் ப(ா)டம்




# சொல்றாங்க... சொல்றாங்க...






"அரசியலுக்கு திரைப்பட கவர்ச்சி தேவை என்பதை ரஜினி, கமல் உணர்ந்துள்ளனர்!"
திருமாவளவன்
(அவங்க பரவாயில்லே! நூறு படங்கள் நடிச்சிட்டாங்க! நீங்க ஒரே ஒரு படத்தை நடிச்சிட்டு, அரசியலுக்கு வந்து நல்லா நடிக்கிறீங்களே...)



"தகுதி நீக்கம் செய்யப்பட்ட 18 பேருக்கும் தினகரன் அல்வா கொடுத்துவிட்டார்"
அமைச்சர் ஜெயக்குமார்
(ஏற்கெனவே நீங்க சாப்பிட்டதை இப்போ சொல்லிக் காட்டறீங்களா அமைச்சரே!)



"பெட்ரோல்—டீசல் விலை இன்னும் 15 ரூபாய் குறையும்!"
ஹெச்.ராஜா
(இப்பவே தோல்வி பயம் வந்து உளற ஆரம்பிச்சிட்டீங்களா?)




"தமிழக அமைச்சர்கள் கொசுக்கள் போன்றவர்கள். அவர்களை ஒழித்தால்தான் முன்னேற முடியும்!"
ஸ்டாலின்
(கொசுக்களாவது பரவாயில்லை! கரையான்களான நீங்க வந்துட்டா தமிழகமே காணாமா போயிடுமே!)

# மீண்டும்

## இந்தியாவின் பேரெதிரியும் காத்திருக்கும் காந்தியக் களமும் !

இந்தியாவில் உண்மையான சமத்துவத்தை விரும்பும் எவரும் தீண்டாமைக்கு எதிரான போரில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளாமல் இருக்க முடியாது. இந்தியச் சமூகம் எதிர்கொள்ளும் எதிரிகளிலேயே பெரியது தீண்டாமை. சமத்துவத்துக்கான பயணத்தின் முதல் படியும் ஒடுக்கப்பட்டோர் விடுதலைதான். சமத்துவத்தைத் தன் உயிரெனக்




கருதிய காந்தி, காலம் முழுமையும் அதற்கான பணிகளில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். சமத்துவம் பேசுவோருக்கு இன்றும் அவருடைய பணிகள் ஊக்கசக்தி.




### சொந்த வீட்டில் சத்தியாகிரகம்

தென்னாப்பிரிக்காவில் இருந்தபோது டால்ஸ்டாய் பண்ணை, ஃபீனிக்ஸ் பண்ணை என்ற இரு கூட்டுவாழ்வுச் சமூகங்களை காந்தி நிறுவினார். அங்கு இந்தியர் அல்லாதவர்களும் பல்வேறு சாதிகளைச் சேர்ந்த இந்தியர்களும் எந்த வேறுபாடும் பார்க்காமல் வசித்தனர். அங்கு தலித் சமூகத்தைச் சேர்ந்த ஒருவரும் வசித்தார். ஒருநாள் தனது 'மலசலச் சட்டி'யை அவர் சுத்தம் செய்ய மறந்துவிட்டார். அதைச் சுத்தம் செய்யும்படி கஸ்தூர்பாவிடம் காந்தி கூறியபோது கஸ்தூர்பா மறுத்துவிட்டார். அதனால், கஸ்தூர்பாவை இழுத்து வெளியே தள்ளினார் காந்தி. மனைவியிடம் காந்தி கடுமையாக நடந்துகொண்ட நிகழ்வுகளில் ஒன்று இது. இந்தியாவுக்குத் திரும்பிவந்த பிறகு 1915—ல் தொடங்கிய சத்தியாகிரக ஆசிரமத்தின் விதிமுறைகளுள் முக்கியமான ஒன்று தீண்டாமை கூடாது என்பது. அந்த ஆசிரமத்தில் வசித்த தலித் குடும்பத்தினர் துதாபாய் — தானிபென் தம்பதி. அவர்களின் குழந்தை லட்சுமி. அவர்களைத் தன் குடும்பத்தினராக ஏற்றுக்கொண்ட காந்தி, லட்சுமியை மகளாகவும் ஏற்றார். இது ஆசிரமத்திலுள்ள பலருக்கும் பிடிக்கவில்லை — கஸ்தூர்பா உட்பட. இதனால் கஸ்தூர்பாவைப் பிரியும் முடிவுக்கு வந்தார் காந்தி. 'நண்பர்களாகவே பிரிவோம்' என்றார்.

காந்தியின் இந்த முடிவு குடும்பத்தாரை அதிரச் செய்தது. காந்தியின் செயலை எதிர்த்து உண்ணாவிரதம் இருந்தனர். காந்தி எதிர் உண்ணாவிரதம் இருந்தார். இறுதியில், எதிர்த்தவர்கள் மனம் மாறி காந்தியைப் பின்பற்றத் தொடங்கினார்கள். குழந்தை லட்சுமி வளர்ந்து பெரியவளான பிறகு, அவளுக்குப் பிராமண சமூகத்தைச் சேர்ந்த ஒருவருடன் திருமணம் செய்துவைத்தார் காந்தி.


# வேண்டும் மகாத்மா !

## ஆசை

### நிதி முடக்கம்

தன்னுடைய ஆசிரமத்திலும் பணிகளிலும் தலித் சமூகத்தினரை காந்தி உள்ளடக்கியது ஆதிக்க சாதியினரை அதிருப்திக்குள்ளாக்கியது. அதுவரை காந்திக்கு நிதியுதவி அளித்த பலர் ஆதரவை நிறுத்தினார்கள். காந்தியும் அசரவில்லை. ஆசிரமத்தை இழுத்து மூடும் சூழல் வந்தபோது, பெரும் பணக்காரரான அம்பாலால் சாராபாய் ரூ.13,000 காந்திக்கு அளித்தார். அக்காலத்தில் பெரிய தொகை அது.

### மலம் அள்ள ஒரு போராட்டம்




காந்தியின் ஆசிரமத்தில் வசித்த அப்பாசாகேப் பட்டவர்தன் 1932 வாக்கில் ஒத்துழையாமைப் போராட்டத்தில் கலந்துகொண்டு ரத்னகிரி சிறையில் இருந்தார். அவர் ஒரு பிராமணர். சிறையில் மலம் அள்ளும் துப்புரவுப் பணியானது ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த கைதிகளுக்கே ஒதுக்கப்பட்டிருந்தது. அந்தப் பணியைத் தனக்குத் தருமாறு கேட்டார் அப்பாசாகேப். சிறை அலுவலர்கள் மறுத்தனர். மலம் அள்ளும் பணியைத் தனக்குத் தர வேண்டும் என்று உண்ணாவிரதம் இருந்தார் அப்பாசாகேப்.

அப்போது யெரவாடா சிறையில் அடைக்கப்பட்டிருந்தார் காந்தி. அவர் காதுக்குப் பிரச்சினை சென்றது. அப்பாசாகேப்பின் கோரிக்கையை நிறைவேற்றுமாறு ஐஜி கர்னல் ஈ.ஈ.டோயலுக்கு டிசம்பர் 3, 1932 அன்று கடிதம் எழுதினார் காந்தி. இதுபற்றி அதே காலகட்டத்தில் அம்பேத்கர் எழுதுகிறார்: “யெரவாடா சிறையிலிருந்து காந்தி எழுதிய கடிதங்களை ‘டெய்லி ஹெரால்டு’ பத்திரிகையில் படித்தேன்.




காந்தியின் நிலைப்பாடு சரியானது, பிரிட்டிஷ் அதிகாரிகளின் நிலைப்பாடோ தவறானது. ஒரு சாதியின் மீது மட்டும் பாரம்பரியமாக ஒரு தொழிலை எப்படித் திணிக்க முடியும்?”

### தீண்டாமைக் கோயிலே வேண்டாம்

பூரி ஜெகந்நாதர் கோயிலில் தலித் மக்களுக்கு அனுமதியில்லை என்று கேள்விப்பட்டதும் ‘இந்தக் கோயிலின் கதவுகள் தலித் மக்களுக்குத் திறக்காது என்றால், எனக்கும் திறக்க வேண்டியதில்லை’ என்று கோபத்துடன் அந்தக் கோயிலைப் புறக்கணித்தவர் காந்தி. அதை மட்டுமல்ல, எல்லாக் கோயில்களையும்தான்.

இப்படி இருக்கும்போது 1938—ல் ஒரிஸாவில் காங்கிரஸின் வருடாந்திர உயர்மட்டக் கூட்டம் நடைபெற்றது. காந்தியுடன் கஸ்தூர்பா, காந்தியின்

செயலர் மகாதேவ் தேசாய், தேசாயின் மனைவி, குழந்தை நாராயண் ஆகியோரும் சென்றிருந்தனர். காந்திக்குத் தெரியாமல் கஸ்தூர்பாவும் தேசாயின் மனைவியும் நாராயண் தேசாயை அழைத்துக்கொண்டு ஜெகந்நாதர் கோயிலுக்குச் செல்கிறார்கள்.

அவர்கள் கோயிலை நெருங்குகையில் 12 வயதுச் சிறுவன் நாராயண் தேசாய் அவர்களைக் கோயிலுக்குள் செல்லக் கூடாது என்று தடுக்கிறான். ‘பாபு (காந்தி) நம்மை இதற்கு அனுமதிக்க மாட்டார். ஏனெனில், இந்தக் கோயில் தலித் மக்களை அனுமதிக்காது என்பதால் இது புனிதம் வாய்ந்த கோயில் இல்லை’ என்று தடுக்கிறான். மீறிச் சென்றவர்கள் தங்குமிடம் திரும்பியதும், கடும் கோபம் கொள்கிறார் காந்தி. இந்தச் சம்பவத்தைப் பற்றி ‘ஹரிஜன்’ பத்திரிகையில் எழுதும் மகாதேவ் தேசாய், ‘கஸ்தூர்பாவும் என் மனைவியும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான சேவையில் தங்களை அர்ப்பணித்துக்கொண்டவர்கள். ஆனால், அப்படிப்பட்டவர்கள் பூரி கோயிலுக்குச் சென்றது அதர்மமே’ என்கிறார்.

## சாதி இந்துக்கள் ஜெனரல் டயர்கள்

ஆதிக்க சாதி இந்துக்களை ஜெனரல் டயருடன் ஒப்பிட்டார் காந்தி. “தங்களுக்குள் ஒரு பெருந்திரள் மக்களை அடிமைகளைப் போல் நடத்தும் இந்துக்களுக்கு ஆங்கிலேயர்களின் மீது குறை சொல்லும் உரிமை கிடையாது.”

எந்தத் தொழில்களை வைத்து சாதியம் குறிப்பிட்ட சமூகங்களை இழிவுக்கு உள்ளாக்கியதோ அந்தத் தொழில்களை எல்லோரையும் செய்ய வைத்தவர் காந்தி. தன் வீட்டுக் கழிப்பறையைத் தானே சுத்தம் செய்துகொள்வதிலிருந்துதான் சாதியத்துக்கு எதிரான போராட்டம் தொடங்க முடியும். அந்தப் போராட்டத்தை காந்தி அளவுக்குத் தீவிரமாகச் செய்தவர்கள் யாரும் இல்லை. காந்தியின் ஆசிரமத்தில் எல்லோரும் எல்லா வேலைகளும் செய்ய வேண்டும். நவீனக் கழிப்பறைகள் இல்லாத காலம் அது. ஒருமுறை வினோபா பாவே மலம் அள்ளிக்கொண்டிருப்பதைப் பார்த்து கஸ்தூர்பா துடித்துப்போய், ‘ஒரு பிராமணப் பிள்ளை மலம் அள்ளலாமா?” என்று கேட்டிருக்கிறார். அப்போது காந்தி கேட்டார், “பிராமணர்கள் மலம் அள்ளு வதை




விடச் சிறந்தது எதுவாக இருக்க முடியும்?”


அது மட்டுமல்ல, ஒருகட்டத்தில் சாதிமறுப்புத் திருமணத்தில் மட்டுமே தான் கலந்துகொள்ளப்போவதாக காந்தி அறிவித்தார். அதிலும் குறிப்பாக மணப்பெண் ஆதிக்க சாதியாகவும் மணமகன் தலித் சமூகத்தைச் சேர்ந்தவராகவும் இருக்க வேண்டும் என்று காந்தி வலியுறுத்தினார்.

## ஏன் கொல்லப்பட்டார்?

இதெல்லாம் சில துளிகள்தான். காந்தி இந்தியாவுக்குத் திரும்பியதிலிருந்து சனாதனியும் மதவெறியாளனுமான ஒருவனால் சுட்டுக்கொல்லப்படும் வரையிலான 33 ஆண்டுகளில் தேச விடுதலையைவிட அதிக முக்கியத்துவத்தைத் தீண்டாமை ஒழிப்புக்கே கொடுத்தார் என்று இன்று திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டிய நிலை துயரமானது. ஏனெனில், சிறுபான்மையினர் நலனுக்காக காந்தி செயல்பட்டார் என்பதற்காக மட்டுமே அவர் கொல்லப்படவில்லை; சனாதனத்தின் மீதான அவரது தாக்குதலும் அவரது படுகொலைக்கு முக்கியமான காரணம். யாரெல்லாம் கொடுமைகளுக்குக் காரணமோ அவர்களின் மனசாட்சியை நோக்கி காந்தி பேசினார். அப்படிப் பேசி அவர்களின் தவறுகளை அவர்களுக்கே உணர்த்தினார். அம்பேத்கரும் பெரியாரும் பாதிக்கப்பட்டவர்களுக்கு இடையே பேசினார்கள் என்றால், காந்தியோ பாதிப்புக்கு உட்படுத்தியவர்களிடமும் பேசினார்.

தீண்டாமை என்பது பேரெதிரி. காலம் முழுமைக்கும் அதற்கு எதிராக ஒரு சமூகம் உள்ளும் புறமுமாய் வீரியத்துடன் போராட வேண்டியிருக்கிறது. காந்தி விட்டுச்சென்ற போராட்டக் களம் காத்திருக்கிறது!

‘அன்புள்ள தந்தையே! மன்னிக்க முடியாத ஒரு குற்றத்தை நான் செய்துவிட்டேன். அண்ணனின் கைக்காப்பிலிருந்து கொஞ்சம் தங்கத்தை வெட்டியெடுத்து அதை விற்றுவிட்டேன். என்னுடைய இந்தக் குற்றம் தங்களுடைய மனதில் எந்த விதமான துன்பத்தை ஏற்படுத்தும் என்று தெரியும். ஆயினும், நான் செய்த பாவத்தைத் தங்களிடம் கூறி மன்னிப்புக் கேட்காமல் என்னால் இருக்க முடியவில்லை. என்னை ஒவ்வொரு கணமும் என் மனசாட்சி வாட்டி வதைக்கிறது. நான் செய்த குற்றத்துக்காகத் தங்களை நீங்கள் வதைத்துக்கொள்ள வேண்டாம். எந்தத் தண்டனை சரியானது என்று தாங்கள் கருதுகிறீர்களோ அந்தத் தண்டனையையே எனக்குத் தருமாறு உங்களைப் பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன்’ என்று எழுதப்பட்ட அந்தத் துண்டுச் சீட்டைப்




பார்த்துவிட்டு காந்தியின் தந்தை கரம்சந்த் எதுவும் பேசவில்லை.

எதிரே நடுங்கியபடி நின்றுகொண்டிருந்தார் 15 வயது காந்தி. அப்பா ஏதும் தண்டனை கொடுப்பாரோ என்ற அச்சத்தால் ஏற்பட்ட நடுக்கம் அல்ல அது. தன்னுடைய பாவச்செயலை அறிந்துகொண்ட பின் தந்தையின் உள்ளம் என்ன பாடுபடுமோ என்ற எண்ணத்தால் ஏற்பட்ட நடுக்கம் அது. பவுத்திர நோயால் பாதிக்கப்பட்டு, படுத்த படுக்கையாகக் கிடந்தவர் கரம்சந்த். தான் செய்த திருட்டுக்கு மன்னிப்பு கேட்டு காந்தி எழுதிய கடிதத்தை அவரது தந்தை கண்ணீர் மல்கப் படித்துப்பார்த்துவிட்டுக் கிழித்துப்போட்டுவிடுகிறார்.

அந்தக் கடிதத்தைப் பின்னாளில் 'சத்திய சோதனை'யில் காந்தி இப்படி நினைவுகூருகிறார்: "முத்துத் துளிகள்போல் அவர் கன்னங்களில் கண்ணீர் வழிந்து காகிதத்தை நனைத்தது. ஒரு கணம் கண்ணை மூடிக்கொண்டு சிந்தித்தார். பிறகு, கடிதத்தைக் கிழித்தெறிந்தார். அக்கடிதத்தைப் படிப்பதற்காக எழுந்து உட்கார்ந்தவர், திரும்பவும் படுத்துக்கொண்டார். நானும் கதறி அழுதேன்.

என் தந்தையார் அனுபவித்த வேதனையை நான் காண முடிந்தது. நான் ஓவியக்காரனாக இருந்தால் அக்காட்சி முழுவதையுமே இன்று சித்திரமாக எழுதிவிட முடியும். அது இப்பொழுதும் மனத்தில் தெளிவாக இருந்துவருகிறது. முத்து போன்ற அந்த அன்புத்துளிகள் என் உள்ளத்தைச் சுத்தப்படுத்தி, என் பாவத்தையும் அலம்பிவிட்டன. அத்தகைய அன்பை அனுபவித்தவர்கள் மட்டுமே, அது இன்னது என்பதை அறிய முடியும். 'அன்புக் கணைகளினால் எய்யப்பட்டவன் எவனோ, அவனே அறிவான் அதன் சக்தியை' என்று ஒரு பாடலும் கூறுகிறது.

அஹிம்சா தருமத்தை அறிவதற்கு இது எனக்குச் சரியானதோர் பாடமாயிற்று. இதில் தந்தையின் அன்பைத் தவிர, வேறு எதையும் நான் அப்பொழுது காணவில்லை. ஆனால், இன்றோ, அதுதான் சுத்தமான அஹிம்சை என்று அறிகிறேன். அத்தகைய அஹிம்சை எல்லாவற்றிலும் வியாபிப் பதாகிவிடும்போது, அது தொட்டதையெல்லாம் தன்மயமாக்கிவிடுகிறது. அதனுடைய சக்திக்கு ஓர் எல்லையே இல்லை."




கால வரிசைப்படி 'மகாத்மா காந்தியின் நூல் தொகுப்புகள்' மொத்தம் 100 தொகுதிகளாக வெளியாகியிருக்கின்றன. முதல் தொகுதியில் முதலாவதாக இடம்பெற்றிருக்கும் குறிப்பு இந்த நிகழ்வைப் பற்றித்தான் என்பது கூடுதல் சிறப்பு: "என் குற்றத்தை ஒரு கடிதத்தில் எழுதி என் தந்தையிடம் கொடுத்து, மன்னிப்பு கேட்பதென்று கடைசியாகத் தீர்மானித்தேன். ஒரு துண்டுக் காகிதத்தில் அதை எழுதி நானே என் தந்தையாரிடம் கொடுத்தேன். அக்குறிப்பில் நான் என் குற்றத்தை ஒப்புக்கொண்டிருந்ததோடு அதற்கு தக்க தண்டனையை எனக்குக் கொடுக்குமாறும் கேட்டிருந்தேன். என் குற்றத்துக்காக அவர் தம்மையே தண்டித்துக்கொள்ள வேண்டாம் என்றும் முடிவில் அவரைக் கேட்டுக்கொண்டிருந்தேன். இனி திருடுவது இல்லை என்றும் நான் உறுதிமொழி எடுத்துக்கொண்டேன்."

நேர்மை என்ற விஷயம் காந்திக்கு மிகச் சிறிய வயதிலேயே விதைக்கப்பட்டிருக்கிறது. அவரது பெரும்பாலான நற்பண்புகள் தாய் புத்லிபாயால் ஊட்டப்பட்டவை. சிறு வயதில் காந்தி பார்த்த

அரிச்சந்திரா நாடகம் அவரது மனதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. பொய் பேசக் கூடாது, நேர்மையாக இருக்க வேண்டும் என்ற உணர்வை அந்த நாடகம் அவருக்குள் மிகமிக ஆழமாக ஊன்றியது.

காந்தியின் பள்ளிக்கு ஒருமுறை கல்வி ஆய்வாளர் வருகிறார். மாணவர்களிடம் ஆங்கிலச் சொற்களை எழுதச்சொல்கிறார். நான்கு சொற்களைச் சரியாக எழுதிவிட்ட காந்தி 'ரிமீமீமீநீமீ' என்ற சொல்லை மட்டும் பிழையாக எழுதிவிடுகிறார். காவல் ஆய்வாளருக்குப் பின்னால் நின்றுகொண்டிருந்த ஆசிரியர், காந்தியை அவரது பக்கத்துப் பையனைப் பார்த்து எழுதுமாறு சைகை காட்டுகிறார். காந்தியால் அதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. "நாங்கள் பக்கத்துப் பையனைப் பார்த்து காப்பியடிக்காமல் பார்த்துக்கொள்வதற்காகவே ஆசிரியர் அங்கே இருக்கிறார் என்று நான் எண்ணிக்கொண்டிருந்தேன். ஆகையால், என் பக்கத்துப் பையனின் சிலேட்டைப் பார்த்து அவ்வார்த்தையின் எழுத்துகளைக் காப்பியடிக்க அவர் என்னைத் தூண்டுகிறார் என்பதை நான் அறியவில்லை. இதன் பலன் என்னவெனில், என்னைத் தவிர, மற்ற எல்லாப் பிள்ளைகளும் அவ்வார்த்தையைச் சரியாக எழுதியிருந்தனர். நான் ஒருவனே முட்டாளாக இருந்துவிட்டேன். இந்த முட்டாள்தனத்தை நான் உணரும்படி செய்வதற்கு ஆசிரியர் பிறகும் முயற்சி செய்தார். ஆனால் அதனாலும் பயனில்லை. காப்பியடிக்கும் வித்தையை நான் என்றுமே கற்றுக்கொள்ள முடியவில்லை" என்று பின்னாளில் கூறுகிறார் காந்தி.

நேர்மையாக இருப்பதில் இழப்புகளோ அவமானமோ ஏற்பட்டாலும் நாம் நேர்மையாக நடந்துகொண்டோம் என்ற மகிழ்ச்சி காந்திக்குச் சிறு வயதிலேயே இருந்திருக்கிறது. காந்தி பெரியவரானதும், தனது நேர்மையைக் குறித்து மகிழ்ச்சி கொண்டதில்லை. இயல்பான கடமையைச் செய்வதில் ஏன் மகிழ்ச்சி அடைய வேண்டும் என்ற உணர்வுதான் அது.

எதிராளியிடமும் நேர்மை

காந்தியின் அஹிம்சை, சத்தியாகிரகம், சத்தியம், நேர்மை, அன்பு இவை எதையும் பிரித்துப் பார்க்க முடியாது ஒன்றுடன் ஒன்று




கலந்துவிட்டவை. ஒருவர் முதலில் தனக்கு நேர்மையாக இருக்க வேண்டும். பிறகு, அடுத்தவர்களுக்கு நேர்மையாக இருக்க வேண்டும். இதுதான் நேர்மையைப் பற்றிப் பொதுவாகச் சொல்லப்படும் இலக்கணம். காந்தி இதையெல்லாம் தாண்டி, எதிராளியிடமும் நேர்மையாக இருக்க வேண்டும் என்று விடாப்பிடியாக இருப்பவர்.

அப்பாவுக்கு மன்னிப்புக் கடிதம் எழுதியது, காப்பி அடிக்க மறுத்தது போன்றவற்றின் எதிரொலியைப் பின்னாளில் காந்தியின் ஒவ்வொரு முக்கிய தருணத்திலும் காணலாம். தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பிய பிறகு காந்தி கலந்துகொண்ட முதல் போராட்டம் 'சம்பாரண் போராட்டம்'. பிஹாரில் உள்ள அவுரி விவசாயிகளுக்கான போராட்டம் அது. காந்திக்கு ஆதரவான உணர்வு கொண்ட அரசு ஊழியர் ஒருவர் அரசாங்கத்துக்குத் தான் எழுதிய அறிக்கையின் நகலொன்றை அப்போது காந்தியின் போராட்டக் களத்தில் இருந்த சகாவான ராஜேந்திர பிரசாத்திடம் ரகசியமாகக் கொடுக்கிறார். அந்த அறிக்கை காந்தியிடம் கொண்டுவந்து காட்டப்படுகிறது. திருட்டுத்தனமாகப் பெறப்பட்டது என்று கூறி அந்த அறிக்கையை காந்தி ஏறெடுத்துக்கூடப் பார்க்கவில்லை.

அதேபோல், சம்பாரண் கலெக்டர் காந்தியைக் கடுமையாகக் கண்டித்து ஒரு கடிதம் அனுப்புகிறார். அனுப்பிய பிறகு, 'அவசரப்பட்டுவிட்டோமே' என்ற உணர்வு ஏற்பட அந்தக் கடிதத்தைத் தான் திரும்பப் பெற்றுக்கொள்வதாக அறிவிக்கிறார். அதற்குள் காந்தியை அந்தக் கடிதம் வந்துசேர்கிறது. காந்தியின் இளம் தொண்டர்கள் அந்தக் கடிதத்தைப் பிரித்துப் படிக்கலாம் என்றும் நகலெடுத்துக்கொண்டு திருப்பி அனுப்பிவிடலாம் என்றும் வலியுறுத்துகிறார்கள். அப்படிச் செய்தால் அந்தக் கடிதம் திரும்பப் பெற்றதாக ஆகாது என்று சொல்லி, காந்தி அந்தக் கடிதத்தைத் திருப்பி அனுப்பிவிடுகிறார்.

## இப்படி எத்தனையோ உதாரணங்கள்ஞ்

அன்பு, சத்தியம் — இந்த இரண்டின் ஊடாகத்தான் தன்னுடைய ஒட்டுமொத்த வாழ்க்கையையும் அவர் செதுக்கிக்கொண்டார் என்பதோடு, இவ்வளவு பெரிய நாட்டின் வரலாற்றையும் தீர்மானித்தார் என்பது இன்று பலருக்கு நம்ப முடியாமல் இருக்கலாம். ஆனால், எல்லோருக்கும் சாத்தியமான அந்த இரு எளிய கருவிகள்தான் காந்தியின் மகத்தான ஆயுதங்களாக மிளிர்ந்தன. அரசியலில் அறம் நாடுவோருக்கு அவர் கொடுத்துச் சென்றிருக்கும் மகத்தான ஆயுதங்களும் அவைதான்!


அனைவருக்கும்
தீபாவளி நல்வாழ்த்துக்கள்
HAPPY
தமிழ்
Diwali
இனிய தீபாவளி
நல்வாழ்த்துக்கள்




## ஆளுநரே ! அறக்கடமையாற்ற முன்வருக !

இருண்ட சிறைக் குகையில் 27 ஆண்டு காலத்திற்குப் பிறகு மின்னல் கீற்றுப் போல ஒளி பரவத் தொடங்கியுள்ளது. 6—9—2018 அன்று உச்சநீதிமன்றம் வரலாற்று முதன்மை வாய்ந்த தீர்ப்பினை அளித்துள்ளது. "ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனைப் பெற்றுள்ள 7 பேரின் விடுதலை குறித்து தமிழக அரசு அளிக்கும் பரிந்துரையை ஆளுநர் ஏற்று முடிவெடுக்கலாம்' எனக் கூறியுள்ளது.

1991—ஆம் ஆண்டு மே 21—ஆம் தேதி முன்னாள் தலைமை அமைச்சர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப் பட்டதைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் சி.பி.ஐ.—யின் சிறப்புப் புலனாய்வுக் குழு 26 பேரைக் கைது செய்தது. இதில் 13 பேர் தமிழ் நாட்டுத் தமிழர்கள். 13 பேர் ஈழத் தமிழர்கள் என்பது தற்செயலான தன்று. புலன் விசாரணை யும் நீதிமன்ற விசாரணை யும் 7 ஆண்டு காலம் நடைபெற்று 1998—ஆம் ஆண்டு ஜனவரியில் 26 பேருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டபோது உலகமே அதிர்ந்தது. ஒரு கொலை வழக்கில் 5 பெண்கள் உட்பட 26 பேருக்கு ஒட்டுமொத்தமாக மரண தண்டனை விதிக்கப்பட்டது உலக நீதிமன்ற வரலாற்றில் இதுதான் முதல் தடவையாகும்.



உலக மனித உரிமை அமைப்புகளில் முதன்மையான சர்வதேச மன்னிப்பு சபை இத்தீர்ப்பை "நீதித்துறை படுகொலை' எனக் கூறியது. இதை ஒட்டி இந்தியாவெங்கிலும் உள்ள மனித உரிமை அமைப்புகள் மற்றும் மரண தண்டனைக்கு எதிரான இயக்கங்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தன. 26 தமிழர்கள் உயிர் காப்பு வழக்கு நிதிக் குழு ஒன்று அமைக்கப்பட்டு, மக்களிடம் நிதி திரட்டப்பட்டு உச்சநீதிமன்றத்தில் 27—2—1998 அன்று மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது.




இந்த வழக்கை விசாரிப்பதற்காக 24—8—1998 அன்று நீதியரசர்கள் கே.டி. தாமஸ், டி.பி. வாத்வா, அப்துல் காதர் காத்ரி ஆகிய மூவர் கொண்ட ஆயம் அமைக்கப்பட்டது. 26 பேரின் சார்பில் மூத்த வழக்குரைஞர் என். நடராசன் வாதாடினார்.




இது குற்றவியல் சட்டப்படி தொடரப்பட வேண்டிய கொலை வழக்கே தவிர கொடிய தடா சட்டத்தின் கீழ் தொடரப்பட வேண்டிய வழக்கு அல்ல என்பது அவருடைய வாதத்தின் மையமாக அமைந்தது. 23—9—1998 அன்று தொடங்கிய இந்த வழக்கின் விசாரணை 15—1—1999 வரை (சுமார் 4 மாத காலம்) நடைபெற்றது. இறுதியாக 11—5—1999—இல் உச்சநீதிமன்ற ஆயம் தனது தீர்ப்பை வழங்கியது.

நளினி, முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரின் மரண தண்டனை உறுதி செய்யப் பெற்றது. இராபர்ட் பயஸ், ஜெயக்குமார், ரவிச்சந்திரன் ஆகியோருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. எஞ்சிய 19 பேரும் விடுதலை செய்யப் பெற்றனர். இத்தீர்ப்பு மக்கள் மத்தியில் பெரும் வினாவை எழுப்பியது. ராஜீவ் கொலையாளிகள் என சி.பி.ஐ. சிறப்புப் புலன் விசாரணைக் குழுவினால் குற்றம் சாட்டப்பட்டு, தடா நீதிமன்றத்தினால் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களில் 19 பேர் குற்றமற்றவர்கள் என விடுதலை செய்யப்பட்டது எப்படி? குற்றம் சாட்டப்பட்டவர்கள் சார்பில் உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்படாமல் போயிருக்குமானால் இந்த 19 பேரும் மரண தண்டனைக்கு உள்ளாகியிருப்பார்கள். அப்படியானால் இந்த நீதி பிழைபட்ட நீதியோ என்ற அய்யப்பாடு மக்களுக்கு எழுந்தது.

இதைத் தொடர்ந்து 4 தமிழர்களின் மரண தண்டனையை ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து மாபெரும் மக்கள் இயக்கம் தொடங்கப் பெற்றது. மாணவர்கள், வழக்குரைஞர்கள், எழுத்தாளர்கள் போன்ற பல தரப்பினரும் மரண தண்டனை ஒழிப்பு மாநாடுகள் நடத்தினார்கள். உச்சநீதிமன்ற முன்னாள் நீதியரசர் வி. ஆர். கிருஷ்ணய்யர், உயர்நீதிமன்ற முன்னாள் நீதியரசர்கள் நெட்டு சீனிவாசராவ், டேவிட் அன்னுசாமி, சுரேஷ், பி. டி. ஜானகி அம்மாள், பி. சந்திரசேகர மேனன், பி. பி. உமர் கோயா, எஸ். ஆர். சந்திரன் போன்றவர்களும், முன்னாள் சி. பி. ஐ. தலைமை இயக்குநராக இருந்த வி. ஆர். லட்சுமி நாராயணன், முன்னாள்

**பழ. நெடுமாறன்**

துணை வேந்தர்களான முனைவர் வசந்தி தேவி, முனைவர் கே. எம். வஹாயுதீன், முனைவர் எம். ஏ. கரீம் போன்றவர்களும் பேராசிரி யர்களும் எழுத்தாளர்களும் மரண தண்டனைக்கு எதிராகக் குரல் கொடுத்தனர்.




முன்னணி மனித உரிமை செயற்பாட்டாளர்களான கே. ஜி. கண்ணபிரான், பால கோபால், ஹென்றி டிபேன், முகுந்தன் மேனன் போன்றவர்களும் பிற மாநிலங்களைச் சேர்ந்த ஹிரேன் முகர்ஜி, சுனித் குமார் சாட்டர்ஜி, சிம்ரஞ்சித் சிங் மான், ஜே. ஆர். ஜேட்லி, மோகினி கிரி போன்றவர்களும் குரல் கொடுத்தனர்.

17—10—1999 அன்று அப்போதைய தமிழக ஆளுநர் பாத்திமா பீவியிடம் நால்வரின் கருணை மனுக்கள் அளிக்கப்பட்டன. அவர் அதை ஏற்க மறுத்து தள்ளுபடி செய்தார். உடனடியாக நால்வர் சார்பில் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் மூத்த வழக்குரைஞர் கே. சந்துரு (பிற்கால நீதியரசர்) ஆளுநரின் ஆணை செல்லாது என்று வாதாடினார். தமிழக அமைச்சரவையின் ஆலோசனை பெறாமல் தன்னிச்சையாக முடிவெடுக்கும் அதிகாரம் ஆளுநருக்கு அரசியல் சட்டப்படி கிடையாது என்பதுதான் அவரின் வாதமாகும். அரசியல் சட்ட அமைப்பின் 181—ஆம் பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஆளுநரின் ஆணையைப் பரிசீலனை செய்ய இந்த நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என ஆளுநர் சார்பில் வாதிடப்பட்டது. ஆனால், இந்த வாதத்தை உயர்நீதிமன்றம் ஏற்கவில்லை. மூத்த வழக்குரைஞர்

கே. சந்துரு உச்ச நீதிமன்றத்தினால் அளிக்கப்பட்ட பல்வேறு தீர்ப்புகளை எடுத்துக்காட்டி ஆளுநரின் ஆணை செல்லாததாகும் என வாதாடினார். இதை ஏற்றுக் கொண்ட உயர்நீதிமன்ற நீதியரசர் கே. கோவிந்தராசன் 25—11—1999 அன்று அளித்தத் தீர்ப்பில் பின் வருமாறு குறிப்பிட்டார்:

"அரசமைப்புச் சட்டத்தின்படி குடியரசுத் தலைவர் இந்திய ஒன்றியத்தின் தலைமை நிர்வாகி ஆவார். அவரிடம் ஒன்றியத்தின் நிர்வாக அதிகாரம் மேவி நிற்கும். அதைப் போன்று ஆளுநர் என்பவர் சம்பந்தப்பட்ட மாநிலத்தின் தலைமை நிர்வாகி ஆவார். அவரிடம் அந்த மாநிலத்தின் நிர்வாக அதிகாரம் மேவி நிற்கும். அரசியல் சட்டத்தில் உள்ள 72—ஆம் மற்றும் 161—ஆம் பிரிவுகள் முறையே குடியரசுத் தலைவர் மற்றும் அந்தந்த மாநில ஆளுநர்களுக்கு கருணை மனுக்களில் மன்னித்தல் முதலிய அதிகாரங்களை வழங்கியுள்ளன.

குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநர் ஆகியோர் தமது அமைச்சரவைகளின் உதவியுடனும் ஆலோசனையுடனும் மட்டுமே செயல்படுவர். அவர்கள் நேரடியாக நிர்வாகப் பணிகளை மேற்கொள்ள இயலாது. தண்டனைக்கு எதிரான மேல் முறையீட்டினை முடிவு செய்யும் பணியானது நிர்வாகப் பணியாகும். எனவே மாநில அரசால் அவருக்கு வழங்கப்படும் ஆலோசனைக்கு இணங்கவே ஆளுநர் செயற்பட வேண்டும்.

ஆளுநர் ஆணை பிறப்பிப்பதற்கு முன்பாக அரசியல் சட்ட அமைப்பினைப் பின்பற்றவில்லை; உச்சநீதிமன்றம் அளித்தத் தீர்ப்புகளையும் பின்பற்றவில்லை. எனவே அவரது ஆணை சட்டப் படியாகச் செல்லத் தக்கதல்ல. எனவே, இந்த ஆணை நீக்கப்படுகிறது. மனுதாரர்கள் மனுவின் மீது அமைச் சரவையின் ஆலோசனையைப் பெற்று அதற்குப் பிறகு புதிய ஆணையை அவர் பிறப்பிக் கலாம்' என தனது தீர்ப்பில் குறிப்பிட்டார். ஆளுநராக இருந்த பாத்திமா பீவி உச்சநீதிமன்ற நீதிபதியாக இருந்தவர். எனவே இத்தீர்ப்பிற்கு எதிராக மேல் முறையீடு செய்தாலும் பயனிருக்காது என்பதை உணர்ந்து அவ்வாறு செய்யவில்லை. இந்தத் தீர்ப்பின் நகலுடன் நால்வரின் மரண தண்டனைக்கு எதிராக 12 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் கையெழுத்திட்ட விண்ணப்பத்தை 30—11—1999 அன்று




ஐம்பதினாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் மாபெரும் ஊர்வலமாகச் சென்று அன்றைய முதல்வர் மு. கருணாநிதியிடம் அளித்தோம். ஆனால் நளினிக்கு மட்டும் கருணைக் காட்டப்பட்டு ஆயுள் தண்டனையாக்கப்பட்டது. மற்ற மூவருக்கும் கருணைக் காட்டப்படவில்லை.

அதன் பிறகு குடியரசுத் தலைவருக்கு மூவர் சார்பின் கருணை மனுக்கள் அனுப்பப்பட்டன. 11 ஆண்டுகளுக்குப் பிறகு அவை ஏற்க மறுத்து தள்ளுபடி செய்யப்பட்டன. இந்த தாமதத்தை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. 18—2—2014 அன்று மூவரின் மரண தண்டனையை உச்சநீதிமன்றம் ஆயுள் தண்டனையாகக் குறைத்து தீர்ப்பளித்தது.

இதனையடுத்து, அப்போதைய ஜெயலலிதா அரசு ஆயுள் தண்டனை பெற்ற 7 பேரையும் விடுதலை செய்ய முடிவு செய்தது. தமிழக சட்டமன்றப் பேரவையிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழக அரசு மத்திய அரசுக்குக் கடிதமும் எழுதியது. ஆனால் மத்திய அரசு இந்த விடுதலை நடவடிக்கைக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தது. மேலும் பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக புதிய மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டன.

இது தொடர்பான வழக்கில் கடந்த ஆகஸ்டு 20—ஆம் தேதி உச்சநீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்றது. பின்னர் செப்டம்பர் 6—ஆம் தேதியன்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் ரஞ்சன் கோகோய், நவீன் சின்கா, கே. எம். ஜோசப் ஆகியோர் அடங்கிய ஆயம் "ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட 7 பேரின் விடுதலை குறித்து ஆளுநருக்கு தமிழக அரசு பரிந்துரை செய்யலாம். அதை ஆளுநர் பரிசீலித்து முடிவு எடுக்கலாம்' என்று கூறியது.

வாழ்வின் வசந்த காலமான இளமைப் பருவத்தை சிறையில் தொலைத்து விட்ட இந்த 7 பேரையும் விடுதலை செய்வது குறித்து முடிவு செய்யும் அதிகாரம் தமிழக அமைச்சரவைக்கு கொடுக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே 1999—ஆம் ஆண்டில் உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பின்படி, அமைச்சரவைக்குள்ள இந்த அதிகாரத்தை உச்சநீதிமன்றமும் உறுதி செய்துள்ளது. முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவும் 7 பேரையும் விடுதலை செய்ய உறுதி பூண்டிருந்தார். அதில் குறுக்கிட்ட தடைகள் அகற்றப்பட்டுவிட்டன. தற்போது தமிழக முதல்வர் தலைமையில் கூடிய அமைச்சரவை 7 பேரை விடுதலை செய்ய வேண்டும் என ஆளுநருக்கு பரிந்துரைத்துள்ளது. இந்த மனித நேய நடவடிக்கையை ஏற்று மக்கள் விருப்பத்தை மதித்து தனது அறக்கடமையை ஆளுநர் நிறைவு செய்வார் என நம்புகிறோம்.


தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
Happy Diwali
VARSHA™
தீபாவளி
வாழ்த்துக்கள்

# தலைக்காவிரி

## காவிரியின் தொட்டிலைக் காப்போம் !

குடிப்பதற்கு, வேளாண் சாகுபடிக்கு, மின்உற்பத்திக்கு, தொழில் துறை உற்பத்திக்கு தண்ணீர் நமக்கு மிகவும் தேவை. தற்போது 763 கோடியாக இருக்கும் உலக மக்கள்தொகை, 2050—க்குள் 1,000 கோடியாக உயரப்போகிறது. பருவநிலை மாற்றத்தின் விளைவுகளைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். தண்ணீர் கிடைக்கும்



அளவும், அதன் தரமும் குறைந்துகொண்டே வருகின்றன. பொது சுகாதாரம், உணவுப் பாதுகாப்பு, பொருளாதார வளம் ஆகியவற்றை இது வெகுவாகப் பாதிக்கப்போகிறது. தண்ணீர் தேவைக்கும், கிடைக்கும் அளவுக்கும் இடையில் பற்றாக்குறை அதிகமாகப்போகிறது.




நல்ல தண்ணீருக்குத் தேவை அதிகரித்து வருவதால் நீர்மேலாண்மையில் தொடர்ச்சியான கவனம் அவசியம். கர்நாடகத்தின் குடகு மாவட்டத்தில் காவிரி நதிப்படுகையில் குறுக்கும் நெடுக்குமாகப் பல ரயில் பாதைகளை அமைக்கும் திட்டம் பரிசீலிக்கப்படுகிறது. இத்திட்டம் பொருளாதார ரீதியாக லாபம் தரப்போவதில்லை என்பதுடன், சுற்றுச்சூழலைப் படுமோசமாக பாதித்துவிடும் என்பது கவனிக்கத்தக்கது.

### வனங்கள், நதிப்படுகைகளுக்கு ஆபத்து

காவிரி வடிநிலம் 81,000 சதுர கி.மீ. விரிந்து பரந்துள்ளது. தலைக்காவிரியில் தொடங்கி குடகு மாவட்டம் வழியாகத்தான் பாய்கிறது. லட்சக்கணக்கான ஏக்கர்களில் நிலங்களுக்குப் பாசனத் தண்ணீர் தருகிறது, மின்உற்பத்திக்குப் பயன்படுகிறது, தென்னிந்தியாவின்

# தேடல்

## போபய்யா பிட்டண்டா

கோடிக்கணக்கான மக்களுக்குக் குடிநீர் வழங்குகிறது. காவிரியும் துணை ஆறுகளும் கிருஷ்ணராஜ சாகர் அணையை நிரப்புகின்றன. மைசூரு, பெங்களூரு நகரங்கள் நேரடியாகக் குடிநீர் பெறுகின்றன. வளர்ச்சித் திட்டங்களும், போக்குவரத்தும், கட்டுமானங்களும் அதிகரிப்பதால் வனங்கள், நதிப்படுகைகள், வனவிலங்குகள், விவசாய நிலங்கள் ஆகியவற்றுக்கு ஆபத்துகள் அதிகமாகியுள்ளன.




குடகு மாவட்டத்தின் உத்தேச மூன்று பெரிய ரயில் திட்டங்களால் ஏராளமான பாதிப்புகள் ஏற்படும். முதலாவதாக, ஏராளமான விளைநிலங்களையும் பண்ணைகளையும் அவை ஊடறுத்துச் செல்லும். குடகு, மங்களூரு, வயநாடு, கண்ணூர் மாவட்டங்களில் உள்ள பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிகளும் காப்புக் காடுகளும் அழிவைச் சந்திக்கும். மக்கள்தொகை அடர்த்தி குறைவாகவுள்ள இப்பகுதியில் இப்போதுள்ள சாலைகளைச் சிறிது மேம்படுத்தினாலே, போக்குவரத்துத் தேவைகளைச் சூழலுக்கு அதிக பாதிப்பில்லாமல் குறைந்த செலவில் பூர்த்தி செய்துவிட முடியும். மைசூரு—தலசேரி பாதையை ஆராய்ந்த ‘டெல்லி மெட்ரோ ரயில் கார்ப்பரேஷன்’ இந்தத் திட்டத்தால் மாநிலத்துக்குப் பலன் இருக்காது என்று கூறிவிட்டது. குடகு மாவட்ட மக்கள் பிப்ரவரியில் நடத்திய போராட்டங்களுக்குப் பிறகு, இத்திட்டம் மார்ச் மாதத்தில் கைவிடப்பட்டது. ஆனால், மீண்டும்




இந்தத் திட்டங்களை ஆட்சியாளர்கள் பரிசீலிக்க மாட்டார்கள் என்று கூறிவிட முடியாது.

இரண்டாவதாக, இத்திட்டம் மேற்குத் தொடர்ச்சி மலையின் பல்லுயிர்ப்பெருக்கப் பகுதிகளை அழித்துவிடும். குடகு மாவட்டத்தில் 45% காடுகள் 30% காபித் தோட்டங்கள் என நெல் வயல்களும் வேளாண் வனங்களுமாக இருக்கின்றன. 2013 முதல் 2015 வரையில் உயர் அழுத்த மின்வடப் பாதை அமைத்து மைசூருவையும் கோழிக்கோட்டையும் இணைப்பதற்காகக் குடகுப் பகுதியில் மட்டும் 50,000 மரங்களை வெட்டினர். ரயில்வே திட்டங்கள் அமலுக்கு வந்தால் 5 லட்சத்துக்கும் மேற்பட்ட மரங்கள் வெட்டிச் சாய்க்கப்படும்.

காடுகள் மழைப்பொழிவை அதிகப்படுத்தும். மழைநீர் வேகமாக ஓடுவதைத் தடுத்து நிலத்தடி நீர்




வளங்களுக்குப் புத்துயிர் ஊட்டும். மண் அரிப்பைத் தடுக்கும். வெள்ளம் பெருகாமல் குறைக்கும். உள்ளூர் சமூகங்களுக்கு ஆதரவாக இருக்கும். தாவரங்கள்—விலங்குகளைக் காக்கும். காடுகளுக்கு நடுவே ரயில் பாதைகளை அமைத்தால் இவை சேதமடைவதுடன் யானை போன்ற விலங்குகள் அடிபட்டு இறக்கும். வனப்பகுதிகளை இழக்கும் குடகு வடிநிலம் மழைநீரைத் தேக்கவும் சேமிக்கவும் உள்ள திறனை இழக்கும்.

## மாறிவரும் பருவமழை

தென்மேற்குப் பருவமழைக் காலமான ஜூன்—செப்டம்பரில் குடகு வடிநிலம் அதிக மழைப்பொழிவைப் பெறுகிறது. ஆனால், இந்த மழைப்பொழிவு அளவு மாறிக்கொண்டே இருப்பதை 'நேச்சர்' இதழில் வெளியான ஆய்வறிக்கைகள் தெரிவிக்கின்றன. எனவே, வருங்காலங்களிலும் மிகச் சில நாட்களுக்குள் அதிக மழைப்பொழிவையும், ஆண்டின் பெரும் பாகத்தில் கடும் வறட்சியையும் நாம் சந்திக்கக்கூடும். நிலைமை மேலும் மோசமாகாமல் இருக்க இப்போதுள்ள வனப்பரப்பையாவது காப்பாற்றியே தீர வேண்டும்.

இந்த ஆண்டு தென்மேற்குப் பருவமழைக் காலத்தில் ஆண்டுதோறும் பெய்யும் மழை அளவைப் போல இரண்டு மடங்கை மிகத் தீவிரமாகப் பெற்றது. அடுக்குமாடிக் கட்டிடங்கள்,




சட்டவிரோதக் கனிம அகழ்வுகள், மலையை வெட்டி கற்களை எடுப்பது ஆகியவை கற்பனைக்கெட்டாத வகையில் பிரம்மாண்டமாக நடப்பதால், உயிரைப் பலிவாங்கும் நிலச்சரிவுகள் அதிகமாகிவருகின்றன. உலகம் முழுக்க 5,000—க்கும் மேற்பட்ட நிலச்சரிவுகள் இவ்வாண்டு நிகழ்ந்துள்ளன.

கேரளத்தின் கடலோர மாவட்டங்களிலும் குடகு மாவட்டத்திலும் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு — நிலச்சரிவுகளுக்கு, கட்டுப்பாடில்லாத வளர்ச்சித் திட்டங்களும் வன அழிப்பும் காரணம் என்பதை எவராலும் மறுத்துவிட முடியாது. '100 ஆண்டுகளாகப் பார்த்திராத மழை' இப்போது சகஜமாகிக் கொண்டிருப்பதால், இனியும் மெத்தனமாக இருந்தால் உயிர், உடைமைகளை நிச்சயம் இழப்போம்.

## நீரின்றி அமையாது

தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டால் சமூகத்தில் பதற்றம் ஏற்படும். மக்களிடையே மோதல்கள் அதிகமாகும். அரசியல் ஸ்திரநிலையையும் அது பாதிக்கும். அகதிகள் இடம்பெயர்வது அதிகமாகும். உள்நாட்டுப் போர்களும் ஏற்படும். பருவநிலை மாறுதலும் தண்ணீர்ப் பற்றாக்குறையும் இந்தியாவைக் கடுமையாகப் பாதிக்கும். அடுத்த பத்தாண்டுகளில் பெங்களூரு நகரில் கடுமையான குடிநீர் பற்றாக்குறை ஏற்படப்போவதை 'பிபிசி' எச்சரித்துள்ளது. பெங்களூரு போன்ற பெரிய நகரத்தில் குடிநீருக்கே பற்றாக்குறை என்றால், அதைத் தீர்க்க எத்தனை கோடி ரூபாயையும் மனித உழைப்பையும் எரிபொருட்களையும் செலவழிக்க வேண்டும் என்று சிந்திக்க வேண்டும்.

'தண்ணீருக்கான பத்தாண்டுகள்' என்ற ஐநா திட்டத்தின் தொடக்ககாலத்தில் இருக்கிறோம். நீர்ப்பிடிப்புப் பகுதியில் இருப்பவர்களும், நீரைப் பயன்படுத்துகிறவர்களும் தண்ணீரின் அருமையை முழுதாக உணரவில்லை. தண்ணீருக்கு மாற்று ஏதும் இல்லை. காவிரி உற்பத்தியாகும் குடகு மாவட்டத்தின் வனப்பகுதிகளையும் சூழலையும் காப்பாற்றினால்தான் காவிரியைச் சார்ந்துள்ள மூன்று மாநிலங்களின் காவிரி பாசனப் பகுதிகளையும், கோடிக்கணக்கான மக்களையும் காப்பாற்ற முடியும். நீர்ப்பிடிப்புப் பகுதிகளை மேம்படுத்தி, காப்பாற்றுவதுதான் நாட்டின் வளமான எதிர்காலத்தை உறுதிப்படுத்தும் செயலாகும். அதைக் 'காவிரியின் தொட்டிலான' குடகு மலையிலிருந்து தொடங்குவோம்!

'தி இந்து' ஆங்கிலம் தமிழில்: சாரி

தேவி!

வானுலகில், பூவுலகில், வேறெங்கும்
தேடினாலும் கிடைக்காத

indian express foods

இட்லி / தோசை மா

இலண்டனில் மட்டுமே கிடைக்கும்



indian express foods

+44 20 8133 5144

+44 7878 89 68 37

கவிதை

# சாதி மறு! சன்னடையொழி!

சதையறுக்கும் பச்சைவாசம்
ஐயோ சாதிதோறும் வீசவீச,
தெருவெல்லாம் சிவப்புநாற்றம்
முட்டாள்கள் மேல்கீழாய் பேசப்பேச!

மாக்க ளூடே சாதி வேறு
மண்ணறுக்கும் சாதி வேறு
மனிதங்கொல்லும் சாதியெனில் — அதைச்
சாக்கடையில் விட்டெறிடா!

பெற்றவயிற்றில் மூண்ட நெருப்பு
வெற்று சாதிக்காய் மூண்டதுவே,
பத்துமாதம் சுமந்த நெஞ்சில் — தீண்டாமை
தகதிமிதோம் ஆடுதுவே;

ஐயகோ பூமிப் பந்தை
அற்பசாதி அறுத்திடுமோ
ஓட்டைத்தட்டில் வறுமையென்றால்
உயிர்க்கொண்டு அடைத்திடுமோ..?

வீட்டுக்குவீடு சாதிப்பேச்சு
ஊரெல்லாம் ரெண்டாப் போச்சே,
அடேய்; மனிதத்தை விற்காதே, நில்
இனி மிருகங்களே காரி உமிழும்!

மிச்சத்தை மீட்கவேனும்
மனிதர்களாய் ஒன்று கூடு,
அங்கே ஆடையற்று கூட நில்
சாதியோடு நின்று விடாதே;

சாதியை விடு..
சாதி போகட்டும் விடு..
ஓ மனிதர்களே வா'
என் மனிதர்களே வா "நான் சாதியற்றவன்"
சொல் "நான் சாதியற்றவன்"

சாதியற்ற இடத்தில்தான் நாளை
மனிதர்கள் மனிதர்களாகப் பிறக்கக் கூடும்,

மழை நிலா காற்று போல நாமும்
மனிதர்களாக பிறப்போம்; மனிதர்களாக
மட்டுமே மடிவோம்!

வித்யாசாகர்

# படைப்பாளிகளுக்கு...

* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!



* படைப்புகளை மின்னஞ்சலில் அனுப்புவது வரவேற்கப்படுகிறது.




*இதழில் வெளியாகிற கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள் யாவும் படைப்பாளிகளின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!



தொடர்புகளுக்கு

*editor@ithamil.com*

சிறப்புச் சிறுகதை

# ஆளப் பிறந்தவள்

## கொற்றவன்

பேரியாறு அலைகளோடு சேர்த்து பலவிதமான மலர்களையும் செடி கொடிகளையும் கரை ஒதுக்கியபடி சுழித்து ஓடிக் கொண்டிருந்தது. அகன்று விரிந்திருந்த பேரியாற்றின் இரு கரைகளிலும் மரங்கள் அடர்ந்திருந்தன.

வண்ணவண்ண மலர்களும் மணமிகு மூலிகைகளும் சூழ்ந்திருந்த பேரியாறு, முசிறித் துறைமுகப்பட்டினத்தின் புகழைப் பார்புகழப் பறைசாற்றிக் கொண்டிருந்தது.

பேரியாற்றின் கருங்கற் படித்துறையில் கருங்கல் சிலையென அமர்ந்திருந்தார் பைந்தமிழ்ப் புலவர் பரணர்.

குளியற்பொடி, சந்தனம், திருநீற்றுக் கிண்ணங்கள், மாற்று உடைகளுடன் கருங்கல் மேடையில் இருந்தது.

படித்துறை அருகில் உயர்ந்திருந்த தேக்கு மரக்கிளையொன்றில் இருந்தபடி ஒரு மீன்கொத்திப் பறவை, ஆற்றில் துள்ளும் விரால் மீன்களையும், அசையாமல் அமர்ந்திருக்கும் பரணரையும் மாறிமாறிப் பார்த்தபடி இருந்தது.

தன் கால்களை நனைத்த அலைகளின் மீது பார்வை பதிந்திருந்தாலும், பரணரின் கவனம் அந்த அலைகளில் இல்லை! வில்லவனைப் பற்றிய நினைப்பில் இருந்தது.




ஒருபோதும் தன்னிடம் சொல்லிக் கொள்ளாமல் அவன் எங்கும் செல்லமாட்டான் என நினைத்தது எவ்வளவு பெரிய தவறாகிவிட்டது? இரண்டு நாட்களுக்கு முன் கல்விக்கூடத்தில் இருந்து வெளியேறி இருக்கிறான்! இன்னமும் அவனைப் பற்றிய ஒரு தகவலும் இல்லை! அவனைச் சுற்றியே வலம் வரவேண்டும் என்று நியமிக்கப்பட்டிருந்த குமரனும் கோட்டை விட்டுவிட்டான்! வில்லவனைத் தவறவிட்டதற்காக மனம் குமைந்து கிடக்கும் குமரன், தன் தவற்றுக்காக தண்டனைக் கேட்டு வருந்துகிறான்.

வில்லவன் காணவில்லை என்ற செய்தி பரவினால் என்ன நடக்கும்? அதை நினைத்தாலே பரணருக்கு பெரும் கலக்கமாக இருந்தது.

“பரணரே!...”

சற்று தூரத்திலிருந்து சத்தமாய் ஒலித்த குரல் கேட்டுத் திரும்பினார் பரணர்.

சோழநாட்டுப் பெரும் புலவர் பூம்பட்டினத்தார் வந்து கொண்டிருந்தார்.

படித்துறையிலிருந்து எழுந்த பரணர், “வாரும்! வாரும்!” என்றபடியே அவரை எதிர்கொண்டார்.

“நான் வருவது இருக்கட்டும்! நீராடச் சென்ற நீர் வருவீர் என்று பார்த்துப் பார்த்து கண்கள் பூத்துவிட்டது! அப்படி என்னய்யா ஆழ்ந்த

சிந்தனை?”


பதிலேதும் சொல்லாமல் படித்துறையில் நான்கு படிகள் ஏறி வந்த பரணர் அமைதியாக நின்றார்.

“என்னய்யா அமைதி காக்கிறீர்? என்ன கவலை உமக்கு? நானொருவன் இருப்பதை மறந்துவிட்டீரோ?”

பரணர் சுற்றுமுற்றும் கண்களைச் சுழல விட்டார். தனது மாணவர்கள் எவரேனும் தென்படுகின்றனரா என நோட்டம் விட்டார்.

“பரணரே! ஏன் தடுமாற்றம்? ஏனிந்த கவலை? என்னிடம் சொல்லக் கூடாதா? நான் என்ன அயலானாகி விட்டேனா? என்னதான் நடந்தது? சொல்லுமய்யா!”

படபடத்த பூம்பட்டினத்தாரை சில நொடிகள் அமைதியாய் கூர்ந்த பரணர், “விவரம் புரியாமல் ஏனய்யா வார்த்தைகளை வீணடிக்கிறீர்!” மெதுவாய் கூறினார்.



“விவரம் புரியாமல்தான் கேட்கிறேன். நேற்று முழுதும் நீர் நமது புலமைச் சங்கத்துக்கு வரவில்லை! பாணர்கள் நடத்திய பாராட்டு விழாவுக்கும் வரவில்லை! நேற்றிரவு உமது துறைமுகக் குடிலுக்கும் வரவில்லை என்று சொல்கிறார்கள். இப்படி நீர் ஒரேயடியாய் இரண்டு நாட்கள் காணாமல் போனதற்கு என்ன காரணம்?” மளமளவென வார்த்தைகளைக் கொட்டியவரின் கைகளைப் பிடித்து கொண்ட பரணர், பூம்பட்டினத்தாரின் காதோரமாக மெல்லிய குரலில் சொன்னார்.

“வில்லவனைக் காணவில்லை!”






“என்ன?” பெருத்த அதிர்ச்சியுடன் பெருங்குரலில் கேள்வியெழுப்பியவரின் வாயைப் பொத்தினார் பரணர்.

“ஏனய்யா அலறுகிறீர்?”

“அலறாமல் எப்படி இருக்க முடியும்?”

“நான் இல்லையா?”

“எப்படியய்யா அமைதியாய் இருக்கிறீர்?”

பதிலேதும் சொல்லாமல் திரும்பிய பரணர், படித்துறையில் கீழிறங்கினார். அதிர்ச்சியில் சிலையானார் பூம்பட்டினத்தார்.

பரணர் ஆற்றில் இறங்கி ‘சடேர் சடேரென’ நீருக்குள் மூழ்கி எழுந்தார்.

அவரை வெறித்தபடி நின்றிருந்தார் பூம்பட்டினத்தார்.

வில்லவன்...

பரணரின் பாடலுக்குப் பரிசிலாகத் தரப்பட்டவன்!

பைந்தமிழின் பெருமைக்குத் தாரைவார்க்கப்பட்டவன்!

தந்தவன் சேரப் பேரரசன்! தரப்பட்டவனோ இளவரசன்!

அன்று... மாமன்னர் செங்குட்டுவன் அவையில், பரணரின் பொங்கு தமிழ் தங்கு தடையின்றி ஒலித்தபோது, அந்த அவையே தமிழால் சிலிர்த்துப் போனது! அவையின் சிறப்பு கூடிப்போனது!

அந்நாளில் நடந்தது நடந்தபடியே, சிலையாய் நின்றிருந்த பூம்பட்டினத்தாரின் கண்களில் காட்சியாய் ஓடியது.

மாமன்னர் செங்குட்டுவன் செவிமடுத்துக் கொண்டிருக்கிறார்.

பரணர் தன் பாடலைப் பாடி முடிக்கிறார்.

புலவன் நத்தத்தனார் எழுந்தார்.

"பரணரே! ஐயா, உமது தமிழை என்னவென்று சொல்வேன்!.. ஆகா! எங்கே... நமது மாமன்னர் கடலைக் கலங்கடித்த அந்த வரிகளை மட்டும் எனக்காக... இன்னுமொருமுறை சொல்லுங்கள்!"

செங்குட்டுவன் மீது தான் பாடிய அந்தக் குறிப்பிட்ட வரிகளை மீண்டும் பாடினார்.

"பல்செருக் கடந்த கொல்களிற்றி யானைக்

கோடுநரல் பெளவங் கலங்க வேலிட்

டுடைதிரைப் பரப்பிற் படுகட லோட்டிய

வெல்புகழ்க் குட்டுவற் கண்டோர்

செல்குவ மென்னார் பாடுபு பெயர்ந்தே"

"ஆகா! அருமை பரணரே, அருமை! 'பல போர்க்களங்களைக் கண்ட யானைகளை உடைய எம் மன்னர், சங்குகள் முழங்குகின்ற கடல் கலங்கும்படி,தன் கைவேல்களையே வேலியாக நட்டு, அலைமோதும் கடலின் அரணாகிய வலிமையை அழித்ததனால் பெரும் புகழைக் கொண்ட எம் குட்டுவ மன்னரைக் கண்டவர், இங்கேயே தங்கிட எண்ணம் கொள்வாரே தவிர, அவரைப் பாடிப் பரிசில் பெற்றுத் திரும்புவோம் என்று கருதவேமாட்டார்!' என்ற தங்களின் வரிகள், நமது சேரர்கோவின் கடல் தீரத்தை மட்டுமல்லாது கொடைத்திறத்தையும் அப்படியே சித்திரமாக்கிக் காட்டுகிறது! அற்புதம்!" நத்தத்தனார் புகழ்ந்துரைத்தார்.




அதுகேட்டு அந்தப் பேரவை மண்டபம் பேரலையாய் ஆர்ப்பரித்தது. அங்குள்ள ஆன்றோர்களும் சான்றோர்களும் பரணரைப் பலவாறு புகழ்ந்தனர்.

"ஆயிரமாயிரம் ஆண்டுகள் ஆனாலும் நம் மாமன்னரின் புகழைப் பறைசாற்றும்படி பாடல் அமைத்திருக்கிறீர் பரணரே!" என்றார் பெரும்புலவர் பேரகத்தார்.

"ஆம்! நிலங்களை வெல்லும் பிற மன்னர்களை விடவும், கலங்களைச் செலுத்தி அயலாரை அடித்து விரட்டி, யவனரும் புகழ்ந்து கொண்டாடி மகிழும்படியான கடல் வெற்றிகளைக் குவித்திருக்கும் நமது மாமன்னரின் பெருமையைப் பொலிவுறும் பாங்குடன் பாடலாக்கியிருக்கிறார் நமது பரணர்." புலவர் பொய்யாமொழியார் புகழ்ந்துரைத்தார்.

மேலும் பல சான்றோர்களும் பரணரின் பாடலை வியந்து போற்றினார்கள்.

அவையோரின் வாழ்த்தொலி அடங்கியதும் அவையை வணங்கி அமைதியாகப் பேசத் தொடங்கினார் பரணர்.

"மாமன்னரின் அவையை அலங்கரிக்கும் ஆன்றோர்களுக்கும் சான்றோர்களுக்கும் இந்த எளியவனின் பணிவான வணக்கங்கள்! உங்களது கரவொலியும் வாழ்த்தொலியும் என்னை வியப்பிலாழ்த்துகிறது. என் பாடல் உள்ளபடியே அவ்வளவு சிறப்பு வாய்ந்ததா என்ற அளவிலாத மகிழ்வும் உண்டாகிறது. ஐயமும் உண்டாகிறது!"

அதுகேட்டு அவைப்புலவர் நத்தத்தனார் எழுந்தார்.

"பரணரே! தங்கள் ஐயம் என்ன?" என வினவினார்.

பரணர் சற்றே தயங்கியவராய் தன் ஐயத்தை முன்வைத்தார். "புலவர்கள் சிலநேரம் பரிசில் பெற வேண்டி மிகைபடப் புகழ்ந்து பாடுவதுண்டு! புலமைக்குப் பொய்மை தேவையில்லை! ஆனால் புகழ்ந்துரைக்கையில் உவமை தேவைப்படும்! அந்த உவமை, புலமையோடு சேரும்போது அருமையும் பெருமையும் தோன்றும்! இதுதான் பாடல் அல்லவா?"

“ஆம்! ஒரு நல்ல பாடல் எப்படி அமைய வேண்டுமன்ற இலக்கணத்தை அழகாய் எளிமையாய் கூறிவிட்டீர்கள் பரணரே!”

“நன்றி நத்தத்தனாரே!”

“சரி! தங்கள் ஐயத்தைக் கூறவில்லையே?”

“அதைத்தான் சொல்ல வருகிறேன். என் பாடலில் சிறிய அளவிலேனும் பொய்மை இல்லை! புகழ்ந்துரைக்க உவமை இல்லை! இவ்விரு ‘மை’களும் இல்லாமல், மாமன்னரின் வெற்றியைப் பற்றிய உண்மையை மட்டும்தான் பாடலாக்கியிருக்கிறேன். இந்நிலையில் என் பாடல், நீங்கள் அனைவரும் மகிழத்தக்க வகையில் இருக்கிறது என்பது உண்மையிலேயே உண்மைதானா? இதுதான் என் ஐயம்!”



பரணர் கேள்விக்கு நத்தத்தனார் பதில் சொல்ல வாய் திறக்குமுன் மாமன்னர் செங்குட்டுவன் அவரைக் கையமர்த்தி குரல் கொடுத்தார்.

“பரணரே!...” புலியின் உறுமலென ஒலித்தது செங்குட்டுவன் குரல்.

அந்த ஒற்றைக் குரலுக்கு அம்மண்டபம் அடங்கியது. அமைதி நிலவியது.

“நியாயம்தான்! ஒரு புலவராய், உவமையோ பொய்மையோ பெரும் புலமையோ காட்டாமல் மெய்மை என்ற ஒன்றை மட்டுமே வைத்திருப்பதாய் சொன்னீர்கள் அல்லவா! அதுதான் இப்பாடலின் சிறப்பு! உள்ளபடியே எனக்கே இப்பாடலைக் கேட்கும் போதுதான், நான் இவ்வளவு பெருமை படைத்தவனா என மலைப்பாய் இருக்கிறது.” செங்குட்டுவன் குரலில் அந்த வியப்பு தெரிந்தது.

“சேரலே! இன்னமும் தங்கள் பெருமையை முழுதாகச் சொன்னேனா என்ற ஐயத்தில் நான் இருக்கையில், தாங்கள் இப்படிக் கூறுகிறீர்களே! இது நியாயமா?” பரணர் பணிவுடன் வினவினார்.

“இல்லை பரணரே! தாங்கள் என்னைப் பற்றிப் பாடியதைக் கேட்கையில்தான் என் முன்னோர்கள் மீது பாடப்பெற்ற ‘பதிற்றுப்பத்து’ பாடல், என் மீதும் பாடப்பட வேண்டும் என்ற பேரவா





எழுகிறது. அதேநேரத்தில், அப்பாடல்களுக்குத் தகுதியானவனாக மாறுவதற்கு நான் ஆற்ற வேண்டிய கடமைகள் ஆயிரமாயிரம் இருக்கிறது. இந்தச் சிந்தனையை தங்கள் பாடல்கள்தான் ஏற்படுத்துகிறது. நிச்சயம் அந்தத் தகுதிகளை விரைவில் நான் எட்டுவேன் பரணரே!...”

மாமன்னர் கூறியதைக் கேட்டு அந்த மண்டபமே அதிர்வது போல கரவொலி எழும்பியது.

“பரணரே! தங்கள் தமிழைக் கேட்டு இங்குள்ளோர் கொண்ட களிப்பை விடவும் நான் பேருவகை கொள்கிறேன். என் எதிர்காலம் மென்மேலும் மக்கள் பணியில் சிறந்துவிளங்கிட வேண்டும் எனும் தூண்டலை ஏற்படுத்தி, எனக்குள் ஒளியேற்றிவிட்ட தங்களுக்கு நான் ஒப்பற்ற ஒரு பரிசு தரவேண்டும். பரணரே! வேண்டியதைக் கேளுங்கள்!” உணர்ச்சி பொங்கக் கூறினார் சேர மாமன்னர்.

பரணரோ பதில் சொல்லத் தெரியாமல் நின்றார்.

மாமன்னர் அடுத்துச் செய்த காரியத்தால் அரசவை அதிசயத்துப் போனது! ஒரு மன்னன் இப்படியும் செய்வானோ? என்று பேச்சற்றுப் போனது.



தன் மகன் வில்லவனைப் பரணர் பாடிய பாடலுக்காகப் பரிசிலாக வழங்கினார் சேரர்கோன் செங்குட்டுவன்.

அத்துடன் மிகப்பெரும் பொருள் வருவாயைத் தரும் உம்பற்காடு எனும் பெரும் மலைச்சாரல் பகுதியின் செல்வங்கள் பரணருக்கே செல்ல வேண்டும் என்ற உத்தரவிட்டு ஓலையும் எழுதினான்.




அக்கணம் முதல் வெறும் புலவராய் இருந்த பரணர் பெரும்புலவர் ஆனார்!

வாழ்க்கை கண நேரத்தில் ஏற்படுத்திவிடும் மாற்றத்தைக் கண்டு உறைந்து போனார்கள் மண்டபத்தில் உள்ளோர்.

அக்காட்சிகளை எல்லாம் கண்டு நெக்குருகியபடி அமர்ந்திருந்தார் புலவர் காவிரிப்பூம்பட்டினத்தார். தன் நண்பர் பரணருக்குக் கிடைத்த புகழும் செல்வமும் கண்டு மெய்சிலிர்த்தபடி அமர்ந்திருந்தார்,

அந்த நாள் காட்சிகளில் மூழ்கி நின்ற பூம்பட்டினத்தார், “ஓ!...” என்ற பரணரின் பெரும் அலறல் கேட்டு, நினைவுலகத்திலிருந்து மீண்டு நிகழுலகுக்கு வந்தார்.

பேரியாற்றங்கரை படித்துறையில் நீராடி முடித்துக் கரையேறிய பரணரின் பார்வை, தன்னை நோக்கி ‘விர்’ரெனப் பாய்ந்து வந்த ஓர் குத்தீட்டியின் மீதிருக்க, “ஓ!” என்ற ஓலம் அவரிடமிருந்து கிளம்பியது.

பரணரின் பார்வை சென்ற திக்கைப் பார்த்த பூம்பட்டினத்தார் திடுக்கிட்டுப் போனார்.

பாய்ந்து வந்த குத்தீட்டி, பரணருக்குப் பின்னால் வாய்பிளந்தபடி வந்தவொரு முதலையின் வாய்க்குள் பாய்ந்து குத்திட்டு நின்றது.

பெரும் வேகத்தில் குத்தீட்டி பாய்ந்ததில் முதலை துள்ளிப் புரண்டு நீருக்குள் மூழ்கியது. முதலை மூழ்கிய இடத்தில் சிவப்பும் பச்சையுமாகக் குருதி குபுக்கென கொப்பளித்தது.


சில நொடிகள் தாமதித்திருந்தாலும், தன் வாழ்வு முடிந்திருக்கும் என்பதை நம்பமுடியாதவராய் பார்த்த பரணர், அந்த அதிர்ச்சியிலிருந்து மீள முடியாமல், முதலை மூழ்கி வளையம் எழும்பிய பேரியாற்றைப் பார்த்தபடியே நின்றிருந்தார்.

குத்தீட்டி பாய்ந்து வந்த திக்கில், பேரியாற்றங்கரையோரம் தண்ணீரைத் தழுவிய வண்ணம் பூத்துக் குலுங்கி நின்ற சரக்கொன்றை மரத்தைப் பார்த்தார் புலவர் பூம்பட்டினத்தார். அங்கே வளைந்த மரக்கிளை ஒன்றில் மஞ்சள் மலர்களின் நடுவே இதழ்களில் மலர்ந்த புன்னகையுடன் வில்லவன் நின்றிருந்தான்.

“அதோ வில்லவன்!” பூம்பட்டினத்தார் பூரிப்பில்

கூவினார்.

அடுத்த சில நொடிப் பொழுதுகளில் புலவர்கள் இருவரிடையே நின்றிருந்தான் வில்லவன்.



“வில்லவா! உன்னைக் கண்டபின்தான் எனக்கு மீண்டும் உயிர் வந்திருக்கிறது!” வில்லவனின் கரங்களைப் பற்றிக்கொண்டு உருக்கமாகக் கூறினார் பரணர்.

“உள்ளபடியே உமக்கு உயிர் மீண்டும்தான் கிடைத்திருக்கிறது. முதலையிடமிருந்து மீண்டு வந்திருக்கிறீர்! வில்லவனின் குத்தீட்டி உயிரைக் காத்திருக்கிறது.” புலவர் பூம்பட்டினத்தார் கூற, குறுக்கிட்டான் வில்லவன்.

“இல்லை ஐயா, பரணரின் உயிரை தமிழன்னைதான் காத்திருக்கிறாள்!”

“சரியாகச் சொன்னாய் வில்லவா! பரணரின் தமிழுக்குத் தாரைவார்க்கப்பட்டவன் நீ! எனவே தமிழ் தந்த பிள்ளையான நீ, அவர் உயிரைக் காத்தது என்பது தமிழன்னையே காத்ததற்கு ஒப்பானதுதான்!” பெருமையாகச் சொன்னார் பூம்பட்டினத்தார்.

“வில்லவா, இரண்டு நாட்களாக எங்கே போயிருந்தாய்? என்னிடம் சொல்லாமல் ஏன் போனாய்? கல்விச்சாலையில் உள்ள ஒருவரும் அறியாமல் எப்படிப் போனாய்? வில்லவன் காணவில்லை என்ற செய்தி பரவினால் என்னாகும் தெரியுமா?” பரணர், தான் உயிர் மீண்டதைவிடவும், இரண்டு நாட்களாக உயிரை வதைத்த கேள்விகளை வார்த்தைகளாய் கொட்டினார்.

“ஐயா! மன்னியுங்கள்! ஒரு பெண்ணின் மானத்தைக் காக்க வேண்டிய சூழல்! எனவேதான் ஒருவரும் அறியாமல் நான் கிளம்ப வேண்டியதாயிற்று!” பணிவோடு சொன்னான் வில்லவன்.

கணநேரம் அமைதியாய் பார்த்த பரணர், தன் மார்போடு அவனை அணைத்துக் கொண்டார்.

இருவரும் நிறையப் பேசியிருக்க வேண்டும்! இருவரது நிலைப்பாடும் இன்னதென்று ஒருவருக்கொருவர் விளக்க வேண்டும்தான்! ஆனால் அதற்குமேல் அவர்கள் பேசவில்லை! அமைதியாய் கல்விச்சாலையை நோக்கி நடந்தார்கள்.

ஆசிரியருக்கும் மாணவனுக்குமான அந்தப் புரிதலைக் கண்டு மலைத்தவராக, பூம்பட்டினத்தார் அவர்களைப் பின் தொடர்ந்தார்.

தமிழுக்காகத் தரப்பட்ட அந்தப் பிள்ளை, தன் குருவின் உயிரைக் காத்த பிள்ளை, அவர் பெயரைக் காக்காமல் விடுவானா?

ஆளப் பிறந்தவன் அவன்! தமிழோடு வாழப் பிறந்தவன்! தமிழாய் நிலைக்கப் போகிறவன்! அவனைப் பற்றிய ஐயம் எதற்கு? சட்டெனத் தனக்குள் தெளிவு வந்தவராய் நடந்த பூம்பட்டினத்தார், அப்போதுதான் கவனித்தார். வில்லவனின் வலது தோளில் ஆழமான கோடாய் வெட்டுக் காயம் இருந்தது.




அவனது மாயம்... அவனுக்குண்டான காயம்... அதற்கான நியாயம்... வில்லவனுக்கு மட்டுமேயான தனிக் கதை!

அந்தக் கதையை வில்லவன் இப்போது மறைத்தாலும், விரைவில் அது பரணருக்குத் தெரிய வரும்! அவரிடம் பிறிதொரு நாள் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் தன் ஆவலை அடக்கிக் கொண்டு அமைதியாக நடந்தார் பூம்பட்டினத்தார்.

பூம்பட்டினத்தார் அறியக் காத்திருக்கும் வில்லவனின் காயத்துக்கான அந்தக் கதை, அவனது வாழ்வையே மாற்றப்போகும் கதை என்பது காலதேவதை மட்டுமே அறிந்திருக்கும் ரகசியம்!

குறிப்பு:

சங்கப் புலவர் பரணர் பாடிய ‘பதிற்றுப் பத்து’ பாடலுக்குச் சேர மன்னன் செங்குட்டுவன், தன் மகனையே பரிசிலாக வழங்கித் தமிழுக்குத் தந்தான் பெருங்கொடை! அதனை அடித்தளமாகக் கொண்டு எழுந்தது இக்கதை!



# அன்புடன்

## லண்டன்: இயந்திரமும் விலங்கும்

லண்டனில் அதிகம் கூட்டம் குவியும் ‘ப்ரைமார்க்’ பல்பொருள் அங்காடிக்குச் சென்றிருந்தேன். ஆச்சரியமூட்டும் வகையில், நான் கையில் எடுத்துப் பார்த்த எந்த ஒரு துணி, பொருளும் பிரிட்டன் தயாரிப்பு இல்லை. சீன, இந்திய, வங்கதேச தயாரிப்புகள் ஆக்கிரமித்திருந்தன. “ஒரு உடையால் கிடைக்கும் லாபத்தைவிட அந்த உற்பத்தியால் ஏற்படும் சூழல் இழப்பு அதிகம் என்றால் அதைத் தவிர்த்துவிடுவதே நல்லது என்ற முடிவுக்கு மேற்குலகம் வந்து வெகு நாட்கள் ஆகின்றன” என்று சொன்னார் ஆசாத்.நண்பர்களிடமிருந்து இரவு உணவுக்கான அழைப்பு வந்தது. அன்று மால்ட்பீ வீதிக்கு அழைத்துச் செல்வதாகச் சொல்லியிருந்தார் ஆசாத். பிராட்வே, பெர்விக், ப்ராக்லி, கேம்டன், மால்ட்பீ இவையெல்லாம் லண்டனில் சாலையோரக் கடைகளுக்குப் பிரசித்தமான சந்தை வீதிகள். உலகின் பல்வேறு நாடுகளையும் சேர்ந்த ஆயிரம் வகை உணவுகள் இந்த வீதிகளில் ஒரே இடத்தில் கிடைக்கும். மால்ட்பீ வீதியிலுள்ள மெக்ஸிகன் உணவகம் ஒன்றில் சால்மன் மீன் வறுவல் விசேஷம் என்று சொன்னார் ஆசாத்.






வழக்கத்துக்கு மாறாக எனக்கு வெளியே எங்கும் செல்ல அன்று மனதில்லாமல் இருந்தது. தாமதமாக விடுதி திரும்பியவன் அறைக்குள்ளேயே முடங்கிக் கிடந்தேன். மனம் இருநூற்றைம்பது வருடங்கள் பின்னோக்கி தொழில்மயமாக்கல் காலகட்டத்தில் நிலைகொண்டிருந்தது.

இன்று நாம் எதிர்கொண்டுவரும் எத்தனையோ பிரச்சினைகளுக்கான வேர்கள் தொழில் புரட்சியோடு பிணைக்கப்பட்டிருக்கின்றன. மனிதகுல வரலாற்றிலேயே பெரும் திருப்புமுனையை உண்டாக்கிய தொழில் புரட்சியானது, அளவில் சின்னதான பிரிட்டனை வேறு எந்த நாட்டைவிடவும் செல்வாக்கும்



# லண்டன்

அதிகாரமும் கொண்டதாக மாற்றியதோடு மட்டும் நிற்கவில்லை; ஒட்டுமொத்த உலகின் போக்கையும் திருப்பியது. உலகின் எல்லாக் கலாச்சாரங்கள், விழுமியங்கள் மீதும் மோதியது. நவீனத்துவத்தை ஏகாதிபத்தியமாக்கியது.

ரஷ்யப் புரட்சி, பிரான்ஸ், ஜெர்மனியின் எழுச்சி, அமெரிக்காவின் பாய்ச்சல், இரு



உலகப் போர்கள் தந்த பின்னடைவு, சீனாவின் விஸ்வரூபம் இவற்றுக்கெல்லாம் பிறகு இன்று பிரிட்டன் சிறுத்துவிட்டிருக்கலாம். ஆனால், அது முன்னெடுத்த பாதையைத் தனக்கேற்பக் கட்டமைத்துக்கொள்வதன் வாயிலாகவே நவீனப் பேரரசுகள் உருக்கொள்கின்றன. பிரிட்டன் உருவாக்கிய கற்பனையிலிருந்து உலகத்தால் விடுபடவே முடியவில்லை. தொழில்மயமாகும் எல்லா நாடுகளும் தங்களுக்கான நியாயத்தை வளர்ச்சிவாதத்திலிருந்தே பெறுகின்றன.

**சமஸ்**

தேம்ஸ் நதிக்குச் சென்றிருந்தபோது ஹெலன் சொன்னார், “சமஸ், இந்த தேம்ஸ்தான் லண்டனின் ஆதாரம். பிரிட்டன் தொழில்மயமாக்கலுக்குள் நுழைந்தபோது, வளர்ந்து கொண்டேயிருந்த பொருளாதாரமும்




பணமும்தான் எல்லோர் நினைவுகளையும் ஆக்கிரமித்திருந்தது. தேம்ஸ்தான் எங்கள் தலையில் தட்டி தொழில்மயமாக்கலின் இன்னொரு முகத்தைச் சுட்டிக்காட்டியது. ‘இந்த நதி செத்துவிட்டது’ என்று சொல்லும் அளவுக்கு இடைப்பட்ட காலத்தில் கிட்டத்தட்ட 150 வருடங்கள் இது மாசுபட்டுக் கிடந்தது. தேம்ஸில் செல்லும் படகுகளை எலும்புக்கூடுகள் ஓட்டிச்செல்வதான படங்களாக வரைந்தார்கள் ஓவியர்கள். இன்று நதியை நிறைய மீட்டெடுத்திருக்கிறோம். தொழில்மயமாக்கல் உச்சத்தில் இருந்த நாட்களில் லண்டன் நகரம் புகை மண்டலமாகவும் தேம்ஸ் சாக்கடையாகவும் இருந்தது. இன்றைக்கும் பணம் மட்டும் வாழ்க்கை இல்லை என்று தேம்ஸ் சொல்லிக்கொண்டே இருக்கிறது.”

பிரிட்டனில் 1700—களின் மத்தியில், முதலில் வேளாண் துறையில் பெரும் மாற்றம் நடந்தது. வேளாண் துறைக்குள்



ETPM1214824 London, England: December 5, 1952. Trafalgar Square in London after the city was covered in dense fog. ©TopFoto / The Image Works NOTE: The copyright notice must include "The Image Works" DO NOT SHORTEN THE NAME OF THE COMPANY ©TopFoto / The Image Works

கொண்டுவரப்பட்ட புதிய வகை விதைகள், புதிய தொழில்நுட்பங்கள், அறிமுகப்படுத்தப்பட்ட இயந்திரங்கள் இவை எல்லாமும் கூடி விளைச்சலை அதிகரித்தன. அதேசமயம், விவசாயத்திலிருந்த வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கையையும் குறைத்தன. உலகின் பல பகுதிகளிலும் தங்கள் காலனியாதிக்கத்தை நிலைநிறுத்திக்கொண்டிருந்ததன் மூலம் பிரிட்டனுக்கு அன்று சாத்தியமாகியிருந்த தங்கு தடையில்லா கச்சாப்பொருள், அடுத்தடுத்து அறிமுகமான புதிய கண்டுபிடிப்புகள், ஒரு புதிய பெருக்கத்துக்குத் துடித்துக்கொண்டிருந்த மூலதனம் எல்லாம் சேர்ந்து பிரிட்டனைத் தொழில்மயமாக்கலில் இறக்கியபோது கிராமப்புறத்தின் வேலைவாய்ப்பின்மையே அதற்கான சமூக நியாயம் ஆனது. கிராமப் புத்துயிர்ப்புக்கான கற்பனை ஆவியாகியிருந்தது.

அதுவரை உள்ளூர் அளவிலானதாக வீடுகளிலும் சமூகங்களிலும் நடந்துவந்த உற்பத்தி பொது இடம் நோக்கி நகர்ந்தது. தொழிற்சாலைகள் உருவான இடங்கள் நகரங்கள் ஆயின. நகரங்கள்




பெருநகரங்களாக விரிந்தன. மக்களை இந்த நகரங்கள் அலையலையாக இழுத் தன. 1750—ல் விவசாயப் பண்ணைகளில் இருந்த பிரித்தானியர்களின் எண்ணிக்கை 80%; 1850—களில் இது 50% ஆகக் குறைந்தது. தொழில்மயமும் நகரமயமும் ஒன்றை ஒன்று ஆரத்தழுவி வளர்த்துக்கொண்டன. உலக அளவில், கிராமப்புற மக்கள்தொகையைவிட நகர்ப்புற மக்கள்தொகை அதிகம் என்ற நிலை 2009—ல் உருவாகியிருப்பதை ஐநா சபை அறிவித்தது.

வரலாற்றில் எது ஒன்றையும் முழுக்க கருப்பு அல்லது வெள்ளையாக அணுக முடியாது. முரணியக்கத்திலேயே வரலாறு பயணிக்கிறது.

சுதந்திரப் பொருளாதாரம், அரசு தலையீடற்ற தொழில் — பொருளாதாரச் சூழலுக்கான முதலாளித்துவச் சித்தாந்தங்கள் இவையெல்லாம்தான் தொழில் புரட்சியின் பின்சக்திகளாகத் திகழ்ந்தன. முதலாளிகளின் ஈவிரக்கமற்ற உழைப்புச் சுரண்டல், தொழிலாளர்கள் மீது திணிக்கப்பட்ட அடிமை நிலை, கொடுங்கோன்மைச் சூழல் இவற்றிலிருந்து பீறிட்டெழுந்த உணர்வுகளும் குரல்களும் சமூக இயக்கங்களுக்கு வித்திட்டன. தொழிலாளர் உரிமைக்கான இயக்கங்கள், பெண்ணுரிமைக்கான இயக்கங்கள், சமத்துவத்துக்கான இயக்கங்கள் எல்லாம் தொழில் புரட்சியின் தொடர் விளைவுகளாகத் தோன்றியவை. பிரிட்டனுக்கும் ஜனநாயகத்தை அதுவே கொண்டுவந்தது. தொழிலாளர் உரிமைக்கான குரல் கூடவே ஜனநாயகத்துக்கான குரலாகவும் விரிந்தது.

சிக்கல் என்னவென்றால், தொழில்மயமாக்கல்

எனும் இயந்திரத்தைக் கையாள மனித குலத்தால் முடியவில்லை. மாறாக, அது மனிதகுலத்தையும் இயற்கையையும் தன் கையில் எடுத்துக்கொண்டது. பிரிட்டனிலேயே அப்படிதான் அது தொடங்கியது. இன்றைக்குத் தொழில்மயமாக்கலில் சீனாவும் இந்தியாவும் இருக்கும் இடத்தில் பிரிட்டன் இருந்த நாட்களில் பிரிட்டனின் தொழில்பட்டறையாக இருந்தது மான்செஸ்டர் நகரம். அப்போது பிரிட்டன் முழுவதும் மக்களின் சராசரி ஆயுள் காலம் 41 ஆண்டுகள். மான்செஸ்டரிலோ 27 ஆண்டுகள். உயிருக்கும் பணத்துக்குமான தொடர்பு அப்போதே துலக்கமாக வெளிப்பட்டிருக்கிறது.

நூறு ஆண்டுகளுக்கு முன்பு லண்டன் இருந்த நிலையை அன்றைய பத்திரிகைகளைப் படிக்கும்போது தெரிந்துகொள்ள முடிகிறது. "கருமேகம்போல நகரத்தைச் சூழ்ந்திருக்கிறது ஆலைகளின் புகை. காற்றில் கலந்திருக்கும் அமிலங்கள் நகரத்துக் கட்டிடங்களிலும், பாலங்களிலும் சிலைகளிலும் உள்ள உலோகங்களை உருக்கின, பாறைகளை அரிக்கின்றன. இந்த மாசு தங்களுடைய உடம்பையும் அரிக்கும்; உருக்கும் என்பதை உணராதவர்களா லண்டன்வாசிகள்? மூச்சுத்திணறலும், நெஞ்செரிச்சலும், கண்ணெரிச்சலும் எந்த ஆலைகளிலிருந்து உற்பத்தியாகின்றன என்பது புரியாதவர்களா லண்டன்வாசிகள்?"

1952—ல் 'கொலைப் புகைமூட்டம்' என்று வர்ணிக்கப்பட்ட மோசமான புகை ஐந்து நாட்களுக்கு லண்டன் நகரைச் சூழ்ந்திருந்திருக்கிறது. "காற்றில் மாசு கலந்திருப்பதால் வெளியில் செல்ல வேண்டாம், குழந்தைகள், பெரியவர்கள், சுவாசக் கோளாறு உள்ளவர்கள் கதவுகளை இறுக மூடிவிட்டு வீட்டுக்குள்ளேயே இருக்கவும்" என்று அரசு பொது அறிவிப்பு செய்யும் அளவுக்கு மாசு சூழ்ந்திருக்கிறது. இதற்கு அடுத்த ஆறு மாதங்களுக்குள் பல நூற்றுக்கணக்கானோர் காற்று மாசால் உயிரிழந்திருக்கின்றனர். இப்படியான தொடர் பாதிப்புகள், மரணங்கள், இழப்புகள் எல்லாம் சேர்ந்து படிப்படியாக பிரிட்டனை வேறு ஒரு பாதை நோக்கித் திருப்பியிருப்பதை உணர முடிகிறது. ஒருபுறம், தீவிரமான மாசுக் கட்டுப்பாட்டுச் சட்டங்களையும் மாசு

தவிர்ப்புச் செயல்திட்டங்களையும் முன்னெடுக்கிறார்கள். மறுபுறம், அதிக லாபமற்ற உற்பத்தியைத் தவிர்க்கிறார்கள்.

லண்டனில் அதிகம் கூட்டம் குவியும் 'ப்ரைமார்க்' பல்பொருள் அங்காடிக்குச் சென்றிருந்தபோது இதை உணர முடிந்தது. சென்னையிலுள்ள 'சரவணா ஸ்டோர்ஸ்' அங்காடியுடன் ஒப்பிடத்தக்க எல்லா விலையிலும் எல்லாம் உள்ள அங்காடி இது. ஆச்சரியமூட்டும் வகையில், நான் கையில் எடுத்துப் பார்த்த எந்த ஒரு துணி, பொருளும் பிரிட்டன் தயாரிப்பு இல்லை. சீன, இந்திய, வங்கதேசத் தயாரிப்புகள் ஆக்கிரமித்திருந்தன. "ஒரு உடையால் கிடைக்கும் லாபத்தைவிட அந்த உற்பத்தியால் ஏற்படும் சூழல் இழப்பு அதிகம் என்றால் அதைத் தவிர்த்துவிடுவதே நல்லது என்ற முடிவுக்கு மேற்குலகம் வந்து வெகு நாட்கள் ஆகின்றன. இன்றைக்கும் ஐரோப்பாவில் அதிகம் மாசு உண்டாக்கும் தொழிற்சாலைகளின் பட்டியலில் பிரிட்டன் தொழிற்சாலைகளும் இருக்கின்றன. ஆனால், பிரிட்டனின் மாசை சீனாவின் மாசுடனோ, இந்தியாவின் மாசுடனோ ஒப்பிட முடியாது" என்று சொன்னார் ஆசாத். எனக்குத் திருப்பூரின் வருமானப் பெருக்கமும் நொய்யல் நதியின் சாவும் கண்ணில் தோன்றி மறைந்தன.

விளைவுகள் வெளிப்படையாகத் தெரிகின்றன. உலகிலேயே நிலக்கரியை இன்று அதிகம் வெட்டியெடுக்கும், நுகரும் நாடு சீனா. ஆண்டுக்கு ஒரு கோடி டன் நிலக்கரிச் சாம்பலையும், ஒன்றரைக் கோடி டன் சல்பர் டை—ஆக்சைடு வாயுவையும் சீன ஆலைகள் காற்றில் கலக்கவிடுகின்றன. அப்படியென்றால், லண்டன் காற்றைவிட சீனக் காற்று நூறு மடங்கு அசுத்தமாகத்தானே இருக்க முடியும்?




உலகிலேயே அதிகமாக மாசால் உயிரிழப்பவர்கள் சீனர்கள். அடுத்த இடத்தில் இந்தியர்கள் இருக்கிறோம். ஆண்டுக்கு 25 லட்சம் உயிர்கள் இங்கே மாசால் போகின்றன. பிரிட்டன் தொழில்மயமாக்கலை முன்னெடுத்தபோது அதற்கு முன்னுதாரணம் கிடையாது.


விளைவாகப் பெரும் சேதத்தை விலையாகக் கொடுத்தது. பிரிட்டன் தொடங்கி சீனா வரை ஏராளமான வரலாறுகள் நம் கண் முன்னே இருக்கும்போதும் பாடம் கற்க ஏன் நாம் மறுக்கிறோம்? மேற்குலகு தன்னிடம் நஞ்சைக் குறைத்துக்கொள்ளும் ஒரு உத்தியாக மூன்றாம் உலக நாடுகளைப் பயன்படுத்துகின்றன. நாம் ஒருவேளை நான்காம் உலக நாடுகளை உருவாக்கும் திட்டத்தில் இருக்கிறோமா?

தன் உடலைத் தானே தின்னும் ஒரு விலங்கு கண் முன்னே உலவுகிறது!

# திரைப்பட கலைஞரின்

## தமிழ்த் திரைப்படங்களுக்கும் ஓர் ஆவணக்காப்பகம் வேண்டும்!

**த**மிழ்த் திரைப்படங்களுக்கென ஓர் ஆவணக்காப்பகம் அமைக்கப்பட வேண்டும் என்கிற கோரிக்கை நீண்ட காலமாக முன்வைக்கப்பட்டு வருகிறது. திரைத் துறையினரில் மிகச் சிலர், திரைப்படச் செயல்பாட்டாளர்கள், ஆய்வாளர்கள் எனச் சிறிய குழுவினரால் தொடர்ந்து எழுப்பப்படும் இந்தக் கோரிக்கையின் முக்கியத்துவத்தை அரசு உணர்ந்துகொண்டதாகவே தெரியவில்லை!







இயக்குநர் பாலு மகேந்திரா, தனது திரைப்படங்களிலேயே 'வீடு', 'சந்தியாராகம்' ஆகிய இரண்டு படங்கள்தான் ஓர் படைப்பாளி எனும் வகையில் தனக்கு நிறைவைத் தந்ததாகக் கூறியிருக்கிறார். ஆனால், அவ்விரு படங்களின் படச்சுருள்களை நீண்ட நாட்கள் கழித்து எடுத்துப் பார்க்கையில், அவை சருகுகளைப் போல் உதிர்ந்து கிடந்ததைக் கண்டு பெருந்துயருக்கு ஆளானதைப் பதிவுசெய்திருக்கிறார். அதன் வெளிப்பாடாக ஆவணக்காப்பகத்துக்கான கோரிக்கையை அவர் தன் வாழ்நாளின் இறுதி வரையிலும் முன்வைத்துக்கொண்டே இருந்தார்.

மேற்கத்திய நாடுகளில்தான் 'ஃபிலிம் நெகடிவ்கள்' தயாரிக்கப்பட்டன. அங்குள்ள குளிர்ந்த தட்ப வெப்பநிலை மற்றும் காற்றின் ஈரப்பதத்துக்கு ஏற்றார்போல அவை வடிவமைக்கப்பட்டன. இந்தியா போன்ற வெப்ப மண்டல நாடுகளுக்கு அவை ஏற்புடையதாக இல்லை. காற்றின் ஈரப்பதம் அதிகமாகும் போது, ஃபிலிமால் அதைக் கிரகித்துக்கொள்ள முடியாது. ஃபிலிம் நெகட்டிவின் மூலப்பொருட்களான சில்வர் நைட்ரேட்டும், அமோனியமும் வேதி வினைபுரிந்து, ஃபிலிமை

# கனவு

சீர்குலைத்துவிடும். இதுகுறித்த தெளிவின்மையால் நாம் பல நூறு திரைப்படங்களை இழந்திருக்கிறோம்.

அழியும் தறுவாயில் திரைப்படங்கள்

தென்னிந்தியாவின் முதல் மௌனப் படமான ‘கீசகவதம்’ (1916), தமிழ்—தெலுங்கு மொழிகளின் முதல் பேசும்படமான ‘காளிதாஸ்’ (1931) போன்ற முன்னோடித் திரைப்பட முயற்சிகளின் பிரதிகள்




நமக்குக் கிடைக்கவில்லை. “1931 — 1950 வரையிலும் வெளிவந்த பல தமிழ்த் திரைப்படங்களின் பிரதிகள் ஒன்றுகூட இல்லாமல் அழிந்துபோய்விட்டன” என்கிறார், திரைப்படச் செயல்பாட்டாளர் ‘நிழல்’ திருநாவுக்கரசு.

“மலேசியாவில் உள்ள ‘கொலம்பியா பிக்சர்ஸ்’ எனும் திரைப்பட விநியோக நிறுவனம், தான் விநியோகித்த படங்களின் பிரதிகளைப் பாதுகாத்து வைத்திருந்தது. இன்றைக்கு நாம் காண்கிற கருப்பு—வெள்ளைத் திரைப்படங்களில் பெரும்பாலானவை அந்நிறுவனத்தின் மூலம் நமக்குக் கிடைத்தவைதான். 1935—ல் வெளிவந்த

## கி.ச.திலீபன்

‘பட்டினத்தார்’ திரைப்படத்தின் பிரதி அந்நிறுவனத்திடமிருந்துதான் கிடைத்தது. 1950 வரையிலும் குளிரூட்டப்பட்ட ‘லேப்’ வசதி சென்னையில் இல்லை. அதன் பிறகுகூட ஏவி.எம், பிரசாத் போன்ற பெரிய திரைப்பட நிறுவனங்களால்




மட்டுமே லேப் அமைத்துத் தங்களது படங்களைப் பாதுகாக்க முடிந்தது. சிறிய நிறுவனங்களுக்கு அது சாத்தியமாகவில்லை என்பதைவிட, அதற்கான தேவையை யாரும் உணரவில்லை என்பதுதான் இங்கு குறிப்பிட வேண்டிய விஷயம். பெரிய நிறுவனங்கள் தயாரித்த திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்கள் உரிமம் பெற்று வைத்திருந்த திரைப்படங்களே இன்றைக்கு டிஜிட்டல் வடிவம் கண்டிருக்கின்றன. டிஜிட்டல் வடிவில் மாற்றப்படாமல் 3,000—க்கும் அதிகமான திரைப்படங்கள் அழியும் தறுவாயில் இருக்கின்றன” என்கிறார் திருநாவுக்கரசு.

புணே ஆவணக் காப்பகம்

சில மாதங்களுக்கு முன் புணே திரைப்பட ஆவணக்காப்பகத்துக்குச் சென்றிருந்தேன்.

# Here's what makes NFAI unique

NFAI has undertaken various initiatives throughout history to ensure the legacy of cinema is kept alive

### National Film Heritage Mission

- Around the world, technology has changed in terms of filmmaking and exhibition.
- Analog technology has given way to digital. Even in India, since 2012-13, almost entire film production is on digital media.
- In terms of exhibition, even small towns now have digital projection facilities. The government felt the need to have a specific project, to preserve, digitise and restore the film content of Indian cinema.
- Under the National Film Heritage Mission they are assessing more than 1 lakh film reels and digitising it for easy public access.

### Film Research Programme

- Monograph, Audio-Visual history are the schemes of research on Indian Cinema.
- One can conduct research on any inter-disciplinary aspect of Indian Cinema, under the one-year research fellowship scheme, whereas under the monograph scheme, one can write on any pioneering film personality elaborating his contribution to Indian cinema.
- The fellowship is for six months. Opening every year in the month of July.
- The program began first in 1985, but due to financial difficulties, it had receded in the background. It was revived back in 2015.

### Film Appreciation Course

- NFAI has been conducting its Annual Film Appreciation Course of four weeks duration at Pune in collaboration with FTII SINCE 1974.
- Participants from different professions from all over India are exposed to the best of Indian and World Cinema.
- The srchive also conducts short-term courses on similar lines in collaboration with educational institutions and cultural organizations in other parts of the country as well.
- The course was started with the sole purpose of spreading an academic view towards cinema and also to create a platform for research and serious debates.

### EXCLUSIVE REELS OF RARE FILMS

**Bilva Mangal (1919)**
The latest acquisition of films in NFAI has, Bilva Mangal (1919), a rare silent film acquired from Cinematheque Francais, Paris.

**Devdas (1935)**
A Bengali film, directed by PC Barua

**30 hours of World War II**
The footage consists of Indian forces in action. It also has a rare 1.5-minute clip of Babasaheb Ambedkar.

**Kille Raigad (1967)**
Film on Kille Raigad by Madhav Shinde has narration by Babasaheb Purandare.

அதுதான் இந்தியாவில் திரைப்பட ஆவணக் காப்பகத்துக்கான முன்மாதிரி.

இந்தியாவின் பல்வேறு மொழித் திரைப்படங்களுடன் உலகத் திரைப்படங்களும் அங்கு பாதுகாக்கப்படுகின்றன. திரைப்பட ஆய்வாளர்கள், பொதுமக்கள் என்று யாரும், குறிப்பிட்ட தொகையைக் கட்டணமாகச் செலுத்தி அங்குள்ள திரைப்படங்களைப் பார்க்க முடியும்.

அதன் நூலகத்தில் ஆங்கிலம், இந்தி மற்றும் பிராந்திய மொழிகளில் எழுதப்பட்ட திரைப்படம் குறித்தான ஆய்வு, விமர்சனம் மற்றும் திரைக்கதை நூல்களும், திரை இதழ்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. சத்யஜித் ராய், ரித்விக் கட்டக், ஷ்யாம் பெனகல், சாந்தாராம் போன்ற இந்திய திரைச் சிற்பிகளின் திரைப்படங்கள் குறித்த முக்கியக் கட்டுரைத் தொகுப்புகள், இந்தியத் திரைப்படங்களைப் பற்றிய தகவல் திரட்டு என அங்குள்ள சேகரிப்புகள் ஆச்சரியப்படுத்தின. திரைப்படங்கள் பாதுகாக்கப்படுவதன் அவசியத்தை உணர்ந்து, இப்பணிகள் மேற்கோள்ளப்படுவதை உணர முடிந்தது.

எனக்குத் திருநின்றவூர் சந்தான கிருஷ்ணன் நினைவுக்கு வந்தார். அரசு பல கோடி ரூபாய் நிதி ஒதுக்கி அமைக்கப்பட வேண்டிய ஆவணக் காப்பகத்தை, தனியொரு மனிதராக உருவாக்கியவர் அவர். இசையின் மீது கொண்டிருந்த ஈர்ப்பால் தனது பள்ளிக்காலத்தில் கிராமபோன் ரிக்கார்டுகளை வாங்கியதில் தொடங்கியது அவரது சேகரிப்பு. காலப்போக்கில் கிராமபோன், லாங்ப்ளே, எக்ஸ்டண்டட் ப்ளே ரிக்கார்டுகளோடு திரைப்பட சுவரொட்டிகள், திரைப்படக் காட்சிகளின் புகைப்படங்கள், பாட்டுப் புத்தகங்கள், திரை இதழ்கள் முதலியவற்றைச் சேகரித்துவந்திருக்கிறார்.




அவர் சேகரித்து வைத்திருப்பனவற்றின் எண்ணிக்கை பல ஆயிரங்கள். தனது இல்லத்திலேயே இதற்கென ஒரு தளத்தை ஒதுக்கிப் பாதுகாத்துவருகிறார்.

ஒரு தனிமனிதச் செயல்பாடே இவ்வளவு வீரியத்துடன் இருக்கையில், வரலாற்று ஆவணங்களைப் பாதுகாக்க வேண்டிய அரசு, அந்தப் பொறுப்பை உணராததுதான் துயரம். ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில் ஆவணக்காப்பகம் அமைப்பதற்கான வரைவு அனுப்பப்பட்டது.

அதைச் செயல்படுத்த இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. ஆனால், அதற்கான எந்த முன்னகர்வும் இல்லை. மத்திய அரசின் கட்டுப்பாட்டின்கீழ் இந்தியாவில் புணே, திருவனந்தபுரம், பெங்களூரு, கொல்கத்தா ஆகிய நகரங்களில் ஆவணக் காப்பகங்கள் இயங்கிவருகின்றன. மாநில அரசின் முன்னெடுப்புக்குப் பின்னரே மத்திய அரசின் ஆவணக்காப்பக அமைச்சகம் அதற்குப் பொறுப்பெடுத்துக்கொள்ளும்.

## தேங்கிக்கிடக்கும் திட்டம்

தமிழ்நாட்டில் திரைப்பட ஆவணக்காப்பகம்

# Key advantages of digital cinema:

- **Programming** - wider access to a broader range of content often much earlier, as the cost to the distributor of producing multiple copies of a film is greatly reduced. It is also more economically viable to distribute minority interest films and to provide subtitled or dubbed versions.
- **Ability to screen alternative content** – live cultural events such as opera, sport, music, exhibitions and theatre – offers a good revenue stream, as ticket prices for this 'event' type cinema are 30-50% higher than for traditional film. Some cinemas are reporting revenues 200% to 400% over regular film screenings.
- **Reducing long term operating costs** - the technology is relatively easy to use and could impact on many aspects of the cinema operation and economics, particularly staffing costs. 1 digital projector in a projection box can simultaneously feed other auditoria so long as architectural design supports this.
- **Supporting local filmmaking talent** – digital is now the most common format adopted by students and other filmmakers. A range of mediums including laptops and cameras can plug directly into digital projectors for screenings of films not already within the traditional distribution arena.
- **Maintaining a competitive edge** – digital projection delivers high quality picture and sound which audiences come to expect as standard. Cinema environments are important to audiences and they will migrate to one they consider to offer a superior package although this is not limited purely to projection quality. The picture and sound quality will always be as good as it was at the première. No scratches, jumps, dirt or flicker to disturb the viewing experience.
- **Localised advertising tailored to the particular audience** will be possible
- **Additional smaller auditoria become viable and provide greater choice for local audiences.** A local digital cinema – a digital mini-plex – may have one or two large auditoria (150 to 250 seats) and three or four very small ones (30 to 50 seats). There are now many examples of this type of cinema in the UK and the rest of Europe.
- **Subtitled performances for deaf audiences are increasingly popular.** New systems using digital cinema projectors have overcome many of the previous problems with limited availability of prints with these subtitles. The new approach involves projecting subtitles on to the screen and does not require a special copy of the film. The flexibility of this approach opens up the potential for multi language versions of films to suit a variety of local audiences.

அமைப்பதற்கான நடவடிக்கையைத் தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும். முதற்கட்டமாக, தனியார் நிறுவனங்களின் வசம் இருக்கும் படங்களைப் பெற்று அவற்றை டிஜிட்டல் வடிவில் மாற்ற வேண்டியது முக்கியப் பணி.

இதன் மூலம் எஞ்சியிருக்கும் திரைப்படங்களையாவது தக்கவைத்துக்கொள்ள முடியும். நல்ல விலை கொடுக்க முன்வந்தால், கிடைக்கப் பெறாத அரிய திரைப்படங்களின் பிரதிகள்கூட கிடைக்கலாம். அந்தத் திரைப்படங்களைப் பொதுமக்கள் பயன்படுத்தும் வகையிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். புணே திரைப்பட ஆவணக்காப்பகத்துக்காக ஆரம்பகாலத் திரைப்படங்களைத் தேடித்தேடிச் சேகரித்த பி.கே.நாயரை முன்னுதாரணமாகக் கொண்டு பழைய தமிழ்ப் படங்களைச் சேகரித்துத் தர தன்னார்வலர்கள் முன்வர வேண்டும்.

இறுதியாக, ஏன் திரைப் படங்களைப் பாதுகாக்க வேண்டும்? நமது கலை வடிவங்களிலேயே, ஒவ்வொரு




காலகட்டத்தையும் துல்லியமாகப் பதிவுசெய்திருப்பவை திரைப்படங்கள்தான். 70 ஆண்டுகளுக்கு முன்பிருந்த சென்னைக்கும் தற்போதைய சென்னைக்குமான வேறுபாட்டைக் காட்சிபூர்வமாக உணர வேண்டுமெனில், திரைப்படங்களே அதற்கான ஆதாரம்.




80—களில் வெளியான திரைப்படங்களில் காட்டப்பட்ட சில ஏரி, குளங்கள் இன்று ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதற்குத் திரைப்படங்களே சாட்சியாக விளங்குகின்றன. திரைப்படத்தை வணிகநோக்கில் அணுகாமல், ஒவ்வொரு காலகட்டத்தின் ஆவணம் என்ற உணர்வுடன் அணுகுவதே இன்றைய தேவை.

# போரும் சிறிய நாடுகளும்

இங்கு, அங்கு, எங்கும்
நாடோடியின் பயணம் முடிவதேயில்லை.
சாலையின் இரு புறமும்
நதிகளைப் பார்க்கிறான்,
மலைகளை, வயல்களை, காடுகளை,
கிராமங்களை, மரநிழலை,
பகலில்
இரவில் நட்சத்திர ஒளியையும்
நடக்கும் போது, சாலை நீளும் போது
காலம் தொடரும் போது,
தனிமையில்
சிலசமயம் உறவினர்கள் கீழே விழுந்தும்
நிலத்தில் ஊன்றிய
மரங்கள், வீடுகளைப் போல்.

ஆனால் சக்கரங்கள் சுழல்கின்றன
புதிய முகங்களைப் பார்க்க,
புதியவர்களை,
உறவில் புதிய அத்தியாயங்களை.

கூட இருப்பது
தொடுகைக்கு
சாலைபோல் நினைவு
பனியின் இடையில்
சூர்ய உதயம் முதல் அஸ்தமனம் வரை
உன் இருப்பின்மையை
நான் சுமந்து கொண்டிருப்பது போல
இந்த வாழ்விலும், பிறகும்.

## கலீல் கிப்ரான்

மொழிபெயர்ப்பு:
மீனாட்சி சங்கர்

# நாடோடி

விளைநிலம் ஒன்றில்
ஒற்றை ஆடும் அதன் குட்டியும்
மேய்ந்தபடி இருந்தன..

கழுகு ஒன்று
குட்டி ஆட்டினைப்
பசி பொங்கும் விழிகளால் பார்த்தபடி
வட்டமடித்து வந்தது..
கீழிறங்கி
இரையினைக் கவ்வும் நேரத்தில்
இன்னொரு கழுகும்
பசியோடு வந்து சேர்ந்தது..


எதிரிகளின்
ஆவேசப் போராட்டத்தின்
கூக்குரல்
வானமெங்கும் நிரம்பி வழிந்தது..

ஆடு மேலே நிமிர்ந்து பார்த்து
ஆச்சர்யப்பட்டுப் போனது..
குட்டியிடம் சொன்னது,
“பார்த்தாயா குழந்தாய்..
எத்தனை விநோதம் இது??
இவ்விரு பெரிய பறவைகளுக்கும்
விரிந்து பரந்த இந்த காயம்
போதவில்லையோ??
இப்படி ஒருவரை ஒருவர்
தாக்கிக் கொள்கிறார்களே..!!
சிறகு முளைத்த அந்த
உன்னிரு சகோதரர்களுக்கிடையில்
சமாதானம் ஏற்படட்டும் என்று
இதயபூர்வமாய் நீ
இறைவனை வேண்டிக் கொள்..!!”

குட்டியும் அவ்வாறே
வேண்டிக் கொண்டது..!!

## அசங்க்ராம் ஜெனா

– ஒடியா கவிதை –
தமிழில் : சுப்ரபாரதிமணியன்



# அதன் பிறகு

என் மரணம் ஒருநாள் வரும்
அது பிரகாசமான வசந்தப் புலரியாக இருக்கலாம்
தொலைதூரக் குளிர்கால அந்தியாக இருக்கலாம்
அல்லது, மூடுபனி கவிந்த, உறைந்த
இலையுதிர் காலத்து நிசப்த இரவாக இருக்கலாம்
அந்த நாள்
இருண்டு, பிரகாசமாக அல்லது மேகம் மூடியதாக
இருக்கலாம்
இருந்தும்
மற்றவை போலவே
அதுவும் ஒரு வெறுமையான நாளாக இருக்கும்:
எதிர்காலத்தின் வெற்றுக் கற்பனை
கடந்த காலத்தின் சித்திரம்
அந்த நாள்
என் கண்கள் கருந்துளைகள் போல
என் முகம் சில்லிட்ட சலவைக் கற்கள் போல
இருக்க
விரைந்த தூக்கத்தில் எடுத்துச் செல்லப்படுவேன்
என் வண்ணக் கனவுகளைப் பின்தங்க விட்டு
ஒரு பக்கத்தின் பீதி வெளுப்பின்மேல் என் கைகள்
விழும்
சந்தம் நிறைந்த என் எண்ணங்கள் அவற்றின்
கூட்டிலிருந்து தப்பியோடும்
இக் கடைசிக் கவிதையின் அதிர்வுக்கு என் மனம்
தன்னை இழக்கும்
பிறகு, துயரமிருக்காது, வேதனையிருக்காது, கடும்
சினம் இருக்காது
இடைவிடாமல் என் பெயரை நிலம் அழைக்க
அவர்கள் வந்து சேர்வார்கள் கல்லறைக்குள்
என்னை வைக்க
ஓ, எல்லா நள்ளிரவுகளிலும் என் காதலர்கள்
என் தனித்த இடத்தில் சில பூக்களை வைப்பார்கள்

## ஃபொரோ ஃபரோக்ஸாத் *(1935—67)*

**தமிழில் : ஆர்.சிவகுமார்**

# பிறகு

என் உலகின் திண்ணிய நிழல்கள்
திடீரென நகர்ந்து அகன்று விடும்:
முழு நிலவின் ஒளியில், ஒரு இரவில்
அந்நியர்கள் என் கவிதைகளைத் தொடர்ந்து
வாசிப்பார்கள் . . .
வெயிலார்ந்த ஒரு நாளில் என் நினைவாக
என் சிறு அறைக்குள் அவர்கள் நுழைவார்கள்
என் கண்ணாடிக்கு அருகில் இன்னுமிருக்கும்
என் முடியின் ஒரு கற்றையையும்
உயிரின் அறிகுறிகளாக என் விரல்ரேகைகளையும்
காண்பார்கள்
ஒரு பாய்மரப் படகைப் போல
என் ஆன்மா தப்பிக்கும்
என்னிலிருந்தும் என் சவத்திலிருந்தும் விடுதலை பெற்று
பார்வையின் எல்லைகளில் நான் மறைந்துபோவேன்
முடிவற்ற பறத்தலில்
வீடற்று அலையும் பட்டத்தைப்போல
நாள்கள்
விரைந்து
வாரங்களாக
வாரங்கள் அதே
வேகத்துடன்
மாதங்களாக
கடிகாரத்தின்
கண்களை
உறுத்து
நோக்குவீர்கள்
என் கடிதங்களுக்கும் அழைப்புகளுக்கும் வீணாகக்
காத்திருந்து
ஆனால்
உங்களிடமிருந்தும் உங்கள் இதயத் துடிப்பிலிருந்தும்
வெகுதூரம் விலகி உயிரற்ற என் உடல்
அன்னை பூமியின் குரலற்ற கரங்களில்
அமைதியாக ஓய்வுகொள்ளும்
பின்னாளில்
சூரியனும் காற்றும் மழையும்
என் கல்லறையின் குளிர்க் கல்லை மெருகேற்றும்:
இறுதியில்
மறுபிறப்பின் தொன்மங்களிலிருந்தும்
பேரிலிருந்தும் புகழிலிருந்தும்
விட்டு விடுதலையாகி
இருப்பேன் நான் எப்போதும் விடுதலையாகி

*ஈரானிய கவிஞர், திரைப்பட இயக்குநர். பெண்ணிய நோக்கில் சர்ச்சைக்குரிய நிறுவன எதிர்ப்புக் கவிதைகள் எழுதியவர். ஈரானியக் கவிதை மரபுகளோடு முரண்பட்டவர். 16 வயதில் திருமணம். ஒரு ஆண் குழந்தைக்குத் தாயான பின் 18 வயதில் விவாகரத்து. குழந்தையை வளர்க்கும் உரிமையைச் சட்டபூர்வமாகப் பெற்றார். இருபது வயதில் முதல் கவிதைத் தொகுப்பான The Captive வெளியானது. எதிர்மறையான கவனத்தையும் எதிர்ப்பையும் பெற்றார். ஐரோப்பாவில் சில மாதங்கள் தங்கிய பிறகு ஈரான் திரும்பினார். The Wall, The Rebellion என்ற இரண்டு கவிதைத் தொகுப்புகள் வெளியாயின. திரைப்பட இயக்குநர் ஒருவரோடு உண்டான நட்பின் ஆதர்சத்தால் The House is Black (1962) என்ற தலைப்பில் தொழுநோயால் பாதிக்கப்பட்ட ஈரானியர்கள் குறித்தத் திரைப்படம் ஒன்றை இயக்கி வெளியிட்டார். இப்படம் பல சரவதேச விருதுகளைப் பெற்றது. படப்பிடிப்பின்போது, ஒரு ஈரானியத் தொழுநோய்த் தம்பதியின் ஆண் குழந்தை ஒன்றின் மீது ஏற்பட்ட பாசத்தால் அதைத் தத்தெடுத்துக் கொண்டார். 1964இல் கிஸீஷீமீலீமீகூ் ஙிவீகூ்மீலீ என்ற இன்னொரு தொகுப்பு வெளியானது. கார் விபத்தொன்றில் 1967 பிப்ரவர் 13 ஆம் தேதி இறந்தார்.*

# தடங்கள்

நகரின் தடங்கள் அனேகமாய்
பராமரிப்பில் மேம்பாட்டில்
ஒன்று அடைபட
ஒன்று திறக்கும்

காத்திருப்பின் கடுமைக்கு
வழிமறிப்பே
குப்பையின் எதிர்வினை
சுதந்திர வேட்கை
அடிக்கடி சாக்கடைக்குள்
பீறிட்டெழும்

மண் வாசனை
நெல் மணம்
மாங்குயிலின் கூவல்
தும்பி தேன்சிட்டு
என்னுடன் கோலத்தில்
புள்ளிகளாய்
இருந்த காலத்தின்
தடம்
மங்கலாய் மிளிர்ந்து
மறையும்

நகரம் நீங்கிச் செல்லக்
காணிக்கை தந்தாலே
நெடுஞ்சாலை அனுமதிக்கும்
ஆளுயரச் சக்கரங்கள்
விரையும் வாகன
வீச்சிலும் தென்படும்
கோடுகள் இல்லாப் புள்ளிகள்
மட்டும்
காய்ந்த மண் நெடுகத்
தடமே இல்லை

அரியதாய் எங்கோ
ஈர மண்
அதுவும் சுமக்கும்
டிராக்டரின் தடம்

சத்யானந்தன்


Nalli®
Happy diwali
தீபாவளி
வாழ்த்துக்கள்
தமிழ்

‘தங்கல்’ இயக்குநரின் அடுத்த படம் குறித்த அறிவிப்பு வெளியாகி உள்ளது. அடுத்த படத்துக்கு ‘சிச்சோர்’ என்று தலைப்பு வைத்துள்ளார் நிதேஷ் திவாரி. ‘எம்.எஸ்.தோனி’ படத்தில் தோனியாக நடித்த சுஷந்த் சிங் ராஜ்புத் ஹீரோவாக நடிக்க, ஷ்ரத்தா கபூர் ஹீரோயினாக நடிக்கிறார். இதில் சிறப்பு என்னவென்றால், படத்தில் நடிக்கும் முக்கியக் கதாபாத்திரங்கள் அனைவரின் இளவயது புகைப்படத்துடன், நடுத்தர வயது புகைப்படமும் போஸ்டரில் இடம்பெற்றுள்ளது.



பாலிவுட்டில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இந்தி நடிகர் ரன்வீர் சிங், நடிகை தீபிகா படுகோன் திருமணம் நவம்பர் 14,15—ம் தேதிகளில் நடைபெறவுள்ளது. இதற்கான திருமண அழைப்பிதழை இருவரும் தங்களின் ட்விட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ளனர். தீபிகா நடித்து வெளியான ‘பத்மாவத்’ படத்தில் வில்லனாக நடித்திருந்தார் ரன்வீர். இருவரும் இந்தத் திரைப்படத்தின் மூலம் காதல்வயப்பட்டனர். தற்போது, திருமண அழைப்பிதழை இருவரும் வெளியிட்டுள்ளனர்.

## வாழ்க மணமக்கள்!

## மாலை மாற்றும் தீபிகா!





# தூக்கு துரை!

## தூக்கிவிடும் துரை!

அஜித் தந்தை மகன் என இரட்டை வேடங்களில் நடிக்கும் படம், ‘விசுவாசம்’. இதில் அவரின் ஒரு கதாப்பாத்திர பெயர் வெளியாகியுள்ளது. ‘தூக்கு துரை’ என்ற அந்தப் பெயரை அஜித் ரசிகர்கள் சமூகவலைத்தளங்களில் ட்ரெண்டாக்கி வருகின்றனர். மகன் அஜித்துக்கு நயன்தாரா ஜோடி சேர்ந்துள்ளார். இந்தப் படத்தைத் தயாரித்துள்ள சத்ய ஜோதி ஃபில்ம்ஸ் போஸ்டர்களை வெளியிட்டது. நடிகர் அஜித்துக்கு முதல் முறையாக இமான் இசையமைத்துள்ளார். இந்தப் படம் அடுத்த ஆண்டு பொங்கல் பண்டிகையில் வெளியாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# ‘நோட்டா’ மூலம் ‘நோட்டா’ கொட்டவைப்பவர்!

‘அர்ஜுன் ரெட்டி’ மற்றும் ‘கீதா கோவிந்தம்’ தெலுங்குப் படங்களின் மூலம் புகழ் பெற்றவர் விஜய் தேவரகொண்டா. இவர் தமிழில் அறிமுகமாகும் படம் ‘நோட்டா’. இப்படத்தின் ட்ரெய்லர் சமீபத்தில் ரிலீஸானது. தமிழ் மற்றும் தெலுங்கில் வெளிவரும் ‘நோட்டா’ படத்தில், விஜய் தேவரகொண்டா ஜோடியாக மெஹ்ரீன் நடிக்கிறார். தேவரகொண்டாவுக்கு ஏகப்பட்ட வரவேற்பு எகிறியிருக்கிறது.



வெளுத்து வாங்கும் நோட்டா!

ஸ்ரீதேவியின் வாழ்க்கை வாழ்க்கை வரலாற்றை ஆவணப் படமாக எடுக்க அவரது கணவர் போனி கபூர் தீவிர முயற்சியில் இருக்கிறார். இதில் ஸ்ரீதேவியாக நடிகை ரகுல் பிரீத் நடிக்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதேசமயம், பிரபல நடிகர் என்.டி.ஆரின் வாழ்க்கை வரலாறு படமாக எடுக்கப்பட்டு வருகிறது. இதில் என்.டி.ஆராக நடிப்பது அவரின் மகன் பாலமுரளி கிருஷ்ணா. தற்போதைய முதல்வர் சந்திரபாபு நாயுடுவாக நடிக்கவிருப்பது ராணா டகுபதி. இப்படத்திலும் நடிகை ஸ்ரீதேவியாக நடிக்க இளம் நடிகை ரகுல் பிரீத் சிங்கை தேர்வு செய்துள்ளனர்.

## வரலாறாகிறார் ஸ்ரீதேவி!



ராதா கிருஷ்ணகுமார் இயக்கத்தில் பிரபாஸ் நடிக்கும் படத்தின் படப்பிடிப்பு ஐரோப்பாவில் நடந்து வருகிறது. இப்படத்தில் பிரபாசுக்கு ஜோடியாக பூஜா ஹெக்டே நடிக்கிறார். இவர் தமிழில் ‘முகமூடி’ படத்தில் நடித்தவர். பிரபாசுக்கு கதாநாயகி ஆகியிருப்பதன் மூலம் பூஜாவின் கால்ஷீட்டுக்காக தெலுங்குப் படவுலகம் காத்திருக்கிறது. தற்போது உருவாகி வரும் இப்படம், தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய மூன்று மொழிகளில் வெளியாகவிருப்பதால், இந்த ஜோடிக்கு வரவேற்பு இன்னும் கூடியிருக்கிறது.

## பூஜாவின் நேரம்!

## பொன்னான நேரம்!



## வாழ்நாள் அனுபவத்தைத் தந்த படம்!





### படமும் வாழ்நாள் அனுபவம்தான்!

சரியான திட்டமிடல் இருந்தால் குறைந்த நாள்களிலேயே படப்பிடிப்பை முடித்து பட்ஜெட்டைக் குறைக்கலாம் என்பது திரைப்பட உருவாக்கத்தில் கடைபிடிக்க வேண்டிய முக்கிய வழிமுறை! கேரளத்தில் தற்போது வெளியாகியுள்ள 'ஈ மா யூ' திரைப்படம் 18 நாள்களில் படப்பிடிப்பை முடித்துள்ளது. படம் திரையரங்குகளில் வெற்றிகரமாக ஓடிவருவதோடு பல்வேறு திரைப்பட விழாக்களிலும் திரையிடப்பட்டுவருகிறது.கேரள மாநிலத்தில் 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த காயங்குளம் கொச்சுன்னி என்பவரது வாழ்க்கை வரலாற்றைத் தழுவி உருவாகிவரும் படத்தின் படப்பிடிப்பு 161 நாள்கள் நடைபெற்றுள்ளது. இதில் நடிக்கும் நிவின் பாலி, "161 நாள்களும் ஊக்கமளிக்கும் நபர்களுடன் பணியாற்றியுள்ளேன். வாழ்நாள் அனுபவத்தை இந்த ஒரு படம் கொடுத்துள்ளது" என படப்பிடிப்பு நிறைவடைந்தது குறித்து நிவின் பாலி தனது ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

# கீர்த்தியின் கீர்த்தி!



கேரளத்திலும் பட்டையைக் கிளப்பிக் கொண்டிருக்கும் படமாக வசூலில் வெற்றி நடைப் போடுகிறது விஜய் கீர்த்தி நடித்த ‘சர்க்கார்’. கீர்த்திக்கு கேரளத்தில் மிகவும் வரவேற்பு! இயக்குநர் பிரியதர்ஷனின் கனவுப்படம் ‘மரக்கார்: அரபிக்கடலிண்டே சிம்ஹம்’. 16—ம் நூற்றாண்டில் பிரிட்டிஷ்காரர்களைத் தீவிரமாக எதிர்த்த கேரளாவில் வாழ்ந்த கடற்படைத் தலைவனான குஞ்சலி மரக்கார் என்பவரின் வாழ்க்கை வரலாற்றுப் படத்தில், முக்கியக் கதாபாத்திரத்தில் கீர்த்தி சுரேஷ் நடிக்கிறார். ‘சண்டக்கோழி 2’, ‘சர்கார்’ ஆகிய படங்களில் பிஸியாக இருக்கும் கீர்த்தி சுரேஷ், மலையாளத்தில் தன்னை அறிமுகப்படுத்தியவர் பிரியதர்ஷன் என்பதால், அவர் கேட்டதும் மறுக்காமல் ஒப்புக் கொண்டுள்ளார். மலையாள சினிமாவிலேயே இதுவரை இல்லாத அளவுக்கு மிகப்பெரிய பட்ஜெட்டில் இந்தப் படம் தயாராக இருக்கிறது.

## (கேரள) மண்ணின் மகள்!

# மங்காத தமிழென்று

## வெற்றுச் சொல் அல்ல; வரலாற்றுச் சொல் !

ஒரு நாட்டில் வாழும் ஒருவர் வாழும் நாட்டாலும், பேசும் மொழியாலும், அந்த நாட்டில் வாழும் உரிமை படைத்த இனத்தாலும் என மூன்று வகைகளில் அழைக்கப்படுகிறார். தமிழ்நாட்டிற்கு உரிய பகுதிகள் பறிக்கப்பட்ட பொழுது ம.பொ.சி,




நேசமணி, இராசாசி போன்றோர் உரிமைக்குரல் கொடுத்ததையும், தமிழ் இனம் அயலக நாடுகளிலும் மாநிலங்களிலும் பாதிக்கப்பட்ட பொழுது தமிழக மக்கள்




தலைவர்கள் காப்பாற்ற முன்வந்ததும் நாடு, இனம் என்பதற்கு சரியான சான்றுகளாகும்.

“தமிழியக்கம்‘ என்ற சொல்லை இன்று உருவாக்கப்படும் சொல்லாகக் கொள்ளக்கூடாது. தமிழோடு அரவணைத்து பல வரலாறுகளை உள்ளடக்கிய சொல்லாகும். தமிழியக்கம் என்ற சொல், “கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த மொழி’ என்ற பெருமை கொண்ட தமிழ் மொழியின் உயிர்ப்பைக் காக்கும் சொல்லாகும்.

தமிழ்மொழிக்கு வரும் கேடுகளை நீக்கிக் காக்கும் காவலர்களாக ஒவ்வொரு காலகட்டத்திலும் தொல்காப்பியர், பவணந்தி, அமிர்த சாகரர், இளங்கோ அடிகள், சங்கப் புலவர்கள் என எண்ணற்றோர் வாழ்ந்ததால் தமிழியக்கத்திற்கான தேவை இருக்கவில்லை.

சங்கே

# முழங்கு!

ஆறு. அழகப்பன்

தமிழ்மொழி "தன் நிலை தாழாமை' என்ற நிலையிலிருந்து நிலைகுலையும் பொழுது, அதை எதிர்கொள்ள அவ்வப்போது தமிழியக்கங்களைத் தோற்றுவித்த பெருமக்கள் பலருண்டு. அண்ணாமலை அரசர், ஆசிரியர் கல்கி, "ரசிகமணி' டி.கே.சி., ஆர்.கே சண்முகனார், இசையரசு தண்டபாணி தேசிகர் ஆகியோர் தமிழிசை இயக்கமாகி தமிழிசையைக் காத்தனர்.

14.11.1901 பாண்டித்துரை தேவரால் மதுரை தமிழ்ச்சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. 16.4.1938 — இல் தமிழ்வேள் உமாமகேசுவரனார் கரந்தை தமிழ்ச்சங்கம் கண்டார். இவை தோற்றுவாயாக அமைய பல சங்கங்கள் ஊர்ப் பெயர்களாலும் புலவர்கள் பெயர்களாலும் இயங்க ஆரம்பித்தன.



தமிழ்மொழியைத் தூய்மைப்படுத்த வேண்டும் ஆங்கில மொழியின் ஊடுருவலில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் தினமணி 21.6.14 அன்று 370 அமைப்புக்களை அழைத்து தலைநகர் தில்லியில் இரண்டு நாள் மாநாடு நடத்தி உலகம் முழுதும் தமிழை எப்படிப் பரப்பலாம் என்று கருத்தரங்கு நடத்தியது. மேதகு அப்துல் கலாம் "தினமணி' இலக்கிய அமைப்புகளின் மாநாட்டைத் தொடங்கி வைத்தார். தமிழ் செழிக்க அவர் ஆறு அம்சத் திட்டத்தை அறிவித்தார்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் 1945—இல் ஒரே இரவில் பாடிய நூல் "தமிழியக்கம்'. 73 ஆண்டுகளுக்கு முன் அவர் எந்த சிந்தனையில்




தமிழ் நலம் கெடாமல் இருக்க வேண்டும் என்று பாடினாரோ அவர் பாடிய கருப்பொருளில் உள்ளவை இன்றும்கூட நடைமுறைத் தேவையாக இருப்பதை நாம் உணர முடிகிறது.

அவர், வணிகர், அரசியல் தொடர்பாளர்கள், புலவர்கள், குடும்பத்தார், கோயிலார், அறத்தலைவர், விழா நடத்துவோர், கணக்காயார், மாணவர், பாடகர், கூத்தர், பாட்டியற்றுவோர், சொற்பொழிவாளர், ஏடெழுதுபவர், பெரும் செல்வந்தர் என்ற பலவகையினர் எப்படி தமிழைப் பேணவேண்டும் என்று பாடியுள்ளது இன்றும் பொருந்துகிறது. 73 ஆண்டுகளுக்கு முன் கண்ட அதே நிலை நீடிக்கிறது.

73 ஆண்டுகளுக்கு முன் நாம் இன்று தெருவில் காணும் வணிக விளம்பர பலகையில் ஆங்கிலம்


இருப்பதைப் பாடுகிறார்

வாணிகர் தம் முகவரியை
வரைகின்ற பலகையில் ஆங்கிலமா
வேண்டும்
மாணுயர்ந்த செந்தமிழால்
வரைக என அனைவர்க்கும் சொல்ல வேண்டும்

இவ்வரிகளை அனைவரும் மேடைகளில் கூறுகிறோம். விளம்பரப் பலகையில் உள்ள ஆங்கிலத்தை அழிக்க 73 ஆண்டுகளும் தார் கொண்டு அழிக்கும் போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

பெரும் செல்வர்களுக்கு அவர் பாடுவது இன்றைக்கு மிகவும் பொருத்தமாக இருக்கிறது.

தமிழுக்கு பொருள் கொடுங்கள்



தமிழறிஞர் கழகங்கள் நிறுவிடுங்கள்
தமிழ்ப்பள்ளி கல்லூரி தமிழ்
தமிழ் ஏடு பலப்பலவும் நிலைக்கச்செய்வீர்!

என்று அறிவுறுத்தும் நீண்ட பாடலாக இத்தொகுப்பில் உள்ளது.




உலகத் தமிழர்களை ஒரு குடையின் கீழ்கொண்டு வரும் முயற்சிகள் பல நடக்காமலில்லை. பாவணார் "உலகத் தமிழ்க்கழகம்' உருவாக்கினார். அதன் கிளைகள் உலகத் தமிழர்கள் வாழும் நாடுகளில் உள்ளன. முன்னாள் முதல்வர் எம்.ஜி. இராமச்சந்திரன் உலகத் தமிழ்ச்சங்கங்களை ஒருங்கிணைக்கும் முயற்சியில் ஈடுபட்டு மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கத்தைத் தொடங்கி வைத்தார்.

அதற்கு கட்டடம் இப்பொழுதுதான் கட்டப்பட்டு செயல்படத் தொடங்கி உள்ளது.

வி.ஜி.பி சந்தோசம், உலக நாடுகளில் 26 திருவள்ளுவர் சிலைகளை நிறுவியிருக்கிறார். உலகத் தமிழர்களுக்கு இடர் வரும்பொழுது பழ. நெடுமாறனால் உருவாக்கப்பட்ட உலகத் தமிழர் பேரமைப்பு குறிப்பிடத்தக்க பணிகளை ஆற்றி வருகிறது.

உலக நாடுகளில் பல மாநாடு கருத்தரங்குகளை பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமனின் பன்னாட்டு தமிழுறவு மன்றம் நடத்தியுள்ளது. திருக்குறளை அடிப்படையாக வைத்து உலகத் திருக்குறள் பேரவையை உருவாக் கியவர்களில் குறிப்பிடத் தக்கவர் குன்றக்குடி அடிகளார், முனைவர் மோகன்ராசு ஆகியோர்.

இவ்வேளையில் தமிழை செம்மொழியாக நடுவண் அரசு ஏற்றுக் கொண்ட வரலாற்றுச் செய்தியை அறிதல் வேண்டும். ஒரு நூற்றாண்டுக்கு முன் தமிழ்மொழி புறக்கணிப்பு சென்னைப் பல்கலைக்கழகத்தில் உருவான பொழுது "தமிழ்மொழி செம்மொழி' என்ற அழுத்தமான கருத்துக்களை பரிதிமாற் கலைஞர் நூலாகப் பதிவு செய்தார்.

அவர் கருத்துகளை மையமாக வைத்து தமிழை செம்மொழியாக்கிட பல சங்கங்கள் மாநாடுகளையும், கருத்தரங்குகளையும் இந்திய மாநிலங்களில் நடத்தின. அவற்றுள் தலைநகர் தமிழ்ச் சங்கம், பெங்களூர் தமிழ்ச் சங்கம், தில்லி தமிழ்ச் சங்கம், பன்னாட்டு தமிழுறவு மன்றம், தமிழ்ச் சுரங்கம் முதலிய அமைப்புகள் குறிப்பிடத்தக்கன. இப்போராட்டம் இரண்டாண்டுக்கு மேல்நடந்தன.

மணவை முஸ்தபாவும், புலவர் சுந்தரராசனும் இரட்டைக்குழல் துப்பாக்கியாகச் செயல்பட்டனர். மேதகு அப்துல்கலாம் குடியரசுத் தலைவராக

இருந்தபோது, நாடாளுமன்ற உரையில் தமிழ் செம்மொழியாக மத்திய அரசின் பட்டியலில் இடம் பெறும் என்ற நிலையான தொண்டினைச் செய்து மறைந்தார்.

இந்த அளவோடு நின்று விடாமல் அன்றைய முதல்வர் கருணாநிதி மத்திய செம்மொழி



நிறுவனத்தையும் தமிழகத்திற்கு கொண்டுவந்து அமைத்து விட்டார். இப்பணி அவர் முன்னெடுத்த வள்ளுவர் கோட்டம், குமரியில் திருவள்ளுவார் சிலை ஆகியவற்றுடன் ஒப்பிடத்தக்கது.

காமராஜர் முதலமைச்சராக இருந்த பொழுது உயர்நிலைப் பள்ளிகள் 8,500 என்ற எண்ணிக்கையிலும் நடுநிலைப்பள்ளிகள் 32,000 என்ற எண்ணிக்கையிலும் தொடங்கப்பட்டன. இன்று ஆயிரக்கணக்கான பள்ளிகள் மூடப்படுகின்றன. மூடப்பட்ட பல பள்ளிகளில் 20, 30 மாணவர்களே உள்ளனர் என்று ஊடகச் செய்திகள் வருகின்றன.

தனிப்பட்ட முறையில் தம் தொண்டுகளால் தமிழியக்கமாக விளங்கிய உ.வே.சா., தனித்தமிழ் இயக்கத் தந்தை மறைமலையடிகள், கா.சு. பிள்ளை, ரா.பி. சேதுப்பிள்ளை, ச.சோ. பாரதியார், பாரதிதாசன், சிதம்பரநாதனார், தெ.பொ.மீ., பாவாணர், க. வெள்ளைவாரணர், பெருஞ் சித்திரனார், முத்தமிழ் அறிஞர் கி.ஆ. பெ. விசுவநாதம், சாலை இளந்திரையன், நா. அருணாசலம், தமிழண்ணல் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானவர்கள் மறைய இன்று அவ்விடங்கள் பூர்த்தி செய்ய முடியாத வெற்றிடமாக உள்ளன.

இந்தி தேசிய மொழி என்ற நிலைபேறு அடைந்துவிட்டதால் வளரும் மாணவ சமுதாயம் அம்மொழியைப் படிக்க




முற்பட்டு சென்ற ஆண்டைவிடப் பத்து விழுக்காடு கூடுதலாகப் படிக்கின்றனர் என்ற செய்தி வருகிறது.

தமிழ், தமிழ்நாடு, தமிழினம் என்ற முப்பெரும் உயிரோட்டம் கொண்ட அமைப்புகள் உலகத் தமிழர் இயக்கம், உலகத் தமிழ் இயக்கம் என்று உருவாவதை பிற மொழி ஊடுருவல், புதிதாய் பிறந்த நாகரிகம், மரபு மீரிய வாழ்க்கை உள்ளிட்டவை தின்றுவிடும் திமிங்கலங்களாக உருவெடுத்திருக்கின்றன.

தமிழியக்கம் வெற்றுச் சொல்லல்ல, வரலாற்றுச் சொல் என்பதை இன்றைய இளைஞர் சமுதாயத்துக்கு யார் எடுத்துச் சொல்வது?

ஊடகங்களிடையே பிறமொழி ஊடுருவல் அதிகரித்துவரும் நிலையில் மீண்டும் ஒரு தமிழியக்கம் என்பது காலத்தின் கட்டாயம்!

கவிதை

# தேவனின் திருக்கரம்


அடர்ந்த கருமை சூழ்ந்த வனாந்திரம்
விறகுவெட்ட வந்தவனின் கால்கள்
புதைகுழியில் சிக்கியது
கொஞ்சம் கொஞ்சமாக
மண்குழம்பு அவன் உடலை
விழுங்கிக் கொண்டிருந்தது
எத்தனையோ கோடி மனிதர்களை
உண்டு செரித்த வயிறல்லவோ
அதற்கு!
அவனது வாய் இறைவனின்
நாமங்களை உச்சரித்து அழைத்தது
அவனது கண்களும் மண்ணுக்குள்
புதைந்தன
மேலே நீட்டிக் கொண்டிருந்த
அவனது கைகளை
ஒரு உருவம் பற்றியது
சேற்றிலிருந்து மேலே வந்த அவன்
கண்களால் அவ்வுருவத்தைப் பார்த்தான்
வேதத்தையும், சடங்குகளையும்
மறுத்துப் பேசியதால்
தன்னுடைய கிராமத்தினரால்
கல்வீசித் துரத்தப்பட்ட
புத்தரல்லவோ இவர்
எனது கையினால் வீசப்பட்ட கற்களால்
காயமடைந்த கரங்களா
என் உயிரைக் காப்பாற்றியது
என்றெண்ணி வெட்கித் தலைகுனிந்தான்
உயிரற்ற ஓலைச் சுவடிகளில்
இறைவனைத் தேடினோம்
உயிர்களின் மேல் காட்டும் கருணையே
கடவுளெனப் போதித்த
கண்ணெதிரே நிற்கும்
ஜீவனுள்ள மனிதனை மறந்து!

ப.மதியழகன்

# புத்தக விமர்சனம்

## இடக்கை

### நூல் ஆசிரியர்: எஸ்.ராமகிருஷ்ணன்




**உயிர்மை பதிப்பகம்**

No 11/29, Subramaniam Street,
Abhiramapuram, Chennai - 600018

**விலை : ரூ. 375**

தமிழகத்தில் முன்னணியில் நிற்கும் எழுத்தாளர்களில் ஒருவரான எஸ். ராமகிருஷ்ணன் அண்மையில் எழுதி வெளியிட்ட நாவல் "இடக்கை". தமிழில் அரவாணிகளை மையக்கதாபாத்திரமாக கொண்ட நாவல்கள் குறைவு. அவ்வகையில் இது, முதல்முயற்சி. இதன் மையக்கதாபாத்திரங்களில் ஒன்றான அஜ்யா பேகம் ஒரு திருநங்கை. அவளை மிகச்சிறந்த கதாபாத்திரமாக எஸ். ராமகிருஷ்ணன் காட்டுகிறார்.

மாமன்னன் ஔரங்கசீப் மூலமாக அஜ்யா குறித்து பதியப்படுவது, அளவற்ற அன்பின் வார்த்தைகள். "அஜ்யா, இந்த உலகம் பெண்களின் அன்பால்தான் உயிர்ப்புடன் உள்ளது. அந்த அன்பை உணராத ஆண்களில் நானும் ஒருவன்". நாவலில் வரும் அஜ்யாவின் துயரம் வெகுவாக பாதிக்கிறது. மறக்கமுடியாத கதாபாத்திரமாக அவள் மனதில் தங்கிவிடுகிறாள்.

ஔரங்கசீப்பின் உயிலில் ஒரு சொல்லாக மட்டும் இடம் பெற்றுள்ளார் அஜ்யா, அந்த வரலாற்றுக் குறிப்பை வைத்துக் கொண்டு மகத்தான நாவல் ஒன்றை எஸ் ராமகிருஷ்ணன் படைத்திருப்பது அவரது சாதனை. அவ்வகையில் 'இடக்கை' தமிழின் மகத்தான நாவல்கள் வரிசையில் இணைந்திருக்கிறது.




நாங்குநேரி வாசஸ்ரீ

இன்று மேகலாவின் பள்ளியில் பழைய மாணவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து தங்கள் அனுபவங்களைப் பகிரும் நாள். பத்தாண்டுகளுக்கு முன்பு அப்பள்ளியிலிருந்து பன்னிரண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றுச் சென்ற அவர்கள் முதன் முதலில் மீண்டும் சந்தித்த போது மகிழ்ச்சிப் பெருமிதத்தில் நனைந்தனர்.

மேகலா தான் முழு ஏற்பாட்டையும் செய்திருந்தாள்.

'ஒவ்வொருவரா வந்து அவரவர்களுடைய குடும்பத்தப் பத்தி சொல்லிட்டு தங்களோட அனுபவத்த பகிர்ந்துக்கலாம்.' முதலில் நான் ஆரம்பிக்கிறேன்.

மேகலாவுக்குப் பின் ஒவ்வொருவராகத் தொடர்ந்தனர்.

இப்பவும் முன்னால நின்னு பேசரது பிரச்சினையா. பேசாம மோட்டுவளய பாத்து பேசுடா. அனைவரும் கலாய்க்க ஆரம்பித்தனர் சுந்தரை.




யாரெல்லாம் பேசி முடித்தார்கள் என குறித்துக் கொண்டே வந்த மேகலா.

இன்னும் என்ன வசந்தனைக் காணோம் என்றவுடன் அனைவரும் ஒருசேர கிளம்ப நேரமாகியிருக்கும் வந்து விடுவான் , வீடு நடக்கும் தூரத்தில் தானே இருக்கிறது என்றனர்.

நேரம் போகப் போக அனைவருக்கும் ஒரே குழப்பம். வசந்தனுக்கு என்னவாயிற்று. ஏன் வரவில்லை என்று.

ஒருவாறு விளையாட்டு, சாப்பாடு என அனைத்து நிகழ்வுகளும் முடிந்த பின்னும் அவன் வராமல் போகவே

இனிப்புப் பொட்டலங்களுடன் அவன்வீட்டிற்குப் படையெடுத்தனர் நண்பர்கள்.

மிகுந்த தயக்கத்துடன் அனைவரையும் வரவேற்றான் வசந்தன். எல்லாக் கேள்விகளுக்கும் மென்று முழுங்கி சரியாகப் பதிலளிக்காதது நண்பர்களுக்கு வருத்தத்தைத் தந்தது.

நம் வசந்தனா இவன். கூத்தும் கும்மாளமுமாக அனைவரையும் வம்பிழுத்துக்கொண்டே அலைவான்.

'விரல்களை வாயில் வைத்து விசிலடிக்க ஆரம்பித்தால் நிறுத்தவே மாட்டான்.' ஞாபகம் இருக்கிறதா?

# SAKTHI CASH & CARRY

245-247 High Street North, East Ham,
London E12 6SJ
+44(0)20 8471 4713

இந்திய – இலங்கை மளிகைப் பொருட்கள்
குறைந்தவிலையில் உயர்தரமாகவும் சுவையாகவும் கிடைக்கும்
தாயகத்தின் அனைத்துவிதமான பொருட்களும் கிடைக்கும்

வந்து பாருங்கள்!!!

வியந்து போவீர்கள் !!!




# SWATHI CASH & CARRY

306-308 High Street North, East Ham,
London E12 6SA
+44(0)20 8586 7648

‘எப்படி இவ்வளவு மாற்றம். வேட்டி சட்டை அணிந்து திருநீறு பட்டை போட்டு பழுத்த ஞானி போல’.

கவனித்தாயா. அவன் மனைவியைக் கூட சரியாக அறிமுகப் படுத்தவில்லை.

நன்றாக அவமானப் படுத்திவிட்டான்.நாம் அவன் வீட்டிற்குபோயிருக்கவே கூடாது.

அவன் வீட்டருகே இருந்த குளக்கரைப் படிகளில் அமர்ந்துஅங்கலாய்த்துக் கொண்டிருந்தனர் நண்பர்கள்.



இனியும் அமைதியாக இருப்பது தவறு. தீர்மானித்தாள் மேகலா.

‘உங்களுக்கென்ன தெரியும் வசந்தனைப் பற்றி. காலையில் பேசினீர்களே. கனவுகளைப் பின் தொடர்ந்து ஓடினோம். வாழ்க்கை யைஅமைத்துக் கொண்டோம். ஆனால் காலம் நிற்க வில்லை. பத்து ஆண்டுகள் வினாடிகள் போல் கழிந்து விட்டது. இனியாகிலும் ஒவ்வொரு




வருடமும் தவறாது சந்திக்க வேண்டுமென்று.’

நீங்கள் சொன்ன அந்த பத்தாண்டுகளில் என்னவெல்லாம் ஆகிவிட்டது தெரியுமா?

பொதுத் தேர்வுக்குப்பின் மார்பகப் புற்று நோய் பாதித்ததால் அவனின் தாயார் இறந்து விட்டாள். அவனின் தாய் வழிப் பாட்டி சொத்துக்கள் கைவிட்டுப் போகக் கூடாது என்பதைக் காரணம் காட்டி பத்தொன்பதே வயதான தன் சொந்தக்காரப் பெண்ணை இரண்டாம் தாரமாக அவன் தந்தைக்கு மணமுடித்துக் கொடுத்தாள்.

தன்னை விட ஒரு வயதே மூத்த செல்வியைத் தந்தையின் இரண்டாம் மனைவி என ஏற்க முடியாமல் வீட்டை விட்டு வெளியேறி திருவண்ணாமலை ஆசிரமத்தில் சேர்ந்தான் வசந்தன். அதன் பின் நல்ல வேலை திருமணம் என யோசிக்கும்போது

முன் நின்று திருமணம் நடத்தி வைக்க சொந்தங்களும் முன் வரவில்லை. ஊர்க் காரர்களின் தொந்தரவு வேறு.

காலம் அவனை நிம்மதியாக விடவில்லை. இரண்டே வருடத்தில் தந்தை நோய்வாய்ப் பட்டு இறந்து விடவே, சொத்துக்கள் அனைத்தையும் விற்று மருத்துவச் செலவு செய்தது போக மீதத்தை செல்வியின் குடிகார மாமன் பிடுங்கிக் கொண்டு தொல்லை தருவதைக் கேள்வியுற்று மனமிரங்கி அவளுக்காக மீண்டும் இந்த ஊருக்கே வந்துவிட்டான்.

ஊர்க் காரர்கள் மட்டும் சும்மா விட்டார்களா என்ன.

என்ன தம்பி. உங்கப்பாருக்கு ரெண்டு வருசம் பொண்டாட்டியா இருந்திட்டா, அதனால நீ கட்டிக் கிடலாம் னு நினைப்பு வச்சு வந்திருந்தா அத மறந்திடு.

ஒரு புறம் ஊர்க் காரர்களின் வம்புப் பேச்சு, மறுபுறம் செல்வியின் அழுகை. இரண்டிற்கும் முடிவு கட்ட சிவன் கோவிலில் ஓதுவாராகச் சேர்ந்துவிட்டான்.

தம்பி சாமி கோவில்ல வேல செய்யுது. தப்பு செய்யாது என ஊர் மக்களும் ஏற்றுக் கொண்டதால் அவனால் நிம்மதியாக செல்வியுடன் இந்த ஊரில் காலம் தள்ள முடிகிறது. . இந்நிலையில் அவனால் எப்படி அவளை அறிமுகப் படுத்த முடியும்.

மாற்றாந்தாய் என்றா? தந்தையின் மனைவி என்றா? சுருக்கென உறைத்தது நண்பர்களுக்கு


தேவி!
வானுலகில், பூவுலகில், வேறெங்கும்
தேடினாலும் கிடைக்காத
indian express foods
இட்லி / தோசை மா
இலண்டனில் மட்டுமே கிடைக்கும்
indian express foods
+44 20 8133 5144
+44 7878 89 68 37

# அறிவோம் தமிழர்

## இரக்கத்தின் வடிவமே இராமலிங்க வள்ளலார்

மக்களிடையே துறவிகளுக்கு என்றும் மதிப்பிருக்கிறது. மனம் வெறுத்தோ, அவசரப்பட்டோ, ஆத்திரமுற்றோ, வாழ்வில் கசப்படைந்தோ, குறிக்கோளுக்காகவோ, உலக நலன் கருதியோ, உள்ளொளியாலோ துறவியானோர் பலர். எனினும், "துறந்தவர்கள் பெருமைக்கு எல்லையில்லை' என்பது திருக்குறள். உடலுக்கு உணவும் மருந்தும், உள்ளத்துக்கு அறிவுரையும் ஆறுதலும், உயிருக்கு வழிபாடும் பயிற்சியும் ஆகிய தீர்வுகளைத் துறவியரிடத்தில் எதிர்நோக்கி மக்கள் வணங்கி வருகின்றனர் .

வாழையடி வாழையென வழிவழியாக வந்த திருக்கூட்ட மரபில் திருவள்ளுவர் தொடங்கி நாயன்மார்கள், ஆழ்வார்கள், சித்தர்கள், ஞானியர் முதலியோரெல்லாம் இம்மரபில் வந்தவர்களே. இவ்வரிசையில் வள்ளலார், புதுமைத் துறவி, பொதுமைத் துறவி, புரட்சித் துறவி, சமுதாயத் துறவி, சீர்திருத்தத் துறவியாவார். வள்ளலார் வெள்ளாடைத் துறவி. தூய வெண்ணிற ஆடையையே ஓராடையாக அணிந்தார். காவி உடுத்தியதில்லை. துறவுக் கோலத்துக்குக் குறியீடாக இருந்த காவி தரிக்காது வெள்ளாடை உடுத்திக் கொண்டார்.

மணிமேகலையைப் போல அமுதசுரபி இல்லாமல் சத்தியத் தருமசாலையில் எளியோர்க்கும் ஏழை மக்களுக்கும் பசியாற்றும் ஞானியாக வடலூரில் விளங்கினார். இராமலிங்கர் 151 ஆண்டுகளுக்கு முன்பு சத்தியத் தருமசாலை யில் 1867—ஆம் ஆண்டில் ஏற்றிய அடுப்பு இன்றும் அணையாமல் நாள்தோறும் ஆயிரம் மக்களுக்கு அன்ன பாலிப்பு அளிக்கிறது.




வள்ளலார் வாழ்ந்த பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருபத்து நான்கு பஞ்சங்கள் ஏற்பட்டன. அப்பஞ்சங்களை அடிகளார் நேரில் கண்டார். பசியுடன் அலைந்தோரையும் இறந்து பட்டோரையும் எண்ணி எண்ணி இவர் மனத்தில் நடுக்கம் கொண்டு அழுதார். பசியால் நேர்ந்த முப்பதுக்கு மேற்பட்ட அவல நிலைகளைக் கூறி நம் மனத்தை அடிகளார் பிழிகிறார்.

பசியால் பஞ்சடைந்து குழிந்து போகின்றது; காது கும்மென்று செவிடுபடுகின்றது; நா உலர்ந்து வறளுகின்றது; மூக்கு குழைந்து அழல்கின்றது; தோல் மெலிந்து உணர்ச்சி கெடுகின்றது; வாய் உளறுகின்றது; பற்கள் தளருகின்றன; நரம்புகள் குழைந்து நைகின்றன; நாடிகள் கட்டுவிட்டுக் கழறுகின்றன; எலும்புகள் பூட்டுவிட்டு நெக்குவிடுகின்றன; இதயம் வேகின்றது; மூளை சுருங்குகின்றது; வயிறு பகீரென்று எரிகின்றது; உயிரிழந்து விடுவதற்கு நெருங்கிய அடையாளங்கள் தோன்றுகின்றன. பசியினால் இவ்வளவு துன்பங்களும் உயிரினங்களுக்கு ஏற்படுகின்றன.

இத்தனை துன்பங்களும் உணவுண்ட பின் நீங்குகின்றன. பசி போக்கலே மாபெரும் புண்ணியமாகும்.

அனைத்துச் சமயங்களும் உயிர் நலம் காத்தலையே அடிப்படையாகக் கொண்டவை. இராமலிங்கரும் எல்லா உயிர்களிடமும் அன்பு கொண்டார். அன்பைக் கடந்த இரக்கமும் உருக்கமும் இராமலிங்க அடிகளாரை முழுமையாக்கின.

"உயிர்தான் உயிர் இரக்கந்தான் ஒன்றல்லது இரண்டிலை

இரக்கம் ஒருவில் என் உயிர் ஒருவும்' என்பது திருவருட்பா.

இரக்கமே தன் உயிர் என்றார். "உயிரும் இரக்கமும் தனித்தனியாகக் கூற முடியாதவை. பொது நலத்தில்தான் உயிரிரக்கம் பொங்கிப் பெருகும்' என்றார்.

இந்த நிலையில்தான் பசிக்கு உணவு, உணவுக்கு நெல், நெல்லுக்குக் கதிர், கதிர்தான் பயிர், பயிர் வாடினால் உயிர் வாடும் என்று நெகிழ்ந்து

# பெருமை

முனைவர்

## ஔவை நடராசன்

நெகிழ்ந்து நினைந்து நினைந்து உடம்பு நனைந்து நனைந்து "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம்' வாடினார்.

பசித்துயரத்தோடு அந்நாளைய வரிவிதிப்பு முறையும் உழவர்களைப் பெரிதும் துயருக்குள்ளாக்கின. எளியோர் வட்டிக்குக் கடன் வாங்கி அவதியுற்றனர். அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, ஆகியவற்றுக்கும் இடர்ப்பட்டுக் கடன்பட்டு வறுமையுற்ற நிலையில்



தவித்ததை இராமலிங்கர் நேரில் கண்டார். அதனை "வட்டிமேல் வட்டிகொள் மார்க்கத்தில் நின்றீர்' என்று கடிந்தார்.

சிதம்பரத்திற்கு வடக்கே மருதூர் என்னும் சிற்றூரில் வாழ்ந்த இராமையா பிள்ளையின் ஐந்து மனைவியரும் மகப்பேறின்றி மறைந்தனராம். ஆறாம் முறையாகச் சின்னம்மையைத் திருமணம் செய்து அவருக்கு ஐந்தாம் மகனாக இராமலிங்க அடிகளார் 05—10—1823—ஆம் ஆண்டில் தோன்றினார். அண்ணன் பொறுப்பில், குடும்பத்தினர் தாய் வீடாகிய பொன்னேரியை அடுத்த சென்னை நோக்கி வந்தனர். சென்னையில் தொடக்கக் காலத்தையும், தென்னார்க்காடு மாவட்டச் சிற்றூர்களில் பிற்காலத்தையும், வடலூரில் நிறை வாழ்வையும் நடத்தினார். மருதூரில் பிறந்திருந்தாலும், தம்முடைய நினைவு தெரிந்த நாளிலிருந்து




முப்பதாண்டுகளுக்கு மேலாகச் சென்னையிலேயே வாழ்ந்தார்.

இராமலிங்கரின் வாழ்க்கை வரலாற்று குறிப்புகள் முழுவதும் கிடைக்கப் பெறவில்லை. ஆங்காங்கே பாடல்களில் புதைந்து கிடக்கும் செய்திகள் சிலவும் அவரின் வரலாற்றை அறிய உதவுகின்றன. தெய்வமணிமாலையும், கந்தர் சரணபத்தும் முதன் முதலில் கந்தகோட்டத்திற் பாடப் பெற்றவை. வள்ளலார், முதன்முதலிற் பாடி வழிபட்ட சென்னையில் கந்த கோட்டத்தைப் போற்றிப் பாடிய "ஒருமையுடன் நினது திருமலரடி' பாடல் உலகறிந்தது.

வள்ளலார் வலியுறுத்திய கொள்கைகள் பல. அவற்றுள் சில:




1. கடவுள் ஒருவரே. 2. ஒளி வடிவில் அன்போடு வழிபட வேண்டும். 3. சிறு தெய்வ வழிபாடு கூடாது. 4. தெய்வங்களின் பெயரால் உயிர்ப்பலி கூடாது. 5. சாதி, சமய வேறுபாடுகளை இல்லாமல் நீக்க வேண்டும். 6. எவ்வுயிரையும் தம்முயிர்போல் எண்ணி ஒழுகும் உயிரிரக்க ஒருமைப்பாட்டுரிமையைக் கடைபிடிக்க வேண்டும். 7. எளியோர்க்குப் பசி தவிர்த்தலாகிய இரக்கமும் உருக்கமுமே பேரின்ப வீட்டின் திறவுகோல். 8. மூடப் பழக்க வழக்கங்களை அறவே ஒழிக்க வேண்டும். 9. சாத்திரங்களும் புராணங்களும் முடிவான உண்மையைத் தெரிவிக்கவில்லை.

பொதுவாக, துறவியர் தம் சார்பாகச் சத்திரம், மடம், கோயில் என்ற நிறுவனங்களை அமைத்துக் கொண்டிருந்தனர். புத்தர் கூறிய மும்மணிகளை மனத்தில் கருதி, “சங்கம்‘, “சாலை’, “சபை’ என்ற நிறுவனங்களை வள்ளலார் வடலூரில் உருவாக்கினார். ஆங்கில அரசின் கொடுமையை வசைபாடி வருந்தினாலும் சமயப் பணி செய்ய வந்த கிறித்தவர், ஒரு பள்ளியை, மருத்துவ மனையை, கோயிலை அமைத்துக்கொள்வார்கள். மதுரையில் மேநிலைப்பள்ளியும், மருத்துவமனையும், மாதா கோயிலும் அடுத்தடுத்து அமைந்து ள்ளதைக் காணலாம். அந்த வகையில், உடற்பசி நீக்கச் சாலையும், மனப்பசி போக்கக் கல்வி புகட்டும் சங்கமும், உயிர் உயர்வுபெறச் சபையும் என வள்ளலார் அமைத்தார் என்றும் கருதலாம்.

வள்ளலார் வாழ்ந்த வடலூரின் திசைதோறும் சிதம்பரமும், திருப்பாதிரிப் புலியூரும், திருமுதுகுன்றமும் புகழ்வாய்ந்த பெருங் கோயில்களாக அமைந்துள்ளன. எனினும், மரபார்ந்த கோயில்களின் வழிபாட்டு




முறைகளிலும் வள்ளலாருக்கு மனம் இசையவில்லை. எண்கோண வடிவில் ஞானசபையைத் தானே வடிவமைத்து ஒளிவழி பாட்டை நிறுவினார். அருட்பெருஞ்சோதியை வழிபாட்டுக்குரிய பண்பாகவும் தனிப்பெருங் கருணையைப் பயனாகவும் உணரும் வகையில் சமரசச் சன்மார்க்கப் பெருமக்களுக்கு மறைமொழியாகவும் வழங்கினார்.

ஏழு நிறத் திரைகள் நீக்கிய பிறகு ஒளிச்சுடரைக் கண்டு வழிபடுகிற அமைப்பினை “இயற்கை விளக்கம்‘ என்றும் அறிவுறுத்தினார். சங்கத்தில் திருக்குறள் வகுப்பை முதன் முதலாகத் தொடங்கிய பெருமிதமும் வள்ளலாரைச் சாரும்.

சன்மார்க்கச் சங்கம் 1865—ஆம் ஆண்டிலும், சத்தியத் தருமசாலை 1867—ஆம் ஆண்டிலும், சத்திய ஞானசபை 1872—ஆம் ஆண்டிலும் அமைந்தன. வள்ளலார் உளமுருகிப் பாடிய பாடல்களுக்கு ஈடில்லை. “இறையருட் பெருநிலையைத் தமிழ் மொழியே அளிக்கும் தமிழ் மொழிக்கு நிகரில்லை, தமிழே தாய்மொழி’

என்றெல்லாம் பாடினார். “உருக்கத்துக்குத் திருவாசகம்‘ என்பார்கள். “உருக்கத்தின் ஆழத்துக்குத் திருவருட்பா’ என்று கூறலாம். “அருள்’ என்ற சொல்லைத் திருவருட்பா ஆளாத இடமேயில்லை. திருவருட்பாவுக்கு உருகாதார், திருவாசகத்திற்கும் உருகார். திருவாசகத்தில் வள்ளலார் தான் கலந்துள்ளதைப் பாடுகிறார் திருவருட்பாவிலும் நாம் கலந்து திளைப்போம்.

தெருக்கூத்து, நாடக மேடைகளில் 1930—ஆம் ஆண்டில் தொடங்கி மக்கள் விரும்பிக் கேட்டு மெய் மறந்து உருகி மகிழ்ந்த பாடல்களான “கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் குளிர்தருவே’, “கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே’, “வானத்தின் மீது மயிலாடக் கண்டேன்’, “வருவார் அழைத்து வாடி’ முதலிய இசைப்பாடல்கள் இசைக்கு இசையும், பக்தர்களை வசப்படுத்தும் பரிவும் ஈர்ப்பும் உருக்கமும் கொண்டவையாக இருந்தன.

பழகிய சொற்கள், அழகிய தமிழ் இரக்கம், உருக்கம் கொண்ட பாடல்களுக்குத் தாமே ஒரு பண் வரிசை அமைத்துப் பாடல்களைப் பாடிக் கொண்டே தைப்பூசப் பெருவிழாவில் அடியவர்கள் வடலூருக்கு நடந்து வருவதை இன்றும் காணலாம்.

இந்த நன்னாள் இராமலிங்க வள்ளலார் சன்மார்க்க நெறியில் உலக மக்களைப் பொதுமைக்கு ஆளாக்க வருவிக்க உற்ற பொன்னாளாகும்.

கவிதை

# மின்னல் கயிறுகள்

நேற்று வரை ஒடக்கான் அடித்தவன்
இன்று நான் ஒரு ஒடக்கான்.
என்னை அடித்தது
அவள் கூரிய விழிகள்.

நாக்கில் தொட்டுக்கொண்டு
தரையில் பம்பரம் குத்தினேன்.
கயிறு என் கையில்.
இன்று நான் தலையாட்டும் பம்பரம்.
கயிறு
அவள் வளையல் ஒலிகளில்.

கோலிக்குண்டுகள் உருட்டி
எத்தனை பேர் முட்டிகள்
பெயர்த்தேன்.
இன்று
கண்ணீர் முட்டி
கனவுகள் முட்டி
அவள் நினைவுகளில் மோதி
பலத்தகாயம்.
அவள்
பார்வையே விபத்து ஆகும்.
அவள்
பார்வையே "பேண்டேஜ்" போடும்.

யார் கேட்டார்கள்
பம்பரமே இல்லாமல்
பம்பரம் விடும்
"பதினாறு" வயதின்
இந்தமின்னல் கயிறுகளை?

ருத்ரா




## இரண்டாம் பாகம் : காஞ்சி முற்றுகை

## “திருப்பாற் கடல்” 25

புள்ளலூர்ச் சண்டையைப் பற்றிக் குண்டோதரன் கூறிய விவரங்களைக் கேட்கக் கேட்க, மேலும் மேலும் அதைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்னும் ஆவல் ஆயனருக்கும் சிவகாமிக்கும் பொங்கிப் பெருகியது. முக்கியமாகப் போர்க்களத்தில் மாமல்லர் நிகழ்த்திய அதி அற்புத தீரச் செயல்களைப் பற்றிக் கேட்பதில் சிவகாமி அடங்காத தாகம் கொண்டிருந்தாள். குண்டோதரனும் குதூகலத்துடன் அந்த வீரச் செயல்களை வர்ணித்தான்.



“ஆஹா! போர்க்களத்தில் எதிரிகளுக்கிடையில் புகுந்து மாமல்லர் வீர வாளைச் சுழற்றியபோது எப்படியிருந்தது தெரியுமா? அது கேவலம் வாளாகவே தோன்றவில்லை. திருமாலின் க்ராயுதத்தைப் போலவே சுழன்று ஜொலித்தது! அந்த வாளிலிருந்து கணந்தோறும் நூறு நூறு மின்னல்கள் மின்னின. ஒவ்வொரு மின்னலும் ஒவ்வோர் எதிரியின் தலையைத் துண்டித்து எறிந்தது...”




இப்படி வர்ணித்துக் கொண்டே இருந்த குண்டோதரன் திடீரென்று நிறுத்தி, “குருவே! (“விஹாரம்“ என்பது புத்தபெருமானின் கோயிலும் பௌத்த பிக்ஷுக்கள் தங்கும் மடமும் சேர்ந்து அமைந்தது. ‘சைத்யம்‘ என்பது புத்த பகவானின் தனிப்பட்ட ஆலயமாகும்.) இந்த விஹாரத்திலிருந்த வயோதிக புத்த பிக்ஷு எங்கே?” என்று கேட்டான்.

“அப்பனே! நாங்கள் வந்ததிலிருந்து அவர் பெரும்பாலும் இங்கே இருப்பதில்லை. அநேகமாக சைத்யத்திலேயே இருக்கிறார். தினம் இரண்டு தடவை இங்கே வந்து ‘எங்களுக்கு என்ன வேண்டும்‘ என்று விசாரித்துவிட்டுப் போய்விடுகிறார்!” என்றார் ஆயனர்.

“குருவே! அவரை அவசரமாகப் பார்க்க வேண்டும், பார்த்து விட்டு வருகிறேன்” என்று சொல்லிவிட்டுப் போனான்.

குண்டோதரன் விஹாரத்திலிருந்து கிளம்பி வாசலில் வந்தபோது சூரியன் அஸ்தமித்து அந்தி மயங்கிக் கொண்டிருந்த நேரம். ஆனால், அன்று சாதாரண அந்தி நேரமாகக் காணப்படவில்லை. இரவானது திடீரென்று இருண்டு திரண்டு நாற்புறமும் சூழ்ந்து வந்ததாகத் தோன்றியது. இதற்குக் காரணம் என்னவென்று குண்டோதரன் வானத்தை நோக்கியபோது, வடக்குத் திக்கில் மைபோல் கறுத்துக் கொண்டல்கள் திரள் திரளாக மேலே எழுந்து வருவதைக் கண்டான்.

“ஆஹா! இன்றிரவு பெருங்காற்றும் மழையும் திருவிளையாடல் புரியப் போகின்றன. பகலெல்லாம் அவ்வளவு புழுக்கமாயிருந்த காரணம் இதுதான் போலும்!” என்று குண்டோ




தரன் தனக்குள் சொல்லிக் கொண்டான்.

அவர்கள் தங்கியிருந்த விஹாரத்திலிருந்து சற்றுத் தூரத்தில் தனித்திருந்த பாழடைந்த புத்த சைத்யத்தைக் குண்டோ தரன் நெருங்கியபோது உள்ளேயிருந்து பேச்சுக்குரல் வந்தது. வெளியிலேயே இருள் கவிழ்ந்து சூழ்ந்திருந்த நிலையில், சைத்யத்துக்குள் குடிகொண்டிருந்த அந்தகாரம் எப்படியிருந்திருக்கவேண்டுமென்று சொல்ல வேண்டியதில்லை. அந்தக் கன்னங்கரிய இருளின் உதவியால் குண்டோ தரன் பேச்சுக் குரல் வந்த இடத்துக்கு வெகு சமீபத்தில் போய் மூச்சுக்கூடக் கெட்டியாக விடாமல் தூண் மறைவில் நின்றான். பின்வரும் சம்பாஷணை அவன் காதில் விழுந்தது.

“உடனே, இந்தக் கணமே, அவர்களை அழைத்துக் கொண்டு கிளம்புங்கள். பொழுது விடிவதற்குள்ளாக வராக நதியைத் தாண்டிவிட வேண்டும். வழியிலுள்ள கிராமங்களில் வண்டி கிடைத்தால் ஏற்றிக்கொண்டு போங்கள். எப்படியும் நாளைச் சூரியோதயத்துக்குள் வராக நதியைத் தாண்டி விடுங்கள்.”

“அவர்கள் கிளம்ப மறுத்தால்...?”

“தொல்லைதான், ஏதோ ஒரு பிசகினால் நான் போட்ட திட்டமெல்லாம் வீணாய்ப்போய்விட்டது. ஆனாலும், புத்த பகவான் அருளால் எல்லாம் ஒழுங்காகிவிடும். அவர்களிடம் எதையாவது சொல்லிப் புறப்படச் செய்யுங்கள். இங்கே பெரிய சண்டை நடக்கப் போவதாகச் சொல்லுங்கள். இதெல்லாம் ஒன்றும் பலிக்காவிட்டால், திருப்பாற்கடல் உடைப்பு எடுத்துக் கொண்டு விட்டதாகச் சொல்லுங்கள்!”

“சுவாமி! இது என்ன சொல்கிறீர்கள்?”




“ஆம்; திருப்பாற்கடல் ஏற்கனவே அலைமோதிக் கொண்டிருக்கிறது. புத்தபகவான் கருணையினால் இன்று மழை பெய்தால் கட்டாயம் கரை உடைத்துக் கொள்ளும்...” என்று கூறி நாகநந்தி தமது ஆழ்ந்த பயங்கரக் குரலில் சிரித்தார்.



புத்த பிக்ஷு மேலும் கூறிய மொழிகள் முன்னைக் காட்டிலும் மெதுவான குரலில் வெளிவந்தன! “அப்படியும் அவர்கள் கிளம்பாமல், உடைப்பு எடுத்து வெள்ளமும் வந்துவிட்டால் என்ன செய்ய வேண்டும் தெரியுமா? விஹாரத்தில் இன்னும் ஒரு தெப்பம் மீதி இருக்கிறதல்லவா? அதில் ஏற்றிக்கொண்டு, போன மாதம் பார்த்த பாறை மேட்டுக்குப் போய்ச் சேருங்கள். மற்றவர்கள் எப்படியானாலும் சிவகாமியைக் கட்டாயம் காப்பாற்றியாக வேண்டும், தெரியுமா சுவாமி!”

மேற்படி சம்பாஷணையில் கடைசிப் பகுதியைக் கேட்டுக் கொண்டிருந்தபோது, குண்டோ

தரனுக்கு நெஞ்சு படபடவென்று அடித்துக்கொண்டது. நாகநந்தியின் சிரிப்பு அவனுடைய தேகத்தைச் சிலிர்க்கச் செய்தது. அன்று ராத்திரி ஏதோ பெரிய விபரீதம் ஏற்படப் போகிறதென்பதையும், அதைத் தடுக்கவேண்டிய பொறுப்பு தன்னுடைய தலையில் சாய்ந்திருக்கிறதென்பதையும் அவன் உணர்ந்தான். அந்தக் காரியத்தில் தனக்கு உதவி புரியும்படி தான் வழிபடும் தெய்வமாகிய பழனிமலையில் வீற்றிருக்கும் முருகக் கடவுளை வேண்டிக்கொண்டான்.

சம்பாஷணை முடிந்ததும் பிக்ஷுக்கள் இருவரும் சைத்யத்திலிருந்து வெளியில் வந்தார்கள். அவர்களைப் பின் தொடர்ந்து குண்டோ தரனும் வந்தான். இதற்குள்ளாக மாலை போய் இரவு வந்து நன்றாக இருட்டிவிட்டது. வடகிழக்கிலிருந்து திரண்டு வந்த மேகங்கள் வானத்தைப் பெரும்பாலும் மூடியிருந்தாலும், தெற்கிலும் மேற்கிலும் இன்னும் சில நட்சத்திரங்கள் தெரிந்தன.

சைத்தியத்திலிருந்து வெளியேறிய பிக்ஷுக்களில் ஒருவர் அருகிலிருந்த விஹாரத்தை நோக்கிச் சென்றார். மற்றொருவர் சைத்யத்தைச் சுற்றிக் கொண்டு தென்மேற்குத் திசையை நோக்கிச் சென்றார்.

ஒரு கணம் குண்டோ தரனுடைய மனத்தில் ஒரு போராட்டம் நிகழ்ந்தது. விஹாரத்துக்குப் போய் ஆயனருக்கு எச்சரிக்கை செய்ய வேண்டாமா என்று எண்ணினான். ஆனால், என்ன விதமாக எச்சரிக்கை செய்வது? எப்படியும் அவர்கள் காப்பாற்றப்படுவார்கள் என்று மேற்படி பிக்ஷுக்களின் சம்பாஷணையிலிருந்தே நன்கு தெரிந்தது. எனவே, அச்சந்தர்ப்பத்தில் தன்னுடைய வேலை நாகநந்தியைப் பின் தொடர்வதுதான் என்று குண்டோ தரன் தீர்மானித்தான். அவ்விதமே அவரைப் பின்தொடர்ந்து குண்டோ தரன் சற்று தூரத்திலேயே நடந்து சென்றான். கொஞ்ச தூரம் போனதும் ஒரு மரத்தின் பின்னால் கட்டியிருந்த குதிரையை அவிழ்த்து அதில் நாகநந்தி ஏறிக் கொண்டார்.

ஆஹா! திருட்டுபோன குதிரை மறுபடியும் கிடைக்கப் போகிறது! என்று குண்டோ தரன் எண்ணிக் கொண்டான். கணத்துக்குக் கணம் வேகமாகிக் கொண்டிருந்த காற்றினாலும் இருட்டினாலும் நாகநந்தி குதிரை மேல் ஏறியபோதிலும் மெதுவாகவே போக வேண்டியிருந்தது. எனவே அவரைத் தொடர்ந்து போவது கஷ்டமில்லை. சில சமயம் குதிரை அடிச் சத்தம் முன்னால் கேட்கிறதோ பின்னால் கேட்கிறதோ என்பது சந்தேகமாயிருந்தது. இரண்டு பக்கத்திலும் கேட்பது போலவும் இருந்தது. இது வீண் பிரமை என்று எண்ணிக் கொண்டு மேலே சென்றான்.




ஏறக்குறைய மூன்று நாழிகை வழிவந்த பிறகு, எதிரே நீண்ட மலைத்தொடர் போன்ற ஓர் இருண்ட கரை நெடுந்தூரத்துக்கு நெடுந்தூரம் தென்பட்டது. அதே சமயத்தில் கண்ணைப் பறிக்கும் மின்னல்களுடனும், அண்டம் அதிரும் இடி முழக்கங்களுடனும் மழை பெய்யத் தொடங்கியது. மின்னல் வெளிச்சத்தில் நாகநந்தி மேட்டின் ஓரமாக இருந்த ஒரு மரத்தில் குதிரையைக் கட்டிவிட்டு அந்தக் கரையின் மேல் ஏறுவது குண்டோ தரனுக்குத் தெரிந்தது. அதே இடத்தில் மேட்டின் மீது அவனும் ஏறினான். மழையில் நனைந்த காரணத்தினால் கரையின் மண் சேறாகி வழுக்கத் தொடங்கிவிட்டபடியால் மேட்டில் ஏறுவது சுலபமாயில்லை. கடைசியில், கரையின் அடியிலிருந்து வளர்ந்திருந்த மரத்தின் உதவியால் கஷ்டப்பட்டு ஏறிக் குண்டோ தரன் கரை உச்சியை அடைந்தபோது, பளீரென்று வீசிய மின்னல் வெளிச்சத்தில் ஓர் அபூர்வ பயங்கரக் காட்சி தென்பட்டது.

கரைக்கு அப்பால் இருந்த திருப்பாற் கடல் என்னும் ஏரி புயற்காற்றினால் கொந்தளித்தது. ஒரு மகா சமுத்திரத்தைப்போல் அலை மோதிக் கொண்டு காட்சி அளித்தது. கொந்தளித்து எழுந்த அலைகள் மின்னல் வெளிச்சத்தில் வெள்ளை வெளேரென்று ஜொலித்தபடியால், உண்மையிலேயே திருப்பாற்கடல் என்னும் பெயர் அந்த ஏரிக்கு அச்சமயம் மிகவும் பொருத்தமாயிருந்தது. அதே நேரத்தில் குண்டோ தரன் நின்ற இடத்துக்குச் சற்றுத் தூரத்தில் அவனுடைய உடம்பின் இரத்தத்தையெல்லாம் சுண்டச் செய்யும்படியான இன்னொரு பயங்கரத் தோற்றமும் தென்பட்டது.

அலைமோதிய ஏரிக்கரையில் கையை உயரத் தூக்கிக் கொண்டு நின்ற நாகநந்தி, 'ஹா ஹா' என்று பேய்க் குரலில் சிரித்த சத்தமானது, புயல் முழக்கத்தின் ஓசையையும் அலைகளின் ஆரவார ஒலியையும் அடக்கிக் கொண்டு மேலெழுந்தது.

நாகநந்திக்குப் பக்கத்தில் ஏரிக்கரையைப் பிளந்து கொண்டு ஒரு சிறு கால்வாய் வழியாகத் தண்ணீர் ஓட ஆரம்பித்தது. நாகநந்தி அடிகளின் காலடியில் ஒரு மண்வெட்டி கிடந்தது!

(சபதம் தொடரும்)


தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
தீபாவளி
வாழ்த்துக்கள்

# காப்போம் மூலிகைகள்

## மூலிகை மரங்கள் வளர்ப்போம்

**வ**டகிழக்குப் பருவமழை தொடங்க இருக்கிறது. உழவு தொடங்கி மானாவாரியாக மேட்டு நிலங்களில் புஞ்சை தானியங்களை விதைக்கத் தொடங்குவார்கள். அதுபோல் மரம் நடுவதற்கும் ஏற்ற பருவம் இதுவே. ஒரு பக்கம் வனங்களில் மரங்கள் எந்த அளவு பாதுகாப்பாக இருக்கிறது என்பதை அறிய முடியவில்லை. எனினும், இன்று விவசாயிகளும், புதிதாக விவசாயத்தில் ஈடுபடுவோரும், சில பொது நல அமைப்புகளும்,




வன ஆர்வலர்களும் மரம் வளர்க்கும் பணியில் ஈடுபடுகிறார்கள். இவ்வாறு மரம் நடுவோர் குறிப்பிட்ட சில மரங்களை மட்டுமே நடுகிறார்கள். பலவகையான நாட்டு மரங்கள், மருத்துவ குணமுள்ள மரங்களை நடுவது இல்லை. இவை




கிடைப்பதும் அரிதாயுள்ளது. சாதாரணமாக வேம்பு, புங்கன், கொன்றை, வாகையுடன் தூங்குமூஞ்சி, குல்மோகர் போன்றவைதான் ஏராளமாகவும், மலிவாகவும் கிடைக்கின்றன. நல்ல மருத்துவ குணமுள்ள மரங்கள் அரிதாகிவிட்டன.

உதாரணமாக, ஒரு காலத்தில் பரவலாகக் காணப்பட்ட வாத நாராயணன் மரம் இன்று மிக அரிதாகிவிட்டது. இம்மரத்தின் இலைச்சாறு வாதநோயை குணப்படுத்தும். இன்று பலருக்கும் கைகால் குடைச்சல், வலி, வீக்கம், மூட்டுவலி பிரச்சனைகள் பெருகிவிட்டன. தமிழ் மருத்துவத்தில் பிரண்டை, வாத நாராயணன், தழுதாழை ஆகியவை வாத நோய்க்கான மருந்துகள். நாட்டு வைத்தியர்கள் இம்மூலிகைகளைக் கையாள்வது உண்டு. காலப்போக்கில் இவை காணாமல் போய்விட்டன.

செப்டம்பர் மாதம் 15—ம் தேதி உலக ஓசோன் தினம் தமிழ் நாட்டில் கொண்டாடப்படாமல் கடந்து விட்டது. முகநூலைத் திறந்தால் புதியபுதிய தினங்கள் பற்றிய அறிவிப்புகள் வருகின்றன. அப்பாதினம், அம்மாதினம், தாத்தா தினம், முதியோர் தினம், இளைஞர் தினம், குழந்தைகள் தினம் என்று இனம் புரியாத ஏகப்பட்ட தினங்கள். இப்படியெல்லாம் தேடிப்பிடித்து கொண்டாடப்படும் போது, உலகம் வாழவேண்டும் பசுமை பொங்கவேண்டும் என்ற பொதுநல நோக்கில் ஐ.நா அறிவிக்கும் தினங்கள் பற்றி நாம் அதிகம் அறிவதில்லை. இனியாவது ஓசோன் தினத்தை நாம் கொண்டாடலாமே.

ஓசோன் தினம் என்றதும் “சிப்கோ’



# பொக்கிஷம்




## ஆர்.எஸ். நாராயணன்

இயக்கம் நினைவுக்கு வருகிறது. இந்தியா முழுவதும் மரங்களை வளர்க்கவேண்டும் என்ற உணர்வை சிப்கோ இயக்கமே தூண்டியது. 1973—1974 காலகட்டத்தில்




உத்தராஞ்சலில் உள்ள தாசோலி மாவட்டத்தில் “கோபேஸ்வர் மண்டல்’ என்ற கிராம சுயராஜ்ய இயக்கத்தின் மகளிர் அமைப்பினர் வனவிளைபொருள்களை ஜீவாதாரமாகக் கொண்டு பலவகையான குடிசைத் தொழிலில் ஈடுபட்டு வந்தனர். 1973—இல் வனத்துறை அதிகாரிகள் அலகாபாத்தை மையமாகக் கொண்ட ஒரு நிறுவனத்திற்கு கோபேஸ்வர் மண்டல் கிராமத்தில் உள்ள வனப்பகுதியில் உள்ள மரங்களை வெட்ட அனுமதி கொடுத்தார்கள். அந்நிறுவனம் கிரிக்கெட் மட்டை, ஹாக்கி மட்டை போன்ற விளையாட்டுப் பொருள்களைத் தயாரிக்கும் நிறுவனம். “மனிதர்கள் உயிர் வாழ மரம் வேண்டும், வனமே எங்கள் ஜீவாதாரம்‘ என்று குரல் கொடுத்து அந்த ஒப்பந்தக்காரர்களை தாசோலி மகளிர்குழு விரட்டி




அடித்தது. இச்செய்தி அக்கம் பக்க கிராமங்களில் பரவியது.

வனத்துறையினர் எந்த கிராமத்திற்கு வந்தாலும் கிராம மக்களின் எதிர்ப்பு தொடர்ந்தது. தாசோலி கிராம சுயராஜ்ஜிய இயக்கத்தின் நிறுவனர் சாந்தி பிரசாத்பட் , சிப்கோ இயக்கத்தின் பின் புலமாகச் செயல்பட்டு வந்த சூழ்நிலையில் தான், சுந்தர்லால் பகுகுணா என்ற மற்றொரு காந்தியவாதியின் உண்ணாவிரதப் போராட்டமும் நிகழ்ந்தது. இதன் காரணமாக தாசோலி மாவட்டத்தில் வனப்பாதுகாப்பு உணர்வு பீறிட்டெழுந்தது.

நாடு சுதந்திரம் அடைந்த நாளிலிருந்தே மரங்களை வெட்டும் ஒப்பந்தக்காரர்களின் வன அழிப்புகளால் மிகவும் பாதிக்கப் பட்ட பகுதியாக உத்தராஞ்சல் இருந்து வந்தது. உத்தரகன்ட் தனி மாநிலமாகப் பிரிக்கப் படதாதவரை அது உ.பி மாநிலத்தின் கீழ் கார்வால் மாவட்டமாக இருந்தது. 2013—இல் மழை வெள்ளம் உத்தராஞ்சலைத் தாக்கியது போல் 1973—74 சிப்கோ இயக்கம் தோன்றுவதற்கு முன்பே, அலக்நந்தா நதி வெள்ளம் காரணமாக, பல்லாயிரக்கணக்கான தாசோலி மாவட்ட மக்கள் பாதிக்கப்பட்டிருந்தனர். மண்ணில் மரங்களும், தாவரங்களும் கொண்ட பசுமைப் போர்வை இருந்தால் மண்ணரிப்பும், நிலச்சரிவும் ஏற்படாமல் வாழ்விடங்கள் காப்பாற்றப்படும் என்ற உண்மையை அனுபவ வாயிலாக உணர்ந்து சிப்கோ அறப் போராட்டம் உருவானது.




கோபேஸ்வர் மண்டலில் இப்படி எதிர்ப்பு கிளம்பியதால் வனத்துறை ஒப்பந்தக்காரர்களுக்கு அங்கிருந்து 80 கி.மீ தொலைவில் ராம்பூர் ஃபாட்டா வட்டாரத்தில் ரேனி என்ற கிராமம் ஒதுக்கித்தரப்பட்டது. ஆண்களை வேலைக்கு அனுப்பிவிட்டு பெண்கள் மட்டுமே இருந்த சூழ்நிலையில் ஒப்பந்தக்காரர்கள் மரம் வெட்ட வந்தனர். இதை அறிந்த பெண்கள் தாரை தப்பட்டை மூலம் ஒலி எழுப்பி மற்ற பெண்களை அங்கு வரவழைத்து ஒவ்வொரு மரத்தைச் சுற்றியும் ஐந்து ஐந்து பேராகச் சூழ்ந்து கைகோத்தபடி நின்று மரங்களை வெட்ட முடியாமல் தடுத்தனர். “முதலில் எங்களை வெட்டிவிட்டு பிறகு மரங்களை வெட்டுங்கள்’ என்று கூறினர். அதற்குள் கூட்டம் கூடிவிட்டது. பத்திரிகையாளர்கள் மூலம் இந்நிகழ்ச்சி உலகம் முழுவதும் தெரிய வந்தது. சிப்கோ இயக்கத்தின் இந்த உச்சக்கட்ட போராட்டத்தின் எதிரொலியாக அப்போது ஆட்சியிலிருந்த இந்திரா காந்தி அரசு உடனடியாக வனங்களில் பழங்குடி கிராம வாசிகளின் ஜீவாதார உரிமையை அங்கீகரித்தது. அவர்களுக்குச் சட்ட ரீதியான பாதுகாப்பை வழங்கிய பின்னரே, இந்தியா முழுவது மர வளர்ப்பு ஒரு புதிய எல்லையைத் தொட்டது.


மர வளர்ப்புக்கு வனத்துறையினர் ஒத்துழைப்பு அவசியம். ஒரு சில வனத்துறை அலுவலர்கள், அரசியல்வாதிகளுக்கும் மரவியாபாரிகளுக்கும் துணை போகக் கூடியவர்கள் என்றாலும், மனசாட்சியுடன் நடப்போரும் உண்டு. வனத்துறை அவ்வப்போது வனவளர்ப்பு திட்டங்கள் பற்றி விளம்பரப் படுத்தும் போது, காகிதத்

தொழிற்சாலை, தீப்பெட்டித் தொழிற்சாலை, பிளைவுட் தொழிற்சாலை போன்ற வர்த்தக ரீதியான மரங்களுக்கு, குறிப்பாக, தைல மரம், சவுக்கு, மலைவேம்பு ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் வழங்குவது போல் மூலிகை மரங்களுக்கு முக்கியத்துவம் தருவதில்லை.

வாதநாராயணன் ஒவ்வொரு ஊரிலும் நடப்படுமானால் வாதநோய் தீர அலோபதியை நாடி மக்கள் ஏமாற்றமடைய மாட்டார்கள். தீராத வலியைத் தீர்த்து வைக்கும் இம்மூலிகை அழியும் நிலையில் உள்ளது.

இவ்வாறே தேத்தான் கொட்டை, சேரான் கொட்டை, கருங்காலி, சிறு நாகப்பூ, சிவ குண்டலம் என்றும் பொந்தன் புளி என்றும் அழைக்கப்படும் ஆனைப்புளி, அகில், பூவரசு, புரசு, புன்னை, முள் முருங்கை, கடுக்காய், தான்றி, நார்த்தை, குமிழ், அசோகம், இலுப்பை, விளா, செம்மந்தாரை, வெப்பாலை, மாவிலங்கம், ருத்ராட்சம், மகிழம், வேங்கை, நீல நொச்சி, காசி வில்வம், மகா வில்வம், நாட்டு செம்பருத்தி, சங்கு புஷ்பம், பன்னீர் ரோஜா, விபூதிப் பச்சிலை, கரிசலாங்கண்ணி, தூதுவளை, பொடுதலை, வல்லாரை நித்திய கல்யாணி, சர்ப்ப கந்தி, பிரண்டை, முசுமுசுக்கை, ஆடாதொடை போன்ற பல தாவரங்கள் அருகும் நிலையில் உள்ளன. இவ்வகை அரிய தாவரங்களின் மருத்துவகுணம் மிகவும் சிறப்பானது.

அதேசமயம் வழக்கில் உள்ள துளசி, முருங்கை, நெல்லி, மாதுளை, மஞ்சள், இஞ்சி, கிராம்பு, மிளகு, சீரகம், பெருங்காயம் போன்ற மளிகை சாமான்களும் எளிதில் கிடைக்கின்றன. வெட்டிவேர், நன்னாரி போன்றவை அரிதாகி வருகின்றன. சோத்துக் கத்தாழைக்கு அவ்வளவு நெருக்கடி இல்லை. மருத்துவ குணமுள்ள எண்ணெய்வித்துப் பயிர்களில் நாளுக்கு நாள் எள் சாகுபடி குறைவதால் திறனற்ற கொழுப்புள்ள நல்லெண்ணெய் விலை ஏறுமுகமாயுள்ளது. இவ்வாறே குசும் என்று சொல்லப்படும் “சாஃப்ளவர்’ ஒரு அற்புதமான மூலிகை இதுவும் ஒரு எண்ணெய்வித்துப் பயிர். “சாஃப்ளவ’ரின் பூக்கள் நல்ல சிவப்பு. தொடக்கத்தில் இயற்கை சிவப்பு சாயத்திற்காக சாகுபடி செய்யப்பட்டது. பின்னர்தான் இதன் விதைப் பருப்பில் 40 சதவீதம் மருத்துவச் சிறப்புள்ள எண்ணெய் உள்ளதை அறிந்து சமையல் எண்ணெய்க்காக சாகுபடியானது. நல்லெண்ணெயை விட இதில் திறனற்ற கொழுப்பு குறைவு. குசும் மலர்களின் இதழ்கள் வயிற்றுப்புண் ஆற்றும் இவ்வாறே “லின்சீட்’ என்ற ஆளிவிதை எண்ணெய்யும் மருத்துவ குணம் உள்ளது. ஒரு காலத்தில் ஆளிவிதை எண்ணெய் மசகு எண்ணெய்யாகவே பயனாயிற்று. பெயின்ட் தயாரிக்கவும் பயன்பட்டது.








இப்போது இது உண்ணும் மருந்தெண்ணெயாக மாறிவிட்டது. ஆளிவிதைப் பருப்பு, எண்ணெய் எல்லாம் பல நோய்களுக்குத் தீர்வு என்று கூகுள் பதிவுகள் கூறுகின்றன. இவற்றில் எவ்வளவு நிஜம் எவ்வளவு பொய் என்று சொல்வதற்கில்லை.

அழியும் நிலையில் உள்ள மரம், செடி, மூலிகைப் பயிர்களைத் தேடிக் கண்டுபிடித்து இனப்பெருக்கம் செய்வதன் மூலம் பாரம்பரியம் மிக்க நமது பல்லுயிர்ப் பெருக்கம் செழிப்படையும். எனினும், இப்படிப்பட்ட உணர்வில் கோயம்புத்தூர் வனக் கல்லூரி வளாகத்தில் இயங்கி வரும் வன மரபியல் கோட்டம் செயல்பட்டால் தான் அருகிவரும் மரங்கள் மூலிகைகள் பெருகி வளரும். அதன் நோய் நிவாரணசக்தி பற்றிய விழிப்புணர்வும் செயல்பட்டால் அருகி வருபவை பெருகி வளர்ந்து செல்வத் சிறப்பையும் தேடித்தரும் என்பதில் ஐயமில்லை.

# உடலுழைக்கா

## உடற்பயிற்சி இல்லாத இந்தியா: உருவாகியிருக்கும் புதிய ஆபத்து!

உடல் ஆரோக்கியத்தில் இந்தியர்கள் எவ்வளவு பின்தங்கியிருக்கிறார்கள் என்பதை 'லான்செட்' எனும் பிரபல மருத்துவ ஆய்விதழ் சமீபத்தில் வெளியிட்டுள்ள இரண்டு அறிக்கைகள் அதிர்ச்சிதரும் வகையில் பதிவுசெய்திருக்கின்றன.




இந்தியாவில் உயிர் பறிக்கும் நோய்களின் பாதிப்பு எந்த அளவில் தீவிரமாக உள்ளது என்பதையும், அந்த நோய்களுக்குத் தரப்படும் சிகிச்சையில் எந்த அளவுக்குப் பின்தங்கி உள்ளது என்பதையும் இந்தியா உள்ளிட்ட 168 நாடுகளில் 19 லட்சம் பேரிடம் உலக சுகாதார நிறுவனம் நடத்திய இந்த ஆய்வின் முடிவு வெளிச்சம்போட்டுக் காட்டுகிறது.





இந்தியாவில் *34%* மக்கள் தேவையான அளவு உடற்பயிற்சி இல்லாமல் இருக்கிறார்கள் என்கிறது முதல் அறிக்கை. தினசரி *45* நிமிடம் உடற்பயிற்சி அல்லது வாரத்துக்கு *150* நிமிடம் நடைப்பயிற்சி உடல் ஆரோக்கியத்துக்குத் தேவை என்று உலக சுகாதார நிறுவனம் வரையறுத்துள்ளது. இந்திய ஆண்களில் *24.7%* பேரும் பெண்களில் *43.9%* பேரும் இந்த அளவில் குறைந்தபட்சம்கூட உடற்பயிற்சியோ, நடைப்பயிற்சியோ மேற்கொள்ளவில்லை என்பது இந்த ஆய்வில் தெரியவந்துள்ளது.

இரண்டாவது அறிக்கையின் முடிவுப்படி இந்தியாவில் கடந்த *25* வருடங்களில் மாரடைப்பு உள்ளிட்ட இதயநோய்களும் பக்கவாத பாதிப்புகளும் *50%* அதிகரித்திருக்கின்றன. *1990*—ல் *2.6* கோடியாக இருந்த நீரிழிவு நோயாளிகளின் எண்ணிக்கை *6.5* கோடியாகவும் நுரையீரல் நோயாளிகளின் எண்ணிக்கை *2.8* கோடியிலிருந்து *5.5* கோடியாகவும் அதிகரித்திருக்கிறது. *2016*—ல்




மட்டும் 2.8 கோடி பேர் மாரடைப்பு காரணமாக இறந்திருக்கிறார்கள். 1990—ல் புற்றுநோயால் இறந்தவர்கள் 5.5 லட்சம் பேர். கடந்த கால் நூற்றாண்டில் இந்த எண்ணிக்கை 10.6 லட்சமாக உயர்ந்திருக்கிறது. இவர்களில் குடல் புற்றுநோய் வந்து இறந்தவர்களின் எண்ணிக்கை மட்டும் 206% அதிகரித்திருக்கிறது.




என்ன காரணம்?

இந்தியர்களின் பாரம்பரிய உணவுகள் இருந்த இடத்தில் அந்நிய நாட்டின் துரித உணவுகள் நுழைந்துவிட்டன. நடுத்தர, உயர்வகுப்பு இந்தியர்கள் உடலுழைப்பு மேற்கொள்வதைக் குறைத்துக்கொண்டனர். உடற்பயிற்சி இல்லாத சோம்பலான வாழ்க்கை முறைதான் உடற்பருமன், உயர் ரத்த அழுத்தம், நீரிழிவு, இதயநோய்கள் அதிகரிப்பதற்கு முக்கியக் காரணம் என்பது பல்வேறு ஆய்வுகளில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

**கு.கணேசன்**

இந்தப் பிரச்சினை இந்தியாவில் மட்டுமல்ல, உலகின் பல நாடுகளில் கடந்த 18 ஆண்டுகளில் அதிகரித்திருக்கிறது





என்பதையும் உலக சுகாதார நிறுவனத்தின் இந்த ஆய்வறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

உடற்பயிற்சி குறித்த முனைப்பும் விழிப்புணர்வும் பொருளாதாரத்தில் பின்தங்கியிருக்கும் நாடுகளைவிட வளர்ச்சி அடைந்த நாடுகளில்தான் அதிகம் இல்லை என்றும் இந்த ஆய்வு சுட்டிக்காட்டுகிறது. பொருளாதாரரீதியாக ஒரு நாடு எவ்வளவுதான் முன்னேறி இருந்தாலும் உடற்பயிற்சியின்மை காரணமாக அந்நாட்டு மக்களின் ஆரோக்கியம் கெட்டிருந்தால் அந்த நாட்டின் வளர்ச்சியால் எந்தப் பயனும் எவருக்கும் கிடைக்கப்போவதில்லை.

ஐரோப்பா காட்டும் பாதை!

இந்தியாவில் தேசிய அளவில் மருத்துவத் துறை சார்ந்த பிரச்சினைகளைக் கவனிக்க 'இந்திய மருத்துவக் கழகம்' உள்ளதுபோல் ஐரோப்பாவின்





சில நாடுகளில் உடற்பயிற்சி மேம்பாட்டுக் கழகங்கள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன. மக்களிடம் உடற்பயிற்சி குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவது, பள்ளி, கல்லூரிகளில் உடற்கல்விப் பாடத்திட்டங்களை நவீனப்படுத்துவது, மாணவர்கள் அனைவரையும் உடற்கல்வி கற்கத் தூண்டுவது, முதியோரும் உடற்பயிற்சிகளில் ஈடுபடுவதை உற்சாகப்படுத்தும் வகையில் பொது இடங்களில் இலவச விளையாட்டு மன்றங்களை உருவாக்குவது போன்ற முக்கியக் குறிக்கோள்களைக் கொண்டு இந்த அமைப்புகள் செயல்படுகின்றன.

இவை குழந்தைகள், பெண்கள், பெரியவர்கள், முதியோர்கள் எனப் பொதுமக்களை வகை பிரித்து, ஒவ்வொரு வகையினரும் உலக சுகாதார நிறுவனம் வரையறுத்துள்ள அளவுக்கு உடற்பயிற்சி செய்கிறார்களா என்பதை ஆண்டுதோறும் களப்பணி ஆய்வு செய்கின்றன. அதற்கேற்ப நடைப்பயிற்சிக்கும் சைக்கிள் பயிற்சிக்கும் தனிப்பாதைகள் அமைப்பது, பொது நீச்சல்குளங்களை அமைப்பது, பெரிய நிறுவனங்களில் விளையாட்டு அரங்கம் அமைப்பதைக் கட்டாயமாக்குவது, மக்களிடம் விழிப்புணர்வை அதிகரிக்க சைக்கிள் பேரணி நடத்துவது, ஊடகங்கள் வழியாகப் போட்டிகள்

> Our Food
> Should be
> our medicine
> & Our Medicine
> Should be
> Our Food
>
> -Hippocrates



நடத்துவது, அவற்றுக்கான நிதியை அரசிடமிருந்து பெறுவது, ஒதுக்கப்பட்ட நிதி ஒழுங்காகச் சென்றடைகிறதா எனக் கண்காணிப்பது என்று பல செயல்திட்டங்களை இந்த அமைப்புகள்




நடைமுறைப்படுத்துகின்றன. இதன் பலனால், முன்பைவிட உடற்பயிற்சிகள் குறித்த விழிப்புணர்வும் பொறுப்புணர்வும் மக்களிடம் அதிகரித்திருப்பதாக இவை அறிவித்துள்ளன.

இந்தியாவின் நிலைமை

இந்தியாவில் உடற்கல்வி மேம்பாட்டுக்கென தனி அமைப்பு ஏற்கெனவே இருந்தாலும் அதன் செயல்பாடு மாணவர்களுக்கு மட்டுமே பயன்படும் வகையில் உள்ளது. மேலும், விளையாட்டு வீரர்களை உருவாக்குவதில்தான் அது அதிகக் கவனம் செலுத்துகிறது. பதிலாக, ஐரோப்பிய நாடுகளில் உள்ளதுபோல் இந்தியாவிலும் தேசிய அளவில் உடற்பயிற்சி மேம்பாட்டுக் கழகம் எனத் தனியாக ஓர் அமைப்பு உருவானால்தான் சமூகத்தின் எல்லா மட்டங்களிலும் உள்ள மக்களையும் உடற்பயிற்சி போன்ற உடல்நலப் பேணலில் ஈடுபடுத்த முடியும்.

வெளிநாடுகளில் உள்ளதுபோல் இந்தியாவில் நடைப்பயிற்சிக்கு ஏற்ற வகையில் சாலைகளும் பாதைகளும் இல்லை. பூங்கா வசதிகள் குறைவு. சைக்கிள் பயணத்துக்குத் தனிப்பாதை இல்லை. பொது நீச்சல்குளங்கள் அரிதாக இருப்பதும் தனியார் உடற்பயிற்சிக் கூடங்களைப் பயன்படுத்திக்கொள்ள பணவசதி தடையாக இருப்பதும் வெளியில் செல்ல முடியாத அளவுக்குக் காற்று மாசு அடைந்திருப்பதும் நடைப்பயிற்சி மேற்கொள்ளும் இடங்களில் தெருநாய்களின் தொல்லை அதிகமாக இருப்பதும் இந்தியர்களில் பெரும்பாலானோர் நடைப்பயிற்சிமேற்கொள்வதில் அதிக ஆர்வம் இல்லாமல் இருக்கின்றனர்.




மக்களின் நலன் மீது அக்கறைகொள்ளும் மத்திய—மாநில அரசுகள் மனது வைத்தால் இந்தக் குறைபாடுகளை நிச்சயம் சரியாக்க முடியும்.

20 ஆண்டுகளுக்கு முன்பு தேசிய அளவில் எய்ட்ஸ் விழிப்புணர்வை ஏற்படுத்தியதுபோல் அறிவொளி இயக்கம் மூலம் நகரங்களில் மட்டுமல்லாமல் கிராமங்கள்வரை அனைத்துத் தரப்பினருக்கும் அடிப்படை அறிவியலைக் கொண்டுசேர்த்ததுபோல்

இப்போது உடற்பயிற்சிக்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் இரு அரசுகள் இணைந்து தேசிய இயக்கமாக அதை உருவாக்கிச் செயல்படுத்தினால் பொதுமக்களுக்கும் அதில் ஆர்வம் ஏற்படும்; ஈடுபாடு கூடும். ஒட்டுமொத்த தேசத்தின் ஆரோக்கியமும் மேம்படும்.

சிறப்புச் சிறுகதை



# புத்தரும் சுந்தரனும்

காரைநகரான்

நோர்வேயின் கோடைக் காலத்தில் அத்தி பூத்தால் போல் வானம் முகில்களை விரட்டி, நிர்வாணமாகச் சூரியனை அமைதியோடு ஆட்சி செய்யவிட்ட அழகான நாள்.

காலை பதினொரு மணி இருக்கும். உடம்பு என்னும் இயந்திரம் சீராக இயங்க வேண்டும் என்றால் அதற்குக் கொடுக்க வேண்டிய அசைவுகளை ஏதோ ஒரு பயிற்சியாக அல்லது வேலையாகக் கட்டாயம் கொடுத்தாக வேண்டும். இல்லாது விட்டால் தனக்கு இனி இந்த உலகில் அலுவல் இல்லை என்பதாகத் தன்னைத் தானே சீரழித்துக் கொள்வதில் அது வேகம் காட்டும் என்கின்றது மேற்கத்தேய மருத்துவ அறிவியல். அந்த அறிவியலை மனதில் இருத்தித்தான் சுந்தரன் இன்று வெளியே உலாத்திற்காய் சென்றான். உலாத்து என்று வந்துவிட்டால் அவனும் பலரையும் போன்று ஒஸ்லோவில் இருக்கும் மலையும் மலை சாந்த கட்டுப் பகுதியையும் தான் தேர்ந்து எடுப்பான். இன்று அப்படி அவன் கட்டுப் பகுதிக்குள் போகும் போதுதான் அந்த அதிசயம் திடீரென நடந்தது. அவன் கண்களை நன்கு கசக்கி விட்டு மீண்டும் அவரைப் பார்த்தான். காட்சி மாறவில்லை. தன்னைக் கிள்ளி உறுதிப்படுத்திக் கொண்டு பார்த்தான். அப்போதும் அதில் எந்த மாற்றமும் இல்லை. அவர்தான் கம்பீரமாக, அழகாக முன்னே சென்றார்.




பாதத்தில் மரத்தால் ஆன மதியடி. காவி உடை. கையில் இங்கும், எங்கும் என்பதாய் எந்த மாற்றமும் இன்றிய அவரது எளிமையான திருவோடு. திரும்பிச் சுந்தரனைப் பார்த்த போது என்னிடம் வா என்கின்ற என்றும் மாறாத அந்த ஞான ஒளியின் பரவல் அவர் கண்களில். சுந்தரன் மீண்டும் மீண்டும் தன்னைக் கிள்ளிப் பார்த்து உறுதி செய்தான். இது கனவு இல்லை என்பது விளங்கியது. கிள்ளுவதால் எதுவும் மாறவில்லை என்பதும் புரிந்தது. அவர் அவன் முன்னே கம்பீரமாக ஞானம் பரப்புதலும், வாழ்தலுக்குப் பிச்சை எடுப்பதும் என்கின்ற அதே கரும யோகத்தோடு இங்கும் அமைதியாக நடந்தார். இது எந்த மனிதனுக்கும் இந்த உலகில் இப்போது கிட்டாத அரும் பாக்கியம் என்பது சுந்தரனுக்கு விளங்கியது. தன்னோடு பிறந்தவன் பற்றி தனது தாய் அரைகுறையாகச் சொன்னதிற்கான விளக்கத்தை மட்டுமாவது புத்தரிடம் கேட்க வேண்டும் என்கின்ற ஆவல் அவனிடம் பொங்கியது. அவனால் அதற்கு மேல் நடக்க முடியவில்லை. அவன் ஓடினான். என்றும் ஓடாத வேகத்தில் இன்று வெறி பிடித்த குதிரை ஓடியது போன்று அவரை நோக்கி ஓடினான்.

சுந்தரன் ஓடி வருவதைப் பார்த்த புத்தர் ஒரு மரத்தின் கீழ் அவனுக்கா ஒதுங்கிக் காத்து நின்றார்.

சுந்தரன் வேகமாக ஓடி அவரின் முன்பு வந்து நின்று மூச்சு வாங்க முடியாது வாங்கினான். புத்தருக்கு அவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. தனது பிச்சை ஓட்டில் இருந்து எதையோ அள்ளி அவன் மீது தெளித்தார். அவன் மூச்சு வாங்கல் நின்றது. அவனுள் என்றும் இல்லாத அமைதியும், சாந்தமும் குடி ஏறியது.



அதன் பின்பு புத்தர் அவனைப் பார்த்து, 'உன்னோடு நான் இருப்பதை விளங்கிக் கொள்ளாது வாழ்ந்து வந்த நீ இன்று மட்டும் எதற்காக இப்படி என்னை நோக்கி ஓடிவந்தாய்? உனக்கு என்ன வேண்டும்? ' என்று கேட்டார்.

'என்னோடு நீங்கள் இருந்தீர்களா? எனக்கு நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் என்பது சற்றும் விளங்கவில்லை. நான் அம்மா சொல்லியதையே விளங்கிக் கொள்ள முடியாத மூடன். நீங்கள் சொல்வதை எப்படி விளங்கிக் கொள்ளப் போகிறேன்? எனக்கு நீங்கள் என்னோடு இருப்பதாய் ஒரு போதும் தோன்றியதே இல்லை. என்னை மன்னித்து விடுங்கள். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? தயவு செய்து விளக்கமாகக் கூறுங்கள்.'

'நான் தண்டிக்கவோ, மன்னிக்கவோ விரும்பாத மனிதன் ஆகியவன். ஆசை துறந்து, காவி தரித்து, அன்னம் பிச்சை கேட்பவன். நான் மனிதன் என்றேன். கடவுள் இல்லை என்றேன். என்னைப் போன்ற நிலையை நீங்களும் அடையலாம் என்றேன். அதை எல்லாம் புறக்கணித்து விட்டு மனிதர்கள் அதற்கு எதிராக இப்போது வெறியோடு செயற்படுகிறார்கள். என்னைப் பூசிப்பதாய் மிகவும் மோசமாய் இம்சிக்கிறார்கள். என்றாலும் எனக்கு இதில் எதுவும் இல்லை. அதையும் தாண்டியே நான். நீ புத்தன் ஆவதும் வெறியன் ஆவதும் என்னால் அல்லஞ் எவராலும் அல்லஞ் உன்னால் மட்டுமே.




சரி உன்னிடம் வருகிறேன். நீ எதற்காக என்னை நோக்கி ஓடி வந்தாய்? நாங்கள் நடந்து கொண்டே கதைக்கலாம். இல்லாவிட்டால் என்னைச் சிலை என்று இங்கும் தொந்தரவு செய்யத் தொடங்கி விடுவார்கள் .' என்றார் புத்தர். பின்பு சுந்தரனை ஒரு முறை பார்த்துவிட்டு அவர் நடக்கத் தொடங்கினார். அவரோடு சுந்தரனும் நடந்தான். அப்படி நடந்து போகும் போது அவர் மீண்டும்,

'நீ ஏதோ என்னிடம் கேட்க வந்தாய் அல்லவா?' என்றார்.

'உண்மையே குருவே. உங்களை எனக்குக் குருவே என்று அழைக்கத் தோன்றுகிறது. நான் உங்களை அப்படி அழைக்கலாமா? உங்களை இந்த நாட்டில் பார்த்ததே அதிசயம். அதைவிட நீங்கள் இந்தக் காட்டில் வருவது இன்னும் அதிசயம். எதற்காக குருவே உங்கள் இந்த யாத்திரை இங்கே நடக்கிறது? எனக்கு உங்களிடம் ஒரு கேள்வி கேட்க வேண்டும்.

கேட்கலாமா? அதற்கு உங்களின் அனுமதி உண்டா? '

'என்னைத் தேடும் ஒருவன் இங்கே இருப்பதாக எனக்குத் தோன்றியது. கால்கள் அதற்காகப் பயணித்தன. உன்னை உனக்குக் காட்டுவது என்னுடைய பணி. நீ உன் வினாவைக் கேள்.' என்றார் புத்தர்.

'நான் கடவுள் பற்றி எல்லாம் கதைக்க விரும்பவில்லை. நீங்கள் அதற்குப் பதில் சொல்ல மாட்டீர்கள் என்பதும் எனக்குத் தெரியும். அதைவிட என்னிடம் என் அம்மா சொன்ன விடையம் ஒன்று இருக்கிறது. என்னைக் குடைகிறது. அது எனக்கு இன்றுவரை முழுமையாக விளங்கவில்லை. அதற்கு நீங்கள் தயவு செய்து விளக்கம் தரவேண்டும்.' என்றான் சுந்தரன்.

'உன் அம்மா உன்னிடம் என்ன சொன்னாள்?'

'என் அம்மா என்னிடம் நீ கர்வம் கொள்ளாதே, கோவம் கொள்ளாதே, நீ எதையும் உனக்காச் சேர்க்காதே, நீ யாரையும் துன்பப்படுத்தாதே, உயிர்கள் மேல் கருணை உள்ள மனிதனாக வாழப் பழகிக் கொள். இந்த ஐம்பூதங்களால் ஆன உடம்பு நாளும் கரைந்து அந்த ஐம்பூதங்களிடம் சென்றுவிடும். அந்த நாளில் நீயும் நானும் ஒன்றாவோம் என்றாள். உன்னோடு வாழும் அவன் உன்னை நீ என்று நம்பும் உன்னிடம் இருந்து விடுவித்து, என்னிடம் அழைத்து வருவான் என்றாள். எனக்கு முற்பகுதி விளங்கியது போல இருக்கிறது குருவே. ஆனால் பிற்பகுதி அதுவும் இல்லை. அதற்கான விளக்கத்தைத் தயவு கூர்ந்து நீங்கள் எனக்குத் தருவீர்களா? '




'அஞ்சாதே சுந்தரா. அது ஐந்து அல்ல நான்கு. நிச்சயம் நான் உன் கேள்விக்கான விளக்கத்தை உனக்குத் தருகிறேன். அதற்கு முன்பு நீ சிலவற்றை அறிந்து கொள்ள வேண்டும். பூமியில் மனிதன் பிறப்பது எதற்கு என்று விளங்கியதா சுந்தரா? உண்டு, புணர்ந்து, உறங்கிக் கோடான கோடி ஜந்துக்கள் போல மாண்டு போவதற்கு என்று எண்ணுகிறாயா சுந்தரா? அதில் இருந்து விடுபட வேண்டும் என்று உனக்குத் தோன்றியதா? இந்த மனிதர்கள் எல்லாம் எதற்கு அதிகம் பயம் கொள்கிறார் என்பது தெரியுமா? உன்னை நீ உன்னுள் எப்போதாவது



தேடியது உண்டா? '

'ஐயோ குருவேஞ் நான் ஒரு முழு மூடன். நான் எதற்குப் பிறந்தேன் என்பதே விளங்காது இந்த உலகில் அதற்குப் பாரமாக, மிருகம் போல், வினைப் பயனால் வாழ்கிறேன் என்பதுதான் அரிதாரம் பூசாத எனது உண்மை நிலை. அன்னை சொன்னதுகூட எனக்கு விளங்கவில்லை. நான் மூடனாய் பிறந்தது கரும வினைப் பயனாக இருக்கலாம். என்னைப் போன்று ஞானத்தின்

ஒரு கீற்றுக்கூடப் படமுடியாத மூடர்களே இந்த உலகத்தில் கோடான கோடி பேர். அதைவிடப் புத்திசாலிகள் என்று தங்களை நினைத்துக் கொள்ளும் மூடர்கள் பல கோடி. மூடனாய் இருப்பது எனக்கு அழிக்கப்பட்ட சாபம். சாபம் நீங்குமா? அல்லது சாபமே ஒரு வரமா? நான் மூடன் என்றாலும் சிலவற்றை ஆவது அறிந்து கொள்ள விரும்புகிறேன். அது என் தாய் சொன்னதில் இருந்து தொடங்க வேண்டும் என்பது என் விருப்பு.'

'விருப்பு, வெறுப்பு



என்பதுகூட நீ அறிய முயல்வதற்குத் தடையாக இருக்கலாம் சுந்தரா. அந்த நிலையை விட்டு நீ மேலே வா. அப்போது இந்த உலகத்தின் நிலையாமையும், உயிரினங்களின் அன்றாட ஜீவகூத்தும் உனக்கு விளங்கும். அது விளங்கும் போது உன் அன்னை சொன்னதும் என்ன என்பதும் விளங்கும்.'

'ஆசையை விட்டு, பற்றை அறுத்து நானும் மனிதனாக வேண்டும் என்றுதான் முயற்சிக்கிறேன். இருந்தும் என்னால் அது முடியவில்லை குருவே. நான் மனதிடம் மாட்டிக் கொண்ட மனித மிருகம் குருவே. எனக்கும் உய்வு உண்டா? அதனோடு அன்னை தந்துவிட்டுப் போன கேள்விகள் என்றும் என் மனதில் உயிரோடு தொடர்ந்து வதைக்கிறது. இறப்பிற்கு முன்பாவது எனக்கு அதற்கு விடை கிடைக்குமா குருவே? கிடைக்க வேண்டும். அதுவே எனது ஞான தரிசனத்தின் திறவுகோல் இல்லையா? இனிப் பிறப்பு இல்லை என்கின்ற மறுபிறப்பின் மறுதலிப்பு இல்லையா? '

புத்தர் சுந்தரனைப் பார்த்து கனிவாகப் புன்னகைத்தார். பின்பு அவனைப் நோக்கி,

'நீ இறக்க வில்லையா? நீ ஜீவிக்க வில்லையா?' என்று கேட்டார்.

'விளங்கவில்லை குருவே. இறந்தால் ஏது ஜீவிதம்? ஜீவித்தால் ஏது இறப்பு?'

'நன்றாக யோசித்துப் பார். ஒவ்வொரு கணமும் என்ன நடக்கிறது? நித்தமும் அது புரியாத வேகத்தில் உன் மீதும்,




ஒவ்வொரு உயிர்கள் மீதும்ஞ் இதை நீ விளங்கிக் கொள்ளும் போது உன் அன்னை சொன்னது உனக்கு விளங்கும். அது விளங்கும் போது நீ அன்னையிடம் போவதில் இருந்து விலகி, உனக்கான நிரந்தரப் பாதையை மூடி மறைத்து மண்டிக் கிடக்கும் புதர்களை வெட்டிச் சாய்த்து, அதில் உறுதியோடு பிரபஞ்சமே பாதையாகப் பயணிப்பாய். உன்னை நீ உன்னுள் தேடுவாய். அதிலே உன்னை நீ கண்டு கொள்வாய்.' என்றார் புத்தர்.

பின்பு புத்தர் நடப்பதை நிறுத்தி ஒரு மரத்தின் கீழ் அமர்ந்து கொண்டார். மேற்கொண்டு பேசாதே போ என்று சுந்தரனுக்கு கையால் சைகை காட்டினார். சுந்தரன் தயக்கத்தோடு மேற்கொண்டு நடந்தான். அவனுக்கு அன்னை சொன்னது விளங்கத் தொடங்கியது.




## ஆரோக்கியம் காப்போம்

மனிதர்களின் உடலை இறைவனின் அருட்கொடை என்றால், உடலின் ஒவ்வொரு உறுப்பும் ஒரு அற்புதமான வரம் என்று சொல்லலாம். மனித உறுப்புகளின் சிகரமான மூளை, தன் ஆணைக்கேற்றபடி அவற்றை ஆட்டிவைப்பதுடன், அவை ஒவ்வொன்றையும் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பது அதிசயமான ஆச்சரியம். உடலை சமநிலையில் வைத்திருப்பதற்கும், ஆரோக்கியத்துடன் இருப்பதற்கும் உறுப்புகளே மருத்துவர்கள் போல் இயங்குகின்றன.

உடலைப் போர்த்தியிருக்கும் தோலிலிருந்து, தலையில் கவசம் போல் அமைந்திருக்கும் மயிர்க் கற்றைகள் மற்றும் கால் விரல்களின் நுனியைக் காக்கும் நகங்கள்வரை எல்லாமே நம்மை, வெப்பம், குளிர் மற்றும் நோய்க்கிருமிகளிடம் இருந்து பாதுகாப் பதற்கென்றே இறைவனால் கொடுக் கப்பட்டவை.

வெளியுறுப்புகள் மட்டுமின்றி உள்ளுறுப்புகளான செரிமான மண்டலம், சுவாச மண்டலம், ரத்த ஓட்ட மண்டலம், இனப்பெருக்க மண்டலம் போன்றவற்றின் உறுப்புகள் மீது போர்த்தப்பட்டிருக்கும் சளிப்படலம், கிருமித்தொற்று ஏற்படுவதைத் தடுப்பதால், நோய்களில் இருந்து நமக்கு பாதுகாப்பு கிடைக்கிறது.

இது மட்டுமல்லாது, நோய்களில் இருந்து உடலைக் காக்கவென்றே நோய் எதிர்ப்பு மண்டலமும் உள்ளது. இது உருவாக்கும் நோய்க் கிருமி எதிர்ப்பு பொருள், கிருமிகளிடம் இருந்து தோன்றும் நச்சுப்பொருள்களுடன் போராடி உடலை நோய்த் தொற்றிலிருந்து பாதுகாக்கிறது.




நோய் எதிர்ப்பு பொருள்களால் நோய்க்கிருமிகளை எதிர்த்துப் போராட முடியாத நேரங்களில் மட்டுமே நோய்க்கான அறிகுறிகள் உடலில் தோன்றுகின்றன. இன்னும் சொல்லப் போனால், நம் உடலில் ஒவ்வாப் பொருள்கள் அல்லது கிருமிகளின் ஊடுருவலே நோய் எதிர்ப்பு மண்டலத்தை எதிர்வினையாற்றத் தூண்டுகிறது.

எங்கும் நிறைந்திருக்கும் கிருமிகளின் தாக்குதலால் பெரும்பாலான நேரங்களில் பாதிப்பு ஏற்படாததற்கு நோய் எதிர்ப்பு மண்டலமே காரணமாகும்.

சில நேரங்களில், நம் உடலின் இயற்கையான நோய் எதிர்ப்பு சக்தி வேலை செய்வதற்கு சிறிது அவகாசம் தேவைப்படும். அதுவரை நமக்கு எங்கே பொறுமை இருக்கிறது? எதற்கெடுத்தாலும் மருத்துவர்களை நாடும் காலமாகி விட்டது.

உடலில் இது இந்த அளவில்தான் இருக்க வேண்டும் என்று அழகுக் கலை வல்லுநர்களால் வரையறுக்கப்பட்டு அழகு அளவீடு செய்யப்படுகிறது. ஆனால் தோலின் உள்ளே இருக்கும் ரத்தமும், சீழும், சளிப்படலமுமே நம் ஆரோக்கியத்திற்கு அழகூட்டுகின்றன. ரத்த ஓட்ட மண்டலமும், செரிமான மண்டலமும் சீராக இயங்கினால் அது நல்ல ஆரோக்கியத்திற்கான அறிகுறியாகும்.

வளர்சிதை மாற்றத்தின் (அணுக்களின் செயல்பாடுகள்) காரணமாக உடல் அணுக்களில் உருவாகும் கழிவுகளை ரத்தம் இடையறாது தன்னுடன் கழிவு மண்டல உறுப்புகளான சிறுநீரகம், நுரையீரல், தோல், பெருங்குடல் போன்ற உறுப்புகளுக்கு எடுத்துச் செல்கிறது.

பிறப்பில் இருந்து இறக்கும் வரை நாம் சிறுநீர், மலம் சேகரிப்பிற்காக ஒரு சிறிய கழிப்பறையை நம் உடலுக்குள் சுமந்து திரிகிறோம் என்றால் அது மிகையாகாது.

இன்னுமொரு ஆச்சரியமான விஷயம், நம் உடல் உறுப்பு கடிகாரம் போல் செயல்படக்கூடிய தன்மையுடையது. ஒரு வேலையை நமக்கு நினைவுபடுத்த கடிகாரத்தில் ஒலிப்பானை நாம் தயார் செய்கிறோம் அல்லவா?




ம. அஹமது நவ்ரோஸ் பேகம்

அதுபோலவே, நாம் உண்பது, உறங்குவது, எழுவது இயற்கை கடன்களைக் கழிப்பது ஆகியவற்றை ஒரு நாளின் எந்த நேரத்தில் செய்கிறோமோ அதே நேரத்திற்கே உறுப்புகள் பழக்கப்பட்டு அனிச்சை செயல்கள் போன்று நம்முடைய விருப்பத்திற்கு அப்பாற்பட்டு நடக்கின்றன. இதன் காரணமாகவே நம் உடல் “பயாலஜிகல் கிளாக்‘ என்று அழைக்கப்படுகிறது.

உடலின் செயல்பாடுகளில் பலவும் ஏன், எப்படி என்று எந்த மருத்துவராலும் அறுதியிட்டுச் சொல்ல முடியாதபடியே உள்ளன. நரம்பு மண்டலத்தின்




உறுப்பான மூளை, நரம்புகள் மற்றும் மரபணுக்கள் போன்ற சிக்கலான உடற்கூறுகள் உலகின் மிகச் சிறந்த விஞ்ஞானிகளுக்கும் புரியாத புதிராகவே உள்ளன.

மொத்தத்தில் நம் உடல் ஆழ்கடல் போல கண்டுபிடிக்க முடியாத பல ரகசியங்களையும், அற்புதங்களையும் கொண்டது

முன்பெல்லாம் மக்களை அரிதாகத் தாக்கிய பல நோய்கள் இன்று அடிக்கடி பாடாய்ப்படுத்துகின்றன. மருந்துகளுக்குக் கட்டுப்படாத நோய்க்கிருமிகள், மருந்துகளின் தாக்கத்தில் இருந்து தங்களைக் காத்துக் கொள்ள தங்களின் மரபணுக்களை புதிதாக மாற்றிக் கொள்ளும் விசித்திரமே இதற்கு காரணம் என்று கூறப்படுகிறது. நம் கண்களுக்குப் புலப்படாத மிகச் சிறிய கிருமிகளின் இந்த அளப்பரிய ஆற்றல் கூட ஒரு விந்தைதான்.

ஆயிரக்கணக்கில் பணத்தைக் கொடுத்து வாங்கிய வீட்டு உபயோக பொருளை, ஓர் இயந்திரத்தைப் பராமரிக்க அதிகமாக சிரமப்படுகிறோம், ஆனால், விலை மதிப்பற்ற நம் ஆரோக்கியத்தைப் பேணுவதற்கு அந்த அளவிற்காவது முயற்சிக்கிறோமா என்று யோசித்துப் பார்க்க வேண்டும்.




நமது உடல் கூட ஒரு இயந்திரம் போல்தான். அக்கறையுடன் பராமரிக்காவிடில் உறுப்புகள் பழுதாகி விடும். அல்லது உடல் தன் இயக்கத்தையே நிறுத்தி விடக்கூடும்.

எனவே, நம்மால் முடிந்தவரை, நம் ஆரோக்கியத்தைப் பாதுகாத்துக் கொள்ள சில வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். பசித்த பின் புசிப்பது, ஆரோக்கியத்திற்கு ஆகாதவற்றைப் புறந்தள்ளுவது, உடல் உழைப்பு, ஆழ்ந்த உறக்கம், பரபரப்பற்ற அமைதியான உள்ளம் ஆகியவை சீரான உடல் இயக்கத்திற்கு முக்கியமானவை.

ஆரோக்கியம் என்பது விலை கொடுத்து வாங்க முடியாதது. அதனை இழந்தபின்தான் பலரும் அதன் அருமையை உணர்கிறார்கள். நாம் இப்போதே உணர்ந்து அற்புதமான நமது உடலைப் போற்றுவோம்! ஆரோக்கியத்துடன் வாழ்வோம்!

# எல்லையில்லா

## இன்றைய தலைமுறையைப் பலிவாங்கும் டிஜிட்டல் சூதாட்டம்!

சூதாட்டத்துக்கு இன்றும்கூட இந்தியாவில் அனுமதி இல்லை. கிராமப்புறங்களில் பணம் வைத்து சீட்டாடினாலோ, சேவல்கட்டுப் பந்தயம் நடத்தினாலோ அது தண்டனைக்குரிய குற்றமாகவே பார்க்கப்படுகிறது. ஆனால், 'ஃபேண்டசி' விளையாட்டுகளான 'டிரீம்11', 'ரம்மி சர்க்கிள்' போன்ற பணம் கட்டி விளையாடும் சூதாட்டங்கள் இந்தியாவில் அனுமதிக்கப்பட்டுள்ளன.







அது என்ன 'ஃபேண்டசி' விளையாட்டு? ஒரு விளையாட்டில் எந்த அணி வெல்லும் என்று பந்தயம் கட்டாமல், அந்த விளையாட்டில் பங்கேற்கும் வீரர்களை நம்பிப் பந்தயம் கட்டுவது. உதாரணமாக, கிரிக்கெட்டை எடுத்துக்கொண்டால், இரு அணிகளிலும் விளையாடத் தேர்ந்தெடுக்கப்பட்ட 28—லிருந்து 30 வீரர்களுள் அன்றைய போட்டியில் விளையாடவிருக்கும் 11 பேரை ஊகித்துத் தேர்ந்தெடுத்து, உங்கள் விருப்பத்துக்குரிய ஒரு அணியை உருவாக்கிக்கொள்ள வேண்டும். பிறகு, நீங்கள் உருவாக்கிய அணியை வைத்துப் பணம் கட்டிப் பந்தயந்தில் சேர வேண்டும். நீங்கள் தேர்ந்தெடுத்த 11 பேரும் நன்றாக விளையாடினால் உங்களுக்கு வருமானம். ஒவ்வொரு போட்டிக்குமான நுழைவுக் கட்டணம் நான்கு ரூபாயிலிருந்து பல ஆயிரங்கள் வரை.

கிரிக்கெட்டை எடுத்துக்கொண்டால், வீரர்களின் ஒவ்வொரு ரன்னுக்கும் விக்கெட்டுக்கும் கேட்ச்சுக்கும் ரன்அவுட்டுக்கும் புள்ளிகள் வழங்கப்படும். தேர்ந்தெடுத்த 11 பேரும் நன்றாக

# ஆபத்துக்கள்

விளையாடினால் புள்ளிகள் கூடும். இவ்வாறாக, ஒரு போட்டியில் அதிக புள்ளிகள் எடுத்த ஒருவர் வெற்றியாளர்.

இவ்வகையான விளையாட்டுகளில் இரு வகையான போட்டிகள் உண்டு. ‘ஸ்மால் லீக்’ என்பது ஓரளவுக்கு நேரடியாக மோதுவது. இருவர் முதல் 20 பேர் வரை இந்த ‘ஸ்மால் லீக்’களில் இருப்பார்கள். 15 ரூபாய் கட்டி வெற்றிபெற்றால் அது 25 ரூபாயாகத் திருப்பித் தரப்படும். இவ்வாறே





ராஜா வீரய்யன்

5,750 ரூபாய் கட்டி 10 ஆயிரம் ரூபாய்கூட ஒரு போட்டியில் வெல்லலாம் அல்லது 9,999 ரூபாய் கட்டி ஒரு லட்சம்கூட வெல்லலாம். மற்றொரு வகை, ‘க்ராண்ட் லீக்’. இது குறைந்தது ஐம்பதாயிரத்திலிருந்து சில லட்சம் பேர்




விளையாடுவது. உதாரணமாக, 26 ரூபாய் கட்டிச் சேர்ந்தால் இத்தனை லட்சம் பேரில் முதலில் வருபவருக்கு 3 லட்சம் கிடைக்கும். இந்த மாதிரியான ‘க்ராண்ட் லீக்’களில் 10 லட்சம் வரைகூட நிர்ணயிக்கிறார்கள்.

சில நூறுதானே, வென்றால் லட்சங்களாயிற்றே என ஒவ்வொரு முறையும் மாதந்தோறும் பல ஆயிரங்களை இதில் தொலைக்கிறார்கள் இன்றைய இளைஞர்கள். ஒவ்வொரு போட்டியையும் பார்த்து அதில் கொஞ்சம் தகவல்களைத் திரட்டி, ஒரு நல்ல அணியை உருவாக்கினாலும் இதுபோன்ற ‘க்ராண்ட் லீக்’களில் வெல்ல முடிவதில்லை. வித்தியாசமான பெயர்களைக் கொண்ட ஏதேனும் ஒரு அணி முதலிடத்தில் லட்சங்களை வென்றிருக்கும். கலந்துகொள்ளும் பல லட்சம் அணிகளுள், அத்தனை சாத்தியங்களையும் கொண்ட சில





ஆயிரம் அணிகளை இதை நடத்தும் நிறுவனங்களே இறக்கிவிடுகின்றனவோ எனும் சர்ச்சை இணையத்தில் இன்றும் பேசப்பட்டுவருகிறது.

பணம் வெல்வதைவிட இதில் கலந்துகொண்ட பின் கிரிக்கெட் பார்ப்பதென்பது பெரும் வாதை தரும் விஷயமாக மாறியிருக்கிறது. தேர்ந்தெடுத்த வீரர் நன்றாக விளையாட வேண்டும் என்று தொடங்கி, எதிராகப் பணம் கட்டியிருப்பவர் எடுத்திருக்கும் வீரர் விரைவில் அவுட்டாக வேண்டும் என்பது வரை ஒவ்வொரு நொடியும் மன அமைதியைக் குலைத்துவிடும். வெளிநாடுகளில் நடைபெறும் போட்டிகளில் பணத்தைக் கட்டி, போட்டி நடைபெறும் இரவுகளில் விழித்திருந்து உடல்நலனைக் குலைத்துக்கொள்பவர்களும் பெருகியிருக்கிறார்கள். அத்தனைக்கும் காரணம், பொழுதுபோக்குக்காக ஒதுக்கிய நேரம் காசாகிறது என்பதுதான்.


இத்தனை நாட்கள் பொழுதுபோக்காக இருந்தவற்றை இப்போது மன அமைதியைக் குலைக்கக்கூடிய விஷயமாக மாற்றியிருக்கின்றன ‘ஃபேண்டசி’ விளையாட்டுகள். மேலும் குடும்பம், வேலை போன்ற அன்றாடங்களையும் பாதிக்கிறது. வேலை நேரத்தில் இதுபோன்ற விளையாட்டு களில் நாம் எடுத்த புள்ளி களையும் நம் வெற்றிக்கான சாத்தியங்களையும் கணக்கிட்டுக்கொண்டே வேலையில் கவனமிழக்க நேரிடலாம்.

இன்னொருபுறம், இம்மாதிரியான ‘ஃபேண்டசி’ விளையாட்டுகளை இந்தியாவின் அடுத்த ‘ஸ்டாக் மார்க்கெட்’டாகப் பார்க்கிறார்கள். விளையாட்டைத் தொடர்ந்து பார்த்து ஒவ்வொரு வீரரையும் திறனாய்வு செய்து ஒரு அணியை உருவாக்கி, நமக்கு எதிராளியாக நம்மைவிட வலிமையற்றவராக இருப்பவரைத் தேர்ந்தெடுத்து தினமும் வெல்லும் ஒரு கூட்டமும் இருக்கிறது. இவர்கள் எப்போதும் ஒண்டிக்கு ஒண்டி என ‘ஸ்மால் லீக்’களில்தான் விளையாடுகிறார்கள். ஒரு நல்ல அணியை உருவாக்கிவிட்டு, நள்ளிரவுகளில் ஒரு இரையைத் தேடி இவர்கள்






காத்திருக்கிறார்கள். வலிமையற்ற ஒருவன் கிடைக்கும்போது அவனுடன் நேரடியான போட்டியில் இணைந்து வெற்றிபெறுகிறார்கள். இப்படி விளையாடும்போது அதிகபட் சமாக ஒரு




போட்டியில் 5,500 ரூபாய் கட்டி 10 ஆயிரத்தைச் சம்பாதிக்க முடியும். இதுபோல குறைந்தது மூன்று போட்டியிலாவது கலந்துகொண்டு, தினமும் 30,000—க்கு மேல் வெல்பவர்களை ட்விட்டர் வந்தால் அறிந்துகொள்ளலாம். ‘கிராண்ட் லீக்’களில் வெல்ல முடியாதென்பது இவர்களுக்கு நிச்சயமாகத் தெரியும்.

ஆரம்பத்தில் கிரிக்கெட்டுக்கென ஆரம்பிக்கப்பட்ட இவ்வகைப் போட்டிகள், இப்போது பார்வையாளர்களை அதிகம் இழுத்துக்கொண்டிருக்கும் கால்பந்து, கபடி என்று சாம்ராஜ்ஜியங்களை விரிவுபடுத்தியிருக்கின்றன. ‘ஸ்டாக் மார்க்கெட்’ போன்ற முதலீடுகளில் துணிந்து இறங்க முடியாததாக இருந்தாலும்கூட, கவனமுடன் இருந்தால் பணத்தை மொத்தமாக இழப்பதற்கான சாத்தியங்கள் குறைவு. குறைந்தபட்ச நஷ்டத்துடனாவது வெளியேறிவிட முடியும். ஆனால், இவ்வகை விளையாட்டுகளுக்குப் பழகியவர்கள் கடுமையான மனநெருக்கடிகளுக்கு ஆளாகி இறுதியில் வெறுங்கையுடனே திரும்புகிறார்கள்.

‘ப்ளூவேல்’, ‘மோமோ சேலஞ்ச்’ போன்றவை உயிரைக் குடிக்கும் விளையாட்டுகள் என்று சமூகத்தில் ஒருவித விழிப்புணர்வு பரவிவரும் நிலையில், இந்த மாதிரியான ‘ஃபேண்டசி’ விளையாட்டுகளின் மூலம் சமூகம் எதிர்கொண்டிருக்கும் இன்னல்கள், இழப்புகள் குறித்து இன்னும் பேசத் தொடங்கவில்லை. போன தலைமுறை எப்படி லாட்டரியில் ஐந்து நம்பர்கள் சரியாக வந்தால் லட்சாதிபதி ஆகிவிடலாம் என்று




நம்பிச் சீரழிந்தார்களோ, அதேபோல இன்றைய தலைமுறை இதைக் கையிலெடுத்திருக்கிறது.

நான்கு கோடிக்கும் மேற்பட்டவர்கள் தங்கள் தளத்தைப் பயன்படுத்துவதாகச் சொல்கிறது ‘டிரீம் 11’. ஒவ்வொருவரிடமும் சராசரியாக 10 ரூபாயை மட்டும் பெறுகிறது என்று வைத்துக்கொண்டாலே ஒரு போட்டிக்கு, ஒரு கிரிக்கெட் தொடருக்கு எத்தனை கோடி புழங்குகிறது என யோசித்துப்பாருங்கள். இது சர்வேதசப் போட்டிகள் என்று மட்டும் இல்லை, உள்ளூர் விளையாட்டுகளையும்கூட பொருட்படுத்தத் தொடங்கியிருக்கிறது என்பதிலிருந்து இதன் வீரியம் எவ்வளவு பெரிது என்பது வருத்தமளிக்கும் விஷயம். நாம் இழப்பது சிறிய தொகையாகத் தோன்றலாம். அதன் பின்னுள்ள நேர விரயம், மனஉளைச்சல் என இன்ன பிற இழப்புகளையும் யோசித்துப்பார்க்க வேண்டும்.



# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு


# 2018 CALENDAR

2018

JANUARY





FEBRUARY




MARCH




APRIL




MAY





JUNE





JULY




AUGUST




SEPTEMBER




OCTOBER





NOVEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | |

DECEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | 31 | | | | | |




அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com

editor@ithamil.com

# VARSHA™

Ready to Cook

Made with Quality Natural Products

**Idli / Dosa Wet Mix** • இட்லி / தோசை மாவு

ఇడ్లీ దోస పిండి • ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು

ഇഡ്ഡലി / ദോശ മാവ്



CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI



100% Pure Vegetarian

ઈડલી ડોસા નું ખીરું

इडली/ दोसा आटा